


கல்கி
KALKI
28.3.1971
40
காசு
சுழிக்காற்று
இந்த இதழில்
ஆரம்பம்
விஜயா

உருக்கு உற்பத்தியில் ஓர் அருமையான கலை



புத்தம் புதிய உத்திகள், கருத்துக்கள், பற்பல பரிசோதனைகளின் விளைவாக, நாங்கள் இரும்புக் கனியை வெவ்வேறு தேவைகளுக்கு ஏற்ப விதவிதமான உருக்கு வகைகளாக உருவாக்கித் தருகிறோம். உதாரணமாக:

பாலங்களுக்கு ஏற்ற உறுதியான 'ஹை டென்ஸைல்' உருக்கு. கப்பல், ரயில் வாகன், ட்ராலி பஸ் முதலியவற்றுக்கு ஏற்ற எளிதாய் 'வெல்ட்' செய்ய வல்ல துருப்பிடிக்காத உருக்கு.

பாதுகாப்புத் துறைக்கு ஏற்ற தோட்டா துளைக்க இயலாத கவசத் தகடு மற்றும் 'ஹை ஷீட்' உருக்கு.

விமானத்திற்கு அவசியமான க்ரோம் மாலிப்டினம் உருக்கு.

சமயம், ரேஸர் பிளேடுகளுக்கு ஏற்ற தரமான 'டூல்' உருக்கு.

அண்மையில், அமெரிக்காவின் தேவைகளுக்கு ஏற்ப, தனிப்பட்ட முறையில் தயாரிக்கப்பட்டு, ஏற்றுமதி செய்யப்பட்ட உருக்குப் பாளங்கள்.

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக, டாடா ஸ்டீலின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பரிசோதனைக் கூடங்கள், நம் நாட்டில் தனிப்பட்ட உருக்கை உருவாக்குவதில் முன்னோடிகளாகத் திகழ்கின்றன.

டாடா ஸ்டீல்


CHANDRIKA
AYURVEDIC SOAP

ராமு ஒரு மகிழ்ச்சியான விவசாயி


போன விளைச்சலில் கிடைத்த பணத்தில் அவர் **இந்தியன் பாங்கில்** ஒரு கணக்கை ஆரம்பித்தார்.

இந்தியன் பாங்கு அவருக்கு சிறந்த உரங்கள், விதைகள், கருவிகள் வாங்க கடனளித்து உதவியது. இன்று ராமு நவீன கருவிகளைக் கொண்டு விவசாயம் செய்யும் ஒரு வளம் பெற்ற விவசாயி. அவர் இன்று உண்மையாகவே
ஒரு மகிழ்ச்சியான மனிதர்.

நீங்களும் ராமுவைப்போல் ஆகலாம். அருகாமையிலுள்ள **இந்தியன் பாங்கில்** இன்றே ஒரு கணக்கை ஆரம்பியுங்கள்.

இந்தியாவில் 284 கிளைகளை உடையது





இந்தியன் பாங்க்

(இந்திய அரசாங்கத்திற்கு முழுவதும் உடமை)

தலைமை அலுவலகம்:
17, வடக்கு கடற்கரைச்சாலை,
சென்னை-1.

இந்தியன் பாங்கில் சேமித்து அதிக பயனடையுங்கள்.

NAS-180 TM


அடேயப்பா, வளர்ச்சியின் உச்சநிலை!
இப்படியொரு மகத்தான மாறுதலை
விளைவிக்கமுடியுமா ஒரு டானிக்?
ஆம், வளர்ச்சிக்கான
பசியை உங்கள்
குழந்தைக்கு
வளமுடன் வழங்குவது
இன்க்ரிமின் *
இன்க்ரிமின் டானிக் பிரத்தியேகமாகப் பசியைத் தூண்டி, வயிறார உண்ணும் மிகுதியான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றி, வாட்டசாட்டமாக வலுவோங்கச் செய்கிறது. சாப்பிடும் புரத சத்து அனைத்தையும் நன்கு பயன்படுத்திக்கொள்ள உதவுகிறது இன்க்ரிமின். நம் உணவில் இல்லாத ஒரு முக்கிய அமினோ அமிலம் செறிந்துள்ள டானிக். வளரும் வயதினிலே (4 வாரம் முதல் 14 வயது வரை) அன்றாடம் கொடுங்கள்! செர்ரிப் பழச் சுவை ததும்பும் இன்க்ரிமின். மறவாதீர்கள்!
இதுவே கண்கண்ட வளர்ச்சிப் பருவம், இன்க்ரிமின்* பருவம்
பெரிய குழந்தைகளுக்கு (இரும்புச் சத்து அடங்கிய) இன்க்ரிமின் சிரப்
இளம் குழந்தைகளுக்கு இன்க்ரிமின் டிராப்ஸ்
Incremin syrup
Incremin drops
Lederle
எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கின்றன.
உலகெங்கும் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு பெயராகிய லெடர்லீ தயாரிப்பது இன்க்ரிமின்.
லெடர்லீ டிவிஷன், ஸயானமிட் இந்தியா லிமிடெட், பி.ஓ. பாக்ஸ் 6577, பம்பாய்-18.
*அமெரிக்கன் ஸயானமிட் கம்பெனியின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.

எதிர்பாராத
விருந்தினர்களா?



மகிழ்ச்சியூட்டும்
நெஸ்கா:பே வழங்கி
அவர்களை
இனிய முகத்துடன்
உபசரியுங்கள்
—5 செகண்டில்
ஒருகப் தயார்!



முற்றிலும் சுத்தமான காப்பி—தென்னிந்திய
காப்பி விதைகளிலிருந்து தயாரிக்கப்பட்டது

நெஸ்கா:பே



உணர்ச்சி ஊட்டும் நெஸ்கா:பே
ஊக்கமளித்திடும் நெஸ்கா:பே!

ஒரு நெஸ்லெ தயாரிப்பு

NCE 6368

கல்கி

மார்ச் 28, 1971
சாதாரண, பங்குனி 14

பொருளடக்கம்

சிறுகதைச் சிறப்பிதழ்

சந்தா விவரம்:	ஒருவருடம்	ஆறுமாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கைநாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்



மலர் 30

இதழ் 35

பிரார்த்தனை

'இது வேண்டும்; அது வேண்டாம்' என்று ஆண்டவனைக் கேட்காதே. 'எல்லாம் உன் இஷ்டப்படி' என்று அவனுக்கு விட்டுவிடு. இவ்வாறு எல்லா சாஸ்திரங்களும் சொல்லியிருப்பது உண்மை. ஆயினும் மானிட ஜன்மத்தின் இயல்பு இதற்கு இணங்க முடியவில்லை. தொன்றுதொட்டு இதுவரையிலும் பிரார்த்தனை செய்துதான் வருகிறோம். எல்லாம் உன் அருள்; உன் பொருள் என்று வாயால் சொல்லி வந்தபோதிலும், உள்ளத்தில் எண்ணியும் பிரார்த்தித்தும் வரும் முறை, 'இதை எனக்குத் தா, அதை எனக்குச் செய்' என்றே நடந்து வருகிறது.

ஆண்டவனுடைய செயலும் பண்பும் நம் அறிவுக்கு எட்டாதபடியாலும், எது நன்மை, எது துன்பம் என்பதை நாம் சரியாக் முற்றிலும் அறிந்து கொள்ள முடியாதபடியாலும், எல்லாவற்றையும் அவனுக்கே விட்டு விடுவது மேலான முறை, இதில் சந்தேகம் இல்லை. ஆனபோதிலும் சேதனம் பெற்றிருக்கும் உயிர்கள், ஒருவரோடு ஒருவர் பேசிச் சம்பாஷணை செய்வது போல் ஆண்டவனிடமும் சம்பாஷிப்பதில் குற்றம் ஒன்றுமில்லை. அதுவே இயற்கைச் செயல். உள்ளத்தில் உள்ளதை ஆண்டவனிடம் சொல்லி விடுவதில் என்ன தவறு? ஒன்றுமில்லை. புருஷனும் மனைவியும் வாய் விட்டுப் பேசிக் கொள்வது போல் ஆண்டவனே சர்வ விஷயத்திலும் எஜமானனாயினும் பிரார்த்தனை மூலம் அவனோடு தாராளமாகச் சம்பாஷிப்பதில் குற்றமில்லை. நன்மையேயாகும். தினமும் ஒரு வேளையாவது ஈசனோடு பேசி, அழுது, விளையாடி, சம்பாஷித்து வருவோமானால் நம் உள்ளமும் பேச்சும் செயலும் துப்புரவு அடையும். பிரார்த்தனையின் பயனாக உள்ளம் அழுக்குத் தீர்ந்து சுத்தியடைகிறது என்பதில் ஐயமில்லை. இது அநுபவத்தில் அனைவரும் காணக்கூடிய உண்மை.

* * *

"பிரார்த்தனை எந்த முறையில் செய்ய வேண்டும்? மனத்தில் மௌனமாகச் செய்ய வேண்டுமா? அல்லது பிறர் கேட்கும்படி வாய் விட்டுச் செய்வதா?'' என்று ஒருவர் கேட்டதற்கு பகவான் ராமகிருஷ்ணர் சொன்னார்:

''எப்படி இஷ்டமோ அப்படிச் செய்யலாம். மெள்ள அழுதாலும் அவன் காதுக்கு எட்டும். சிற்றெறும்பின் காலடிச் சத்தம் கூட ஆண்டவன் காதுக்கு எட்டும்.''

''பிரார்த்தனை செய்வதனால் பயன் உண்டா?''

''மனமும் வாக்கும் ஒன்றுபட்டு உள்ளச் சுத்தியுடன் செய்யப்படும் பிரார்த்தனை கட்டாயம் பலன் தரும். வாயால் 'இவை அனைத்தும் உன் சொத்து' என்று சொன்னாலும், அப்படிச் சொல்லும் போதே இவையனைத்தும் எனது என்று எண்ணிக் கொண்டு பிரார்த்தனை செய்தால் பயன் அடைய முடியாது. பிரார்த்தனை செய்யும்போது உன்னை நீயே ஏமாற்றிக் கொள்ளாதே. ஆண்டவனிடம் பொய் சொல்லாதே. உள்ளமும் செயலும் ஒன்றாக இருக்க வேண்டும். சுத்த உள்ளத்துடனும் நல்ல சிந்தனையுடனும் பிரார்த்தனை செய். ஆண்டவன் மறுக்க மாட்டான். அவன் உன்னிடம் மிகப் பிரியம் கொண்டவன். காலத்தில் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்து விட்டு ஆண்டவன் பேரில் பாரம் போட்டுவிடு. எதற்கும் கவலைப்படாதே!''

* * *

கடலில் திசைகாட்டும் துருவ முள்ளைச் சரியாக வைத்துக் கொண்டிருக்கும் வரையில் கப்பலுக்கு அபாயமில்லை. காந்த முள் எப்போதும் துருவத்தை நோக்குவதைப் போல் மனம் இடைவிடாமல் ஆண்டவனை நோக்கியே நின்றால் வாழ்க்கை என்னும் கப்பல் கரையைப் போய்ச் சேரும்; பயமில்லை.

பாமரர்களும் மற்றவர்களும் பழைய முறையில் வழிபடும் மூர்த்திகளைப் பக்தியோடு உன்னால் வழிபட முடியாமலிருந்தாலும் கவலைப் படவேண்டாம். ''உனக்கு உருவம் உண்டோ இல்லையோ,

அது எவக்குத் தெரியவில்லே. உன் சொரூபம் எனக்கு விளங்கவில்லே. நான் அறியமாட்டேன். எவ்வாருயினும் எனக்கு அருள்வாய்'' என்று வேண்டிக்கொள்.

ஆண்டவன் உன்னை நிச்சயமாய்க் கவனிப்பான். மகனே, அவனைப் போல் உன்னைக் கவனிப்பார் யாருமே இல்லே. நீ அவனை வேண்டிக்கொண்டதெல்லாம் அவன் கவனித்தே இருக்கிறன். உனக்கு எது நன்மை என்பதை அவனே அறிவான். ஒரு நாள் உனக்கு நிச்சயமாகத் தரிசனம் தருவான். மரணத் தறுவாயிலாவது தரிசனம் தருவான். பிரார்த்தனை செய்வதை விடாதே. கஷ்டத்திலும் சுகத்திலும் சம்பாஷணைக்குத் தகுந்த நண்பன் அவனைப் போல் வேறு யாருமில்லே. பிரார்த்தனை என்பது சேதன உயிர்கள் ஆண்டவனேடு சம்பாஷிப்பதேயாகும்.

மக்கள் ஊமையாக இருக்க இயலாது. பக்தி நிறைந்த பிரார்த்தனை என்பது அந்த நியதிக்குள் அடங்கும்.

(பிரார்த்தனையைப் பற்றி பகவான் ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்ஸர் உபதேசம்)

ராஜாஜியின் கருத்துக்கள்

நடந்து முடிந்த தேர்தலில் பலவிதமான மோசடிகள் செய்யப்பட்டதாக ஏராளமான முக்கியஸ்தர்கள் சந்தேகம் கொண்டுள்ளனர். இன்றுள்ள சூழ்நிலேயில் நீதிமன்றத்துக்குத் திருப்தியளிக்கும் முறையில் மோசடியைக் கண்டுபிடித்து நிரூபிப்பது கடினம். ஆயினும் மிகப் பெரிய அளவில் மோசடியும் ஊழல்களும் நடந்திருக்குமேயாளுல், சர்க்காருக்குத் தேர்தல்களால் ஏற்படும் செலவையோ அல்லது வேறு காரணங்களேயோ முன்னிட்டு, தேர்தல் மோசடி பற்றிய தனது முடிவை உயர்நீதிமன்றம் அமுல் செய்யாமல் இருந்துவிடக் கூடாது.

✶

ஸ்ரீ க. சந்தானம் கூறுவதாவது:

சமீபத்துத் தேர்தல் முடிவுகளிலிருந்து எழுந்துள்ள ஒரு முக்கியமான விஷயம், பழைய காங்கிரஸ், சுதந்திரக் கட்சி, ஜனசங்கம் முதலிய கட்சிகளின் எதிர்காலம் பற்றியதாகும். அவை இப்போது இயங்கும் விதத்திலேயே நீடிப்பதில் எவ்வித நோக்கமும் இல்லே, பொருளும் இல்லே என்பது வெளிப்படை. அக்கட்சிகள் தமது தனிப் பெயர்களே விட்டு, தங்களுக்குள் ஒரு விசாலமான அடிப்படையில் பொதுத் திட்டம் வகுத்துக் கொண்டு, ''இந்திய ஜனநாயகக் கட்சி'' என்பது போன்றதொரு பெயரில் ஒரு புதிய கட்சியாக அமைய வேண்டும். இக்கட்சிகள் உரிய துணிவினைப் பெற்று இவ்விதம் ஒரே புதிய கட்சியாக உருவானுல் அவை தங்களுக்கும் தேசத்துக்கும் மகத்தான பணி புரிந்தவையாகும். இதைச் செய்ய இயலுமாயின் இக்கட்சிகள் தேர்தலில் அடைந்த தோல்வியிலிருந்தே தேசத்துக்குப் பெரும் லாபம் கிட்டியதாகும்.

ஸ்ரீ சந்தானம் கூறும் யோசனையைக் காரியமாக்குவதற்கு, மிகுந்த உழைப்பு தேவை. 1920-ல் மகாத்மா காந்தி காங்கிரஸைப் புனர்நிர்மாணித்த போது மக்களிடையே எவ்வளவு கடும் பணி புரிய வேண்டியிருந்ததோ அவ்வளவு செய்தாக வேண்டும். பார்லிமென்டிலும், சட்டசபைகளிலும் செய்வது மட்டுமின்றி அவற்றுக்கு வெளியே மக்களிடையே பெரிய பணி செய்ய வேண்டும்.

ஏற்கனவே எதிர்க் கட்சிகளை ஒன்ருக இணைப்பதற்குச் செய்த முயற்சிகள் வியர்த்தமாகிவிட்டன. இன்று பார்லிமெண்ட் அமைந்துள்ள நிலேயில் இந்த முயற்சிகளே மீண்டும் மேற்கொள்வது பொருந்தாது. எனவே, ஸ்ரீ சந்தானத்தின் யோசனையைச் சிறிது மாற்றிச் சொல்கிறேன்: இன்றையத் தேவை பழைய கட்சிகளேக் கலேப்பதோ, புது கட்சியை அமைப்பதோ அல்ல. 'அரசியல் சாஸனம் அளிக்கும் அடிப்படை உரிமைகளேக் காப்பது; நாட்டில் யதேச்சாதிகாரம் ஏற்படாமல் தடுப்பது; ருஷிய அல்லது சீன கம்யூனிஸ சாம்ராஜ்யத்துக்குள் இந்தியா அடக்கமாகி விடாமல் காப்பது' — இவற்றை இலட்சியமாகக் கொண்டு, எதிர்க்கட்சிகள் ஒரு தேசிய ஜனநாயக சங்கமாகக் கூட்டு முயற்சி செய்ய வேண்டும். தேசமெங்கிலும், நகர்ப்புறம், கிராமப்புறம் அனைத்திலும், குழுக்கள் அமைத்து அடிப்படை அங்கத்தினர்கள் சேர்க்க வேண்டும். ஜனநாயக முறையைக் காப்பாற்ற வேண்டும் என்பதே முக்கிய லட்சியம். சமீபத்துத் தேர்தலில் நேர்ந்த அரசியல் விபத்து காரணமாக எல்லா எதிர்க் கட்சியினரின் இதயமும் அடிபட்டுச் சுத்தம் அடைந்திருக்கும். அதுவே இவ்விதம் ஜனநாயகத்தைக் காக்கும் பொருட்டு, ஒன்று சேர்ந்து முயற்சி எடுக்க உதவி புரியும்.

இனி வேலே நடக்க வேண்டியது மக்களிடையே ஆகும். நம் இளைஞர்களும், யுவதிகளும் நல்ல தேசப் பற்று உள்ளவர்கள். இடைக்காலத் தேர்தலில் விளேந்த விபரீதத்தை அறவே அகற்றுவதற்காக அவர்கள் தம் சக்தியை எல்லாம் செலுத்த ஆர்வத்துடன் இருக்கிருர்கள். ஐம்பதாண்டுகளுக்குமுன் காந்தியடிகள் தந்த உத்வேகத்தில் இளைஞர்களும் யுவதிகளும் எப்படி எழுச்சி பெற்றுப் போராடினர்களோ, அப்படிப் போராடுவதற்கு இன்றைய இளம் தலேமுறையினர் ஆர்வத்துடன் இருக்கிருர்கள். மகாத்மாஜியின் தலேமையில் பிரிட்டிஷ் ராஜ்யத்தை எப்படி எதிர்த்துப் போராடினேமோ, அது போல இன்று யதேச்சாதிகாரத்தை எதிர்த்து நாம் போராடவேண்டும்.

✶

இந்த இடைத் தேர்தலில் தி. மு. க. பெற்ற மொத்த வோட்டுக்கள் 76 லட்சம். பழைய காங்கிரஸும் சுதந்திரக் கட்சியும் பெற்ற வோட்டுக்கள் 59 லட்சம். அதாவது வெற்றி பெற்ற ஸ்தானங்களேப் பார்க்குமிடத்து தி. மு. க.வுக்கு 183 ஸ்தானங்களும்,

பழைய காங்கிரஸ், சுதந்திரக் கட்சி இரண்டுமாக 21 ஸ்தானங்களுமே பெற்றிருப்பினும், இந்த எதிர்க்கட்சிகள் மொத்த வோட்டில் பெற்றுள்ள சதவிகிதம் மிக மிக அதிகம். அவை பெற்றுள்ள ஓட்டுக்களின் எண்ணிக்கையைப் பார்க்கையில் அவை பெற்றுள்ள ஸ்தானங்களின் எண்ணிக்கை பொருத்தமற்றதாய் உள்ளது. அநேகமாக ஒவ்வோர் இடத்திலும் தி. மு. க. சிறிதளவே அதிக வாக்குப் பெற்று ஜெயித்திருக்கிறது. இவ்விதமாகச் சிறிதளவு கூடுதல் வாக்குகளையே 183 ஸ்தானங்களிலும் பெற்றிருப்பது விசேஷ கவனத்துக்குரியது. இதனால்தான் தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கானவர்கள் இத்தேர்தலில் ஏதோ ஒருவித மோசடி நடந்திருக்க வேண்டும் என்றும், திட்டவட்டமாக சூழல் செய்திருக்க வேண்டும் என்றும் ஐயம் கொண்டுள்ளனர்.

★

அஹிம்சா மார்க்கத்திலேயே ஜுஜுப் முஜிப் - உர் - ரஹ்மான் புரட்சி ஏற்படுத்தியிருப்பதில் ஸ்ரீ ஜயப்பிரகாச நாராயணர் பரவசம் அடைந்திருப்பது இயல்பே. மேற்குப் பாகிஸ்தானத்தின் ஆதிக்கத்தை எதிர்த்துக் கிழக்கு வங்காளம் கிளர்ந்து எழும் என்று லார்ட் மவுண்ட்பேட்டன் அவர்கள் என்னிடம் பொறுப்புத் தந்தபோதே நாங்கள் இருவரும் எதிர்பார்த்தோம்! இப்படி எதிர்பார்த்ததற்கு வெளிப்படையான காரணங்கள் உண்டு. சக்தி வாய்ந்த முறையில் அஹிம்சை ரீதியில் வழிகாட்டி ஒரு கிளர்ச்சியை நிர்வகிப்பது போற்றுதலுக்கு உரியது தான். எனினும், அதே போதில் மகிழ்ச்சி யூட்டாத இன்னொரு சிந்தனையும் எழுகிறது — அதாவது, சமயம் பார்த்து இந்தச் சச்சரவில் கம்யூனிஸ்ட் சீனம் பிரவேசிப்பதற்குச் சாதகமாகச் சம்பவங்கள் உருவாகிவிடலாம். சீனம் இவ்விதம் செய்யுமாறு அதற்கு நன்ருகச் சபலமூட்டும்விதமாக இருக்கிறது இன்றைய மேற்கு வங்க நிலவரம்.

கடைசியாகக் காணும் நிலவரப்படி, கிழக்குப் பாகிஸ்தானில் ஜுஜுப் முஜிப் - உர் - ரஹ்மான் ஆற்றிவரும் மகத்தான பணி மேற்குப் பாகிஸ்தானுடன் அமைதிகரமான உடன்படிக்கையிலேயே முடியும் என்று தோன்றுகிறது; பாகிஸ்தானில் பிளவு ஏற்பட்டு, 'வங்காள தேசம்' என்று தனி சுதந்திர ராஜ்யம் ஏற்படாது என்றே எண்ணத் தோன்றுகிறது.

★

குதிரை ஓடிவிட்ட பிறகு லாயத்தைப் பூட்டி வைப்பது என்பது புதிதல்ல. தேர்தல்கள் நேர்மையாக நடந்தனவா என்பது குறித்துத்தேர்தல் கமிஷன் இப்போது சந்தேகம் கொண்டிருப்பது இதைத்தான் நினைவூட்டுகிறது. நாட்டில் பரவலாகக் கூறப்பட்ட குற்றம் குறைபாடுகளைக் கவனிக்கத் தேர்தல் கமிஷன் எடுத்துக் கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் காலம் கடந்ததாக இருந்தாலும், நல்லதொரு போக்கையே காட்டுகின்றன. யு. என். ஐ. செய்திகள் இதுபற்றிக் கூறுவதாவது:

புதுடில்லி, மார்ச் 19—

"இனி வரும் தேர்தல்களுக்கு வாக்குச் சீட்டுகளை அடிக்கட்டையுடன் (counterfoil) அச்சிடுவதுபற்றித் தேர்தல் கமிஷன் யோசித்து வருகிறது. ஆட்சேபம் எழும்போதோ, அல்லது பரிசீலனை அவசியம் என்ற கோரிக்கை எழும்போதோ, நீதிமன்றத்தில் அடிக்கட்டைச் சீட்டையும் பதிவான சீட்டுக்களையும் ஒத்திட்டுப் பார்க்க இது உதவும். வாக்குச் சீட்டுக்கள் வாக்காளர்களுக்கு வழங்கப்படும்போது, சீட்டின் அடிக்கட்டையில் அவர்களுடைய கையெழுத்தையோ பெரு விரல் முத்திரையையோ, தேர்தல் அதிகாரிகள் பெற்றுக் கொள்வார்கள். இந்த மறு பாதிச் சீட்டுக்கள் பத்திரமாக "சீல்" போட்டு, பதிவான சீட்டுகளுடனும், இதர தேர்தல் காகிதங்களுடனும் பாதுகாத்து வைக்கப்படும்.


"இந்த ஆலோசனை மார்ச் 27ந் தேதி நடக்கவிருக்கும் தேர்தல் அதிகாரிகள் மகாநாட்டில் விவாதிக்கப்படும்."


புதுடில்லி, மார்ச் 19—

"எல்லா ராஜ்யங்களின் பிரதம தேர்தல் அதிகாரிகளையும் மத்திய அரசின் நேரடி நிர்வாகத்திலுள்ள பிரதேசங்களின் தேர்தல் அதிகாரிகளையும் கடந்த தேர்தல் பற்றிப் பரிசீலனை செய்வதற்காக மார்ச் 27ந் தேதி புதுடில்லிக்குத் தேர்தல் கமிஷன் அழைத்திருக்கிறது. தேசிய பிரதம தேர்தல் கமிஷனர் திரு ஸென் வர்மா, அவர்களுடைய அனுபவங்களையும், இன்னல்களையும் அதற்காக அவர்கள் கூறும் பரிகாரங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளுவார். இப்போதிருந்து வாக்காளர் பட்டியலை ஒழுங்குபடுத்த நடவடிக்கைகளைக் கமிஷன் எடுத்துக்கொள்ளும். சில தொகுதிகளில் வாக்காளர் பட்டியலிலிருந்து பெருவாரியாகப் பெயர்கள் நீக்கப்பட்டன, சேர்க்கப்பட்டன என்ற புகார்களைக் கருத்தில் வைத்து, வாக்காளர் பட்டியலைச் சரிவரப் புதுப்பிக்கத் தேர்தல் கமிஷன் எல்லாத் தேர்தல் அதிகாரிகளுக்கும் உத்தரவுகள் பிறப்பிக்கும்."

வாக்காளர்களின் பெயர்கள் தவருகச் சேர்க்கப்பட்டதையும், நீக்கப்பட்டதையும் மிகத் தெளிவாகத் தமிழ்நாட்டு வாக்காளர் பட்டியலில் காணலாம். விலை கொடுத்து வாங்கக்கூடிய வாக்காளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்காக இக்காரியம் வேண்டுமென்றே செய்யப்பட்டதாகும் என்பதை யாரும் எளிதில் புரிந்து கொள்ளலாம். ஆகவே, இது சம்பந்தமாக நியமிக்கப்படவிருக்கும் ஆராய்ச்சி கமிஷன் பொதுமக்களின் நம்பிக்கையைச் சிறிதளவேனும் பெற வேண்டுமானால், கமிஷன் அங்கத்தினர்களில் தேர்தல் அதிகாரிகளுடன் சுயேச்சை மனோபாவமுள்ள ஒரு நீதிபதியாவது இருத்தல் அவசியம்.

இந்த உள்ளம்





சிரீஷ்பை

ரமேஷுக்கு அந்தக் கடிதம் வந்தது....

அவனுக்கு வியப்பாக இருந்தது, மகிழ்ச்சியாக இருந்தது, மிக்க அச்சமாகவும் இருந்தது. இத்தகைய கடிதம் அவனுக்கு ஆயுசிலும் வந்ததில்லை. இப்படி எழுதுகிறவர் யாரும் அவனை வாழ்வில் சந்தித்ததில்லை. நண்பர்களின் பரிகாசக் கடிதங்களும், உறவினரின் வெறும் க்ஷேமக் கடிதங்களுமே இன்று வரை வருவது வழக்கம்.

ஆனால் இந்த அற்புதக் கடிதம்! யந்திர வாழ்வில் திடீரென்று அதிர்ச்சியூட்டும் கடிதம் இது. உண்மையில் இம்மாதிரி கடிதங்களைத்தான் மாந்தர் எதிர்பார்க்கின்றனர். ஆனால் இத்தகைய கடிதம் எப்போதாவதுதான் வரும்; பெரும்பாலும் வருவதே இல்லை.

ஆமாம், இப்படி இரகசியக் கடிதம் ஒன்று ரமேஷுக்கு வந்திருந்தது. ஆபிஸிலிருந்து வந்ததுமே, அம்மா அதை அவனிடம் கொடுத்தாள். உறை மேல் இருந்த எழுத்து, அவன் முன்பு பார்த்திருந்ததாகத் தெரியவில்லை; ஆனால் எங்கோ பார்த்தாற் போலவும் இருந்தது. சிறிது கோணல், சிறிது குட்டையான எழுத்து. ரமேஷ் வழக்கமாக எழுதும் நீலக் கறுப்பு மையில், முகவரி தவறின்றி இருந்தது. ஆனால் அது இயல்பாக எழுதியதாக இல்லை; வேண்டும் என்றே கிறுக்கினாற்போல் இருந்தது. உறையைப் பிரிக்காமலே கடிதத்தைப் பாண்ட் பையில் செருகிக் கொண்டு, அவன் சமையல் அறைக்குள் டீ குடிக்கச் சென்றான்.

''யாருடைய கடிதம்டா ?'' என்று அம்மா கேட்டாள்.

உண்மையைச் சொல்ல அவனுக்குத் துணிவில்லை. ''எவனோ ஒரு நண்பன் !'' அவன் தயங்கியபடியே சொன்னான்.

அம்மா டீ வடிகட்டுவதில் முனைந்திருந்தாள். தங்கை வெல்ல அடையைத் தட்டி விட்டுக் கொண்டு வந்தாள்.

''வேண்டாம் எனக்கு.'' — அவன் தட்டை நகர்த்திக் கொண்டே சொன்னான். உறையை அவன் இன்னும் உடைக்கவில்லை; கடிதத்தைப் படிக்கவில்லை; அதில் இருந்த கருத்து அவனது உள்ளத்தை எட்டவில்லை; ஆனால் உறையைக் கண்டதுமே, கடிதத்தில் ஏதோ இரகசியம் இருக்க வேண்டும் என்று அவன் உறுதியாக நம்பினான். இந்த மன நிலையில் உண்ணத் தோன்றுமா? அவன் தட்டை ஒதுக்கியதுமே, தங்கையின் கண்ணில் நீர் துளித்தது; ''அண்ணா, சாப்பிடுடா. உனக்காக இன்று அடை தட்டியிருக்கிறேன்'' என்று தழுதழுத்தாள் தங்கை.

அவள் மனம் நோவாமலிருக்க, அவன் ஒரு துணுக்கை விண்டு எப்படியோ விழுங்கினான்; சூடான டீயை அவசர அவசரமாகக் குடித்தான். தங்கையின் கை இளைத்திருக்கிறது; நாளுக்கு நாள் அவள் ஒல்லியாகி வருகிறாள்! அவளுக்கு விரைவிலேயே திருமணத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்....

அவன் படக்கென்று மணையிலிருந்து எழுந்தான். வீட்டில் நுழைந்தாலே, குடும்பப் பொறுப்பு அவன் எதிரில் பிசாசாகத் தலை விரித்து நிற்கிறது. வெறுத்துப் போய், அவன் தாழ்வாரத்துக்கு வந்தான். அவனை அறியாமலே, கை பாண்ட் பைக்குள் சென்றது. கடிதத்தைத் தொட்டுப் பார்த்தான். படிக்கலாமா? படித்தே விடலாமா? அதைப் பிரிக்கும் வரையில் உள்ள ஆர்வம், பரபரப்பு, அலைக்கழிப்பு, இலேசான அதிர்ச்சி ! அவன் அதைவிரல்களால்நெருடியபடியேஇருந்தான்.

வேலையிலிருந்து களைத்து வந்ததும், வீட்டில் எப்போதாவது ஒரு கடிதம் அவன் வரவை எதிர்பார்த்துக் கிடக்கும். ''உனக்கும் கடிதம் வந்திருக்கிறதடா!'' என்று அம்மாவோ தங்கையோ சொல்வார்கள். அதைக் கேட்டதுமே அவன் அதிர்ந்து நிற்பான்; இதயத் துடிப்பு தெளிவாகக் கேட்கும்; உடல் முழுவதும் இரத்தம் வெப்பமாகப் பரவும். அவன் சிறிது அச்சத்துடன் கடிதத்தை வாங்குவான்; பழக்கமான எழுத்தைக் கண்டதுமே ஏமாற்றமுறுவான். எப்போதும் இப்படித்தான். இதற்கு முடிவு ஏற்பட வேண்டும். அவன் எதிர்பார்க்கக்கூடிய ஏதாவது கடிதம் வரவேண்டும். அற்புதமான, புதுமையான கடிதம் ! அன்றாட வாழ்விலிருந்து வேறுபட்ட, ஆனால் தினசரி வாழ்வுடன் பிணைந்த கடிதம் ஒரு முறை வரத்தான் வேண்டும் ! ஆனால் அதை யார் எழுதுவார்கள் ?

அவனுக்குத் தெரிந்து அப்படி எழுதுகிறவர் யாருமில்லை. ஆயினும் அவன் அதை எதிர்பார்த்தான். அவன் மிகவும் விரும்பி வேண்டிய அந்தக் கடிதம் இப்போது வந்திருந்தது!

ரமேஷ் மெதுவாக வீட்டிலிருந்து புறப்பட்டுச் சாலையைக் கடந்து, ஆறு தெருக்கள் கூடும் சந்திக்கு வந்தான். தெருக்கள் சந்திக்கும் இடத்தில், நடுவே ஓர் அழகிய சிறு பூங்கா. அதன் நடுவில் நீரூற்று. ஊற்று நீர் ஆயிரமாயிரம் பனித் துளிகளைச் சிதற வைத்

தது. மறையும் கதிரவனின் கதிர்கள் அந்தத் துளிகளில் ஊடுருவி, ஏழு வண்ண ஒளியங்களைப் படைத்தன. பூங்காவிலிருந்த உயரமான அசோக மரங்கள், மங்கிய மெல்லொளியில் . தனியே அசையாமல் நின்றன.

ரமேஷ் புல்வெளியில் ஒரு பக்கமாக அமைதியுடன் அமர்ந்தான்; நாலுபுறமும் பார்வையை ஓட்டினான். இன்னமும் அவன் கடிதத்தைப் பிரிக்கவில்லை. ஆர்வம் எல்லையைக் கடந்தது. அவன் வெகுநேரம் பொறுத்தாயிற்று. இனி உறையைக் கிழிக்க வேண்டியதுதான். உறையின் கோடியை அவன் இலேசாகக் கிழித்தான்; வாயினால் ஊதி, அதை இரு பிரிவாக்கினான். மெல்ல மெல்ல அந்தக் கடித மடிப்பை உறையிலிருந்து எடுத்தான். ஒரு பெருமூச்சு எழுந்தது. கடிதத்தை இனிப் படிக்க வேண்டியதுதானா? படித்து விடலாம்!

உள்ளத்தில் பொங்கி வந்த வேகத்தை அடக்கிக் கொண்டு, அவன் படித்தான் —

ரமேஷ்,

இன்று முதன் முதலாக உங்களுக்கு எழுதுகிறேன். என் ரமேஷுக்கு நான் எழுதும் முதல் கடிதம். எவ்வளவோ அழகிய காகிதத்தில் இதை எழுதியிருக்க வேண்டும். சகுந்தலை துஷ்யந்தனுக்குத் தாமரை இலையில் எழுதினாளாம். நான் எங்கிருந்து தாமரை இலையைக் கொண்டு வருவது? அழகிய பேனாவாக, அன்னப் பறவையின் மென்சிறகை எங்கிருந்து கொணர்வது? இந்தக் கடிதத்தில் ஒரு துளி அத்தரைத் தெளிக்கவில்லை. ஆனால் என் இரண்டொரு கண்ணீர்த் துளிகள் எங்காவது சிந்தியிருப்பதைக் காண்பீர்கள். அவற்றைத் தேடிக் கண்டுபிடிப்பீர்களா?

உங்கள் வரவை வெகு நேரம் எதிர்பார்த்தேன், ரமேஷ். அடிவானம் வரையில் கண்ணை நெட்டுக் கொண்டு பார்த்தபடி இருந்தேன்; நீங்கள் வரவேயில்லை. என்ன இருந்தாலும் நான் பெண்; நானாக எப்படி உங்களிடம் வருவது? ரமேஷ், நீங்களே தான் என்னிடம் வரவேண்டும். ஆமாம், நீங்கள் வர வேண்டும். ஆனால் நீங்கள் வரவில்லையே. கடைசியாக உங்களுக்குக் கடிதம் எழுதுகிறேன். இது வந்த செய்தியாவது தெரிவிப்பீர்களா? நீங்கள் எப்போதுதான் வரப்



போகிறீர்கள் என்பதையும் தெரிவியுங்கள்! கட்டாயம் நீங்கள் வருவீர்கள்; எனக்குத் தெரியும். உங்கள்,

★★

இவ்வளவுதான்! கடிதத்தில் முகவரி இல்லை, கையெழுத்தும் இல்லை. கடிதம் வந்த தகவல் தெரிவிக்க வேண்டுமாம்! எப்படித் தெரிவிப்பது? எங்கே? யாருக்கு? தெரிவிக்கத்தான் வேண்டும்; இல்லையென்றால் வருந்துவாள். அவள் யார்? எப்படி இருப்பாள்? பெயர் என்ன? வெறுமே இரண்டு நட்சத்திரங்கள்! அதாவது, உஷா? சுதா? மீனு? சே! இப்படி நாகரிக உல்லாசப் பெயர்கள் அவனுக்குப் பிடிக்காதவை. பின்னே, அவள் பெயர்? உமா? சீதா? கோதை? அவனை எங்காவது பார்த்திருக்கிறாளோ? அவள் இவனைக் கட்டாயம் பார்த்திருக்கிறாள்; பார்த்துக் கண்ணுக்குள் வைத்திருக்கிறாள்; தன் மனம் முழுவதையும் இவனுக்குத் தந்திருக்கிறாள். அவள் சொன்னது இது. துயர உணர்வை அவள் தூய கண்ணீராகச் சிந்தியிருந்தாள்.

ரமேஷ் நெஞ்சார இதை உணர்ந்தான். இனி இவன் அவளைக் கண்டு பிடிக்க வேண்டும். அவளைத் துன்புறுத்தும் பாவத்துக்கு இவன் ஆளாகக் கூடாது.



மராட்டி ஆசிரியை சிரீஷ்பை பூனாவில் 15-11-29 பிறந்தவர். மராட்டி இலக்கியத்தில் சிறந்த பெண்ஆசிரியைகளிலே இவருக்குத் தனி ஓர் இடம் உண்டு. இரண்டு நாவல்கள், ஏழு கதைத் தொகுதிகள் மூன்று கவிதைத் தொகுதிகள், ஒரு கட்டுரைத் தொகுதி இதுவரை வெளி வந்துள்ளன.

மகாராஷ்டிர மாநிலத்திலும் திருமணம் எப்படிப் பிரச்னை வாய்ந்ததா யிருக்கிறது; ஓர் ஆணுக்கு ஒரு பெண் கிடைப்பதோ ஒரு பெண்ணுக்கு ஓர் ஆண் கிடைப்பதோ எத்தனை அரிதா யிருக்கிறது; என்பதைச் சித்திரிப்பதுடன், ஆசிரியை எட்டாப் பொருளை எட்டிப் பிடிக்க முயலும் மனத்தின் விந்தைச் செயலை எப்படி ஹாஸ்யம் மிளிர விளக்குகிறார், பாருங்கள்!

புடன் அவளைப் பார்ப்பான்; உடனே அவள் வாயை மூடிக் கொள்வாள். தங்கை அவனைப் பரிதாபமாகப் பார்ப்பாள்; அந்தப் பார்வையில் ஏக்கத்துடன் ஏதோ நம்பிக்கையும் இருக்கும். அவன் மௌனமாகத் தலை குனிந்து கொண்டு எழுந்து போவான். தினமும் எழுந்து உழைக்க வேண்டியது; நாலு கவளத்தை வயிற்றில் திணித்துக் குறட்டை விட்டு உறங்க வேண்டியது. இதுதான் சிறந்தது; இதில் தான் பெரிய சுகம் இருக்கிறது!

அவன் வீட்டுக்கு வந்ததுமே, ''இன்று என்னடா இவ்வளவு நேரம்? எங்கே போயிருந்தாய்?'' என்று தந்தை கேட்டார்.

அவன் தன் சிந்தனையிலேயே மூழ்கி யிருந்தான்; இன்று வாழ்வைப் பற்றிய கவலை அவனுக்கு இல்லை. தினமும் அவனை வாட்டும் தொல்லை, கடிதம் தந்த இன்பலாகிரியில் மறைந்து விட்டது. இன்று இந்த ஒரு கடிதமே போதும். இன்று என்ன? பல நாளைக்குப் போதும். அவனுக்கு இப்போது பசி தாகம் இல்லை. தினமும் போலப் படுக்கையில் உருண்டதுமே தூக்கம் வரும் நிலையும் இல்லை.

தெளிவற்ற ஒளிதான் அது; ஆனால் எதிர்காலத்தை அது ஒளி மயமாக்கியது. ஒவ்வொரு மூச்சுக்கும் இனிப் பொருள் உண்டு. தெருவில் அவன் எதையும் சட்டை செய்யாமல் ஒய்யாரமாக நடக்கலானான். எங்கே இருக்கிறாள் அவள்? எங்கே சந்திப்பான்? எப்படி? எப்பொழுது?

இந்தச் சிந்தனை மயக்கத்திலேயே அவன் வீடு திரும்பினான். களைத்துப் போன கிழத் தந்தை வாசலில் அவனை எதிர்பார்த்து நின்றிருந்தார். இப்போது அவரால் வேலை செய்ய முடியவில்லை. குடும்பச் சுமை முழுவதும் ரமேஷின் தலையில் மட்டும் விழவேண்டாம் என்று, அவர் தபாலாபீஸ் வாசலில் உட்கார்ந்து எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்குக் கடிதம் எழுதிக் கொடுக்கிறார், வந்த கடிதங்களைப் படித்து உதவுகிறார். கிழிந்த சட்டையை மாட்டிக் கொண்டு, குச்சியாக வளர்ந்த வெள்ளைத் தாடியைச் சொறிந்து கொண்டே, அவர் காலையிலேயே வெளியே போகிறார். பெரிய பெண்ணுக்குத் திருமணம் ஆக வேண்டும். நாலு பிள்ளைகளும் இரண்டு பெண்களும் படிக்க வேண்டும். விலைவாசியோ நாளுக்கு நாள் ஏறுகிறது. வாழ்வதே மனிதனுக்குச் சாபமாகியிருக்கிறது. பாவம்! ரமேஷ் ஒருவனாக எவ்வளவு பளுவைத் தாங்கிக் கொள்வான்?

இளம் வயதில் அவன் தலை நரைக்க ஆரம்பித்திருக்கிறது. பார்க்கப் போனால், அவனுக்கே கல்யாணம் நடக்க வேண்டும். ஆனால் அவன் தன் மணத்தைப் பற்றிப் பேசவிடுவதில்லை. அம்மா எந்தப் பெண்ணைப் பற்றியாவது பேச்செடுத்தால் அவன் வெறுப்

ரமேஷ் கற்பனை அலைகளில் மிதந்தான். அலை மேல் அலை வந்து அவனை எழும்பச் செய்தது. ஆயிரக் கணக்கான பேர் தெருவில் சென்றார்கள். அந்த ஆயிரவரின் நடுவே, அவன் அவளைத் தேட முயன்றான். சிரித்து வணக்கம் கூற எண்ணினான். அவளிடம் என்ன பேசலாம்? சே! ஒன்றுமே தோன்றவில்லை. இருவரும் ஒரே கிளாஸில் குளிர் பானம் அருந்துவார்கள். எங்கே? எங்கே? அவனது தோளில் தன் தலை இலேசாகப் படும்படி அவள் சாலையில் நடப்பாள்; ஓயாமல் சிரித்துப் பேசுவாள். இருவரும் நடந்து கொண்டே இருப்பார்கள். உலாவியபடி வெகு தூரம் போவார்கள். எப்பொழுது? எப்பொழுது?

இந்த இன்ப அலைகளிலேயே நாட்கள் கடந்தன அதற்குள் இன்னொரு கடிதம்வந்தது:

அன்புள்ள ரமேஷ்,

என்ன கல் நெஞ்சம் உங்களுக்கு! என் கடிதத்துக்குப் பதில் இல்லையே? என்னைப் பார்க்க

இப்பொழுது உங்களுக்கு வேண்டியமட்டும் நீங்கள் விரும்பும் வழியில் சேமியுங்கள்!

தேனு பாங்க் உங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்ய 2 புதிய சேமிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்துகிறது.

மாதாந்தர சேவிங்ஸ்-கம்-ஆன்யுவிடி திட்டம்

இது பல்லாண்டுகள்வரை உங்களுக்கு மாதவருமானம் தரக்கூடிய தவணைமுறைச் சேமிப்புத் திட்டமாகும்! 24, 36, 48 அல்லது 60 மாதங்களுக்கு மாதம் ரூ. 10/- அல்லது அதன் மடங்குகளில், சேமித்து, 13, 20, 28 அல்லது 37 மாதங்களுக்கு உங்கள் மாதாந்தர சேமிப்புத் தொகையைப் போல இருமடங்கு தொகையை மாதாமாதம் திரும்பப் பெறுங்கள். இந்தத் திட்டத்தின் மூலம் உங்களுக்குக் கணிசமான கூட்டு வட்டி கிடைக்கிறது. உங்கள் பென்ஷன் திட்டங்களுடன் அல்லது வேறு காரியங்களுக்கு சிறந்ததொரு அதிகப்படி சேமிப்புமுறை இது.

மல்ட்டி-பர்ப்பஸ் (பல பயன்) டெபாஸிட்டுத் திட்டம்

உங்கள் மாதச் சம்பளத்தைப் போலவே உத்தரவாதமான மாத வரும்படியைத் தரக்கூடிய திட்டம். ரூ. 3,000/- (அல்லது அதன் மடங்குகளை) 3 வருடங்களுக்கு டெபாஸிட் செய்யுங்கள்; மாதம் ரூ. 16.25 அல்லது அதன் மடங்குகளில் 3 வருடங்களுக்கு ஒவ்வொரு மாதமும் வட்டி பெறுங்கள். உங்கள் டெபாஸிட் தொகை அப்படியே இருக்கும். இந்த வருமானத்தை உங்கள் குழந்தைகளின் படிப்புச் சம்பளம் கட்டவோ, இன்சூரன்ஸ் பிரீமியம் செலுத்தவோ, மாத வீட்டுச் செலவுக்கு ஈடு செய்யவோ உபயோகியுங்கள்.

விவரங்களுக்கு உங்கள் அருகாமையிலுள்ள தேனு பாங்க் கிளைக்கு விஜயம் செய்யுங்கள் அல்லது எழுதுங்கள்.

இதர தேனு பாங்க் சேமிப்புத் திட்டங்கள்:

சேவிங்ஸ் அக்கவுண்ட் 4% வட்டி

வயது வராதோர் சேமிப்புத் திட்டம்.......4% வட்டி

ஃபிக்ஸெட் டெபாஸிட்டுகள்........4½% முதல் 7½% வட்டி

ரெக்கரிங் டெபாஸிட் திட்டம்....................5½% முதல் 7% கூட்டு வட்டி

உங்கள் சேமிப்புகள் உங்களுக்குப் பாதுகாப்பளிக்கின்றன. உங்கள் சேமிப்புகள் தேசிய முன்னேற்றத்திற்கு வழிவகுக்கின்றன.

தேனு பாங்க்

தலைமை அலுவலகம்: தேவ்கரன் நான்ஜீ பில்டிங்ஸ், 17, ஹார்னிமன் சர்க்கிள், ஃபோர்ட், பம்பாய்-1.

RATAN BATRA DBJ TAM/203

வரவில்லையே? உங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்; ஆவலுடன்! நீங்கள் வரவே யில்லை. உங்களை நான் இன்னும் சந்திக்கவில்லை. ஆனால் நீங்கள் என்னைச் சந்தித்தீர்கள். எங்கே, தெரியுமா? அங்கே; ஆமாம், அங்கேதான்! அந்த இடம் இன்னமும் உங்களுக்கு விளங்கவில்லையா? தேடுங்கள், தேடிக் கண்டுபிடியுங்கள்.

உங்களுக்கே உரிய

★★

ரமேஷ் இன்ப வெள்ளத்தில் நனித்தான். ஆவல் பெருகியது. இரண்டு கடிதங்கள் வந்தாயிற்று. கோணலான, குட்டையான, தனித் தனியான எழுத்து; அவன் மீது அன்பைப் பொழியும் அவள் எழுதிய எழுத்து! அவனைப் பார்க்க அவள் விரும்பியது போலவே, அவளைப் பார்க்க அவனும் விரும்பினான். இருவருமே உணர்வில் கனிந்திருந்தார்கள்.

ஆனால் அவள் அவன் கண்களுக்குத் தெரியவில்லை; அவளைச் சந்திக்கவில்லை. எங்கோ அவன் அவளைச் சந்தித்திருக்கிறான். ஆயினும் அந்த இடம் அவனுக்குத் தெரியவில்லையே! அதை அவன் கட்டாயம் கண்டு பிடிப்பான்.

அவ்வளவுதான், சாலைகளிலும் மூலை முடுக்குகளிலும் பூங்காக்களிலும் பஸ் நிலையங்களிலும் ஹோட்டல்களிலும் கடற் கரையிலும் அவன் அவளைத் தேடலானான். எங்கும் அவளே நிறைந்திருந்தாள். எங்கே பார்த்தாலும் அவளே சைகை செய்தாள். வழியில் ஓடும் வண்டிகளைப் பற்றிய உணர்ச்சியே அவனுக்கு இல்லை. அறிமுகமானவர் எதிரில் வந்தாலும் அவனுக்கு விளங்கவில்லை. வீட்டில் ஒரு கணமும் அவனுக்கு நிம்மதி இல்லை. ஒரு தடவை ஒரு சினிமாத் தியேட்டரிலிருந்து அவள் வருவதாக அவனுக்குத் தோன்றியது. வெளியே வரும் கூட்டத்தைக் கூர்ந்து பார்த்தபடி அவன் பைத்தியம் போல நின்றான். ஆனால் அவளை அவன் இனங் காண முடியவில்லை.

கூட்டம் வந்து போயிற்று. அவன் மட்டும் தனியே நின்றான். அவனுக்கு ஏமாற்றமாக இருந்தது. அவள் எங்கும் புலப்படவில்லை. வெறுமே ஏமாற்றுகிறாள்; வெறுமே ஆசை மூட்டுகிறாள்; எங்கும் தன்னை வெளிப்படுத்தவில்லை. இப்படி எத்தனை நாள் கடத்துவது? எவ்வளவு நேரம் வழி பார்த்து நிற்பது? ஓயாமல் எவ்வளவு தவிப்பது? ஏமாறுவது?

அவன் கண் கலங்கியது. அவளுக்காக ஏமாறுவதிலும் புதிய ஆசைக் கோட்டைகளை நிறுவுவதிலும் எவ்வளவு ஆனந்தம் இருக்கிறது! பின்னும் பின்னும் கலங்கி, இளைத்து இளைத்து, மீண்டும் நவ நவமான நம்பிக்கை மலர்களை மலர்விக்க அவன் விரும்பினான். அப்போது—

மூன்றாவது கடிதமும் வந்தது:

ரமேஷ், ரமேஷ், ரமேஷ்....

கடிதம் முழுவதும் அவன் பெயரே நிறைந்திருந்தது. பச்சைப் பட்டாடையில் சிவப்பு நூலினால் வண்ணச் சித்திரம் வரைந்தது போல இருந்தது அந்தக் கடிதம். அவன் அதை உயிராகக் காத்துக் கொண்டு உலாவி வந்தான். அதை எங்காவது போக்கி விடுவோமோ என்று கவலையுற்றான்.

''ரமேஷ், உனக்கு உடம்பு சரியில்லையாடா?'' என்று தாய் கேட்டாள்.

''இல்லையே அம்மா. அப்படி ஒன்றுமே இல்லையே! ஏன்?''

''என்னவோ போல இருக்கிறாயே, ரமேஷ்!''

''இப்போதெல்லாம் வேலை அதிகம், அம்மா!''

அவன் நிலைக்கண்ணாடியில் எட்டிப் பார்த்தான். ஆமாம்! கண்கள் குழிந்திருந்தன. நெற்றி கறுத்திருந்தது. உதடுகள் வறண்டிருந்தன. காதின் மேல் இருந்த கேசம் பின்னும் நரைத்திருந்தது. 'நான் என்னவோ போல இருக்கிறேனே! இளமையும் பறக்கிறதே! இனி எவளாவது என்னிடம் ஆசை கொள்வாளா? எப்படிக் கொள்வாள்?'

நாள் முழுவதும் அவன் இடிந்து விழுந்தாற் போல, அறவே சோர்ந்து ஓய்ந்து கிடந்தான். 'இனி எவளுமே என் ஆயுசுக்கும் வர மாட்டாள்.... எவளும் வரமாட்டாள்' என்று கசப்புடன் தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

என்ன வேடிக்கை இது! அன்று மாலையே, அவளுடைய கடிதம் மீண்டும் அவன் கைக்கு வந்தது. இப்போது அவளுக்கும் பிரிவு தாங்கவில்லை. சொல்லுகிறாள்—

''என்னை மிகவும் சோதிக்கிறீர்கள். நேற்று நீங்கள் என்னை ஏமாற்றியதைத் தாங்கவே முடியவில்லை. எவ்வளவு அழகாக அலங்கரித்துக்கொண்டு அங்கே நின்றேன்! நீங்கள் என்னை ஏறெடுத்தும் பார்க்கவில்லையே! என்ன இருந்தாலும் உங்களுக்குஇவ்வளவு அசட்டை, இவ்வளவு ஆணவம் ஆகாது! ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? என்னிடமிருந்து ஏன் விலகுகிறீர்கள்? ஏன் புறக்கணிக்கிறீர்கள்? என்னிடம் என்ன பயம்? என்னிடம் அஞ்சத் தேவையே இல்லை. உங்களுக்கு என்னிடம் நம்பிக்கை இல்லையென்றால், ஒரு வழியாக இதற்கு முடிவு கட்டி விடலாம். வேதனையும் தீரும்.

உங்கள்''

★★

சரிதான் போ! அவள் எங்கே நின்றிருந்தாள்? எங்கே அவனை எதிர்பார்த்தாள்? துஷ்டப் பெண்! ஒன்றும் சொல்லாமலே, வீணாக ஏமாற்றுகிறாள். சோதிப்பது அவள்; இவனிடம் குற்றம் காண்கிறாள்! இனி இந்தத் துயரத்தை அவனால் தாங்க முடியாது.

அவன் பைத்தியம் போலத் தெருக்களிலே அவளைத் தேடி அலைந்தான். அதோ அவளாகத்தான் இருக்கும். நீலச் சேலை, மெலிந்த மேனி, பின்னலை முன் பக்கம் இழுத்து விட்டவள். அவள் வருகிறாள்; அருகில் வருகிறாள். அல்ல, இவளல்ல. ரமேஷுக்கு இவளை அடையாளம் தெரியவில்லை. பின்னே, அவள்? — உயரமாகப் பருத்து ஒளிக் கண்களுடன் விர்ரென்று நடக்கிறாளே! இல்லை; இவளுமல்ல. இது வேற்று முகம். ரோஜா நிற மலர்கள் கொத்துக் கொத்தாகக் குவிந்திருக்கும் அந்த மரத்தின் அடியில் எவள் நிற்கிறாள்? அவன் ஓடிச் சென்றான். ஒல்லி, மாநிறம், சுழலும் கண்கள், சரிகையிட்ட கறுப்புச் சேலை, கையில்லாத கறுப்பு ரவிக்கை! ஆனால், இவள் வேறு! அவனுக்காகக் காத்திருப்பவள் அல்ல. தெருவோரமாகப் போகி

ளுனே இவள், இளமையைக் கடந்தவள் — ஆம், இவளாகத்தான் இருக்கும். இல்லேயே! இவள் அவன் வரவை எதிர்பார்க்கவில்லேயே!

ரமேஷுக்குத் தலே சுற்றியது. வெறும் ஏமாற்றம், தோற்றம்! உண்மையில் ஏதுமில்லே.

''அண்ணு, யாரிடமிருந்து உனக்குக் கடிதங்கள் வருகின்றன?'' என்று நடு நடுவே அவன் தங்கை கேட்டாள். ஆளுல் வீட்டில் யாரும் அவன் கடிதத்தைப் பிரித்துப் பார்க்கவில்லே; ஏதும் சந்தேகப்படவும் இல்லே. அவனேப் பற்றிச் சந்தேகிக்கவே இடமில்லே. அவன் நாளுக்கு நாள் இளைத்து வருவதைக் கண்ட தாய், இரவும் படுக்கும்போது அவனுக்கு அரைத் தம்ளர் பால் வற்புறுத்திக் கொடுக்கிருள். தந்தை ஏதும் பேசவில்லே; ஆளுல் அவர் கண் அவனேக் கவலேயுடன் பரிதாபமாகப் பார்த்தது. தம்பிகளும் தங்கைகளும் அவனிடம் உயிரையே வைத்தனர்.



''இங்கே பிஸினஸ் எப்படி?''

''இரண்டு வருஷமாகப் பில் போட இதே பென்ஸிலை உபயோகிக்கிறேன். இரண்டாவது தடவை சீவினது இல்லே!''

இந்தப் பரிவை நினைக்கும்போது ரமேஷுக்குக் கூட்டில் அடைபட்டாற் போல் இருந்தது. 'இவர்களே நம் மனிதர்கள். இவர்கள் நம்மைச் சார்ந்தவர்கள்; நம்மிடம் நன்றியுள்ளவர்கள். நிழலேப்போல நம் பின்னுல் நிற்பவர்கள். அவள் யார் எனக்கு? இரவும் பகலும் துடிக்கிறேனே, அவளுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? வீணுக என்னேயே நான் துன்புறுத்திக் கொள்கிறேன். எதற்காக இந்தப் பாசத்தைக் கழுத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறேன்?' என்று தோன்றியது. அவனுக்கு வெட்கமாக இருந்தது. ஆளுல்—

ஆளுல் அவள்தான் தேவையாக இருந்தாள்! கடைசியில் அவளேதான் வரவேண்டும். இவர்களேப் போலவே அவளும் உண்மையானவள். அவனுடைய வாழ்வுடன் பிணேந்தவள். அப்படியாளுல் இப்போது தாமதம் ஏன்? அவள் எதற்காகப் பதுங்குகிருள்? பைத்தியம்! வெறுமே கடிதங்கள் எழுதுகிருள்; எதிரில் வராமலே!

அடுத்த கடிதம் வந்தது—

என் ரமேஷ்,

என்னே என்ன பாடு படுத்துகிறீர்கள்! எனக்குத் தூக்கம் அறவே போயிற்று. எரிக்கும் பகல், வெறிச்சென்ற இரவு — நான் எப்படி வாழ்வேன்? போதும் பட்டது! வீணே உங்களிடம் உயிர் வைத்தேன்; ஆசை மாளிகைகளே அமைத்தேன். யாரும் யாரிடமும் அன்பு வைத்தலாகாது என்பதுதான் உண்மை. எவ்வளவு நான் இப்படிக் கெஞ்சிக் கடிதம் எழுதுவேன்? எவ்வளவு நான் வேண்டுவேன்? என்னே இனியும் சோதிக்க வேண்டாம். இல்லேயென்றுல்....

உங்கள்,

★★

மறுபடியும் அதே செய்தி! வெறும் சொல், வெறும் ஆர்வம்! கடைசியில் இரண்டு நட்சத்திரங்கள்! இப்போது அவை குன்றின் முனேக்கு வந்தாற்போலத் தோற்றின. அவள் ஏதாவது அசட்டுத்தனமாக...? அப்படி நடந்தால் அவன்தானே அதற்குப் பொறுப்பு? அவன் தவறு என்ன இருக்கிறது? அவன் அவளே ஏமாற்றவே இல்லேயே? அவள்தானே அவன் உயிரை முள்ளாக ஓயாமல் குத்துகிருள்! இந்த விளேயாட்டை ஆரம்பித்தவளே அவள்தானே! இதை எக்கச்சக்கமான நிலேக்குக் கொண்டு வந்தவளும் அவள்தானே? அவன் என்ன குற்றம் செய்தான்?

ஆயினும் அவனுக்குப் பயமாக இருந்தது. நாள்தோறும் நடுங்கிக் கொண்டே செய்திப் பத்திரிகைகளேப் புரட்டலாளுன். 'எங்காவது ஒரு பயங்கரச் செய்தி வரும்; அதில் நம் பெயர் இருக்கும்!' என்று எண்ணி அவன் துடித்தான். ஒரு நாள் மாலேயில் இந்தத் தவிப்புத் தாங்காமல் அவன் கடற்கரைக்குச் சென்றுன்.

வானத்தில் கருமுகில்கள் கவிந்திருந்தன. கடலில் கருநிழல் படர்ந்திருந்தது. அலேமேல் அலேகள் கர்ஜித்து வந்து, கரை மணலில் மோதி மடிந்தன. மேகங்கள் தன்னே நோக்கியே வருவதாக அவனுக்குத் தோன்றியது. சில்லென்ற காற்று அவனே நாலாபுறமும் சூழ்ந்தது. வானம் இடிந்து விழுவது போல் இருந்தது. மின்னல்கள் பளிச்சென்று கோணல் மாணலாக வெடித்தன.

கரையில் இருந்தவர்கள் சென்றுவிட்டார்கள். குளுமையான காற்று அவன் உடலேத் தாக்கியது. அவன் அசையாமல் நின்றுன்; நெடு நேரம் நின்றுன். பரந்த முகில்களின் காட்சியை அவளுல் காண முடியவில்லே. கடலுக்குப் புறமுதுகிட்டு அவன் நடந்தான்.


இங்காவது அவள் வந்திருக்க வேண்டும்; இந்த நேரத்திலாவது வந்திருக்க வேண்டும். அவன் அவளுக்காக இங்கே காத்திருந்ததை அவள் அறிந்திருக்க வேண்டும். இவ்வளவு நாள் தாமதப்படுத்தி, அவள் அனேத்தையுமே விரசமாக்கி விட்டாள். தன்னே எதிர்பார்க்க வைத்து வைத்து, கடைசியில் அவள் அவனுக்கு எரிச்சலே மூட்டியதுதான் மிச்சம்! இனி அவள் வந்தால் என்ன, வராமற்போளுல் என்ன? அவளது வருகையில் இருந்த இனிமை இற்றுவிட்டது.

அன்று இரவு ரமேஷ் அமைதியாகத் தூங்கினுன். அவன் இப்படி ஆழ்ந்து தூங்கி எவ்வளவோ நாளாயின.

இனி அவளும் வரப் போவதில்லே; அவளுடைய கடிதங்களும் வரப்போவதில்லே. எங்கிருந்து வருவாள்? எப்படி வரும்?

அந்தக் கடிதங்கள் யாவுமே ரமேஷுக்கு ரமேஷே எழுதியவைதாமே!

தமிழாக்கம்: கா.ஸ்ரீ.ஸ்ரீ.



ரகுபதி ராகவ

மகாத்மா காந்தி

தமிழாக்கம்: ராஜாஜி

69

மனிதன் அழகைக் கண்டான். அழகிய பொருள்களைத் தான் செய்யும் ஆற்றலையும் பெற்றான். அறிவு வளர வளர எது நன்மை எது தீமை என்பதைக் கண்டு பயனற்றவைகளையும் தீயவைகளையும் விலக்கி, அழகோடு பயனும் பண்பும் கலந்த கற்பனைகளையும் பொருள்களையுமே போற்றும்படியான பகுத்தறிவை அடைந்தான். வாய்க்கு ருசியான பண்டங்களை உண்பதில் மகிழ்ச்சியைக் கண்ட போதிலும் அளவு கண்டு உயிருக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு மட்டும் உண்பதுவே நன்மை என்று கண்டான். பிறருக்காக வாழ்வதில் தனக்கு மட்டும் வாழ்வதை விட அதிக மகிழ்ச்சியைக் கண்டான். மக்களுக்குப் பணி செய்து அதன் மூலம் ஈசனை வழிபடுவதிலுள்ள ஆனந்தத்தைக் கண்டான். இவ்வாறு அறிவு முதிர்ந்து, ஆண் பெண் சேர்க்கையும் கிராம்ய சிற்றின்பத்துக்கு அல்ல, மக்கட் பேறு அடைவதற்காக என்பதை மனித ஜாதி உணர்ந்து விவாகம் என்கிற வாழ்க்கை முறையை ஏற்படுத்திக் கொண்டது. அதுவின்றி ஆண் பெண் சேர்க்கை அவலட்சணமாகும், அபாயமுமாகும், சமூகத்தையே கொல்லும் சத்துருவாகி முடியும் என்பதை உலகம் முழுவதும் மக்கள் ஜாதி அறிந்து கொண்டது. (ஹரிஜன் 4-4-36)

மனித வாழ்க்கை என்பது அறிவின் மலர்ச்சியேயாகும். புலன்கள் செல்லும் வழியில் அவற்றை விடாமல் தடுத்து அடக்கியாள்வதே நன்மையைத் தரும். ஆனபடியால் புலனை அடக்கியாளவே உலகத்தில் விவாக முறை தோன்றியது. மக்கட் பேறு விரும்பி அதைப் பெறவும் சிற்றின்பத்துக்கு வேலி போட்டு அடைக்கவும் விவாக முறை உண்டாயிற்று. (யங் இந்தியா, 16-9-26)

சந்தானக் கட்டுப்பாடு அவசியம் என்பது உண்மை. யோசனை யின்றி மக்களைப் பெற்றுக் கஷ்டப்படுவதில் பயனில்லை; துன்பமேயாகும். ஆனால் மக்கட் பேறு கட்டுப்படுத்துவதற்கு வழி பெரியோர்கள் காட்டியிருப்பது — பிரமசரியம் அல்லது புலனடக்கம், தன்னைத் தான் அடக்கியாளுதல். இதுதான் நல்ல முறை. மற்றவை யெல்லாம் தீமை பயக்கும். இதற்கென்று புதிதாகக் கையாளும் முறைகள் சமூகத்தில் பாவம் பரவச் செய்யும்.

கருவைச் சிதைக்கும் முறைகளை விட்டு விட்டுத் தன்னைத் தான் அடக்கியாள்வதற்கு ஏதேனும் வழியிருந்தால் அதை வைத்திய நிபுணர்கள் காண வேண்டும். அப்படி அவர்கள் கண்டு மக்களுக்கு உதவினால் மக்கள் யாவரும் அவர்களுக்கு நன்றி செலுத்துவார்கள்.

கெட்ட நடத்தைக்கு வழி காட்டுவதாகும் கர்ப்பத் தடை முறைகள். அளவுக்கு மிஞ்சிச் சிற்றின்பத்தில் இறங்குவதற்குத் தூண்டுவதாகும். இந்த முறைகளை விளம்பரப்படுத்தியும் அவற்றைக் கையாளச் சௌகரியங்களை அமைத்துக் கொடுத்தும் வருவதனால் சமுதாயப் பண்பாடே கெட்டுப் போய் வருகிறது. மக்களுடைய ஆரோக்கியமும் குறைந்து வருகிறது. ஒரு நோய்க்கு மருந்து செய்யப் போய், நோயைவிட மருந்து பெரிய நோயாகி வருகிறது. மக்கட் பேற்றின் எண்ணிக்கையைக் குறைக்கப் போய்ச் சமூகத்தின் சீலத்தையே அழித்து விடுகிறோம்.


சுகமாயினும் துக்கமாயினும் நம்முடைய செயலின் பயனை அனுபவித்தாலேதான் அறிவு பெறுவோம். பயனை விலக்கிவிட வழி தேடினோமானால் ஒரு நாளும் நல்லறிவைப் பெறமாட்டோம். அளவுக்கு மிஞ்சி உண்டவனுக்கு அஜீரணத்தினால் வயிற்று வலி உண்டாவதும் பிறகு ஏற்படும் லங்கணமும் நன்மையேயாகும். வரம்பு கடந்து தின்றுவிட்டு மருந்துகள் உண்டு தன்னுடைய அக்கிரமத்தின் பலனின்று தப்பித்துக் கொள்வது ஒருவனுக்குத் தீமையையே உண்டாக்கும். பசியைப் பற்றியும் உணவைப் பற்றியும் இதுவாயின், பசு தர்மத்தைப் பற்றியும் அதுவே உண்மை. செயலின் பயனைப் புது முறைகளைக் கொண்டு விலக்கிச் சிற்றின்பத்தில் ஈடுபட்டோமானால் இயற்கைத் தேவி நம்மைச் சும்மா விடமாட்டாள், தண்டனை தருவாள் என்பது நிச்சயம். பெருந்தண்டனையாக முடிவில் அனுபவிக்க வேண்டியதாகும்.


புனிதப் பயன்களை அடைய வேண்டுமானால் புனித முறைகளைத்தான் கையாள வேண்டும். மற்ற முறைகள் தீமைகளை விளைவித்துச் சமுதாயத்துக்கு நஷ்டமுண்டாக்கும் என்பதில் ஐயமில்லை. (யங் இந்தியா, 12-3-25)

பிரஜோற்பத்திக்காக இயற்கையில் அமைந்திருக்கும் சக்தியைக் கண்டபடி உபயோகப் படுத்திக் கெட்டுப் போகலாகாது. அடக்கியாண்டோமானால் இந்த இயற்கை அமைப்பைப் பற்றி வெட்கப்பட வேண்டிய அவசியமே யில்லை. முறையும் வரம்பும் தவறினோமானால் ஆண்டவன் தந்திருக்கும் வரப் பிரசாதமானது பாபத்தில் முடியும். ஆண்டவனுக்கும் மக்கள் சமூகத்துக்கும் செய்த துரோகமாகும். (ஹரிஜன் 28-3-46)

புது முறைகள் மனிதனைக் கேவலம் மிருகமாக்கி விடும். மனிதனுடைய பண்பைக் கெடுத்து அவனை மிருகமாக்குவது வெகு எளிது. மிருகமாக்கும் முறைகளுக்கு அழகிய விளம்பரங்களும் தந்து பிரசுரித்தால் சொல்ல வேண்டியதே இல்லை. இது அக்கிரமம் என்கிற உணர்ச்சியையே இழந்து விட்டுத் தங்குதடையின்றி அதில் இறங்குவான். கர்ப்பத் தடைக்காரர்கள் செய்யும் பணி இதுவே.

(ஹரிஜன் 31-3-35)





டாக்டர் ரங்கஸ்

ஏ.என்.கிருஷ்ணராவ்



கன்னட எழுத்தாளர் திரு ஏ.என். கிருஷ்ண ராவ் 1908ம் ஆண்டு கோலாரில் பிறந்தவர். 'ஆ.நா.கிரு.' என்ற பெயரில் கன்னட இலக்கியத்தின் பல துறைகளையும் தம் எழுத்து வன்மையால் ஆக்கிரமித்துக்கொண்ட திரு கிருஷ்ண ராவ் தமது பதினாறு வயதில் எழுதத் தொடங்கினார். இதுவரை 125 நாவல்களுக்குமேல் எழுதியுள்ளார். தவிர 28 நாடகங்களும், பல சிறுகதைத் தொகுதிகளும் வெளிவந்துள்ளன. மைசூர் சர்வகலாசாலை இவருக்கு 'டாக்டர்' பட்டம் கொடுத்துக் கௌரவித்துள்ளது. டாக்டர் ரங்கஸ் என்னும் இந்தக் கதை ஆதி நாளில் எழுதப்பட்டதானாலும், கல்வி கேள்வியும் அறிவாற்றலும் எந்நாளும் எவர்க்கும் பொது என்பதை வெகு அழகாக எடுத்துரைக்கிறது.

புல்லூர். ஆம், அது ஊரின் பெயரே தவிர, அங்கு மருந்துக்குக்கூடப் புல் கிடையாது. புல்லே இல்லையெனில், நெல்லைப்பற்றிப் பேசவும் வேண்டுமோ? எத்தனையோ விசித்திரப் பெயர்கள் இந்த வையகத்தில் இல்லையா? அதைப்போல! புல்தடுக்கிப் பயில்வானுக்குப் பீமசேனன் என்ற திருநாமம் இருப்பதுபோல். சாகித்தியங்களிலோ அன்றி சரித்திரத்திலோ புல்லூரின் பெயர் இறவா இடம் பெற அவசியம் இருக்கவில்லை. பெயரைத் தவிர வேறேதும் நிலைத்திருந்ததாகச் சாத்தியக் கூறுகளுமில்லை. ஆனால், அண்மையில் அமைந்திருந்த பட்டிதொட்டிகளில் எல்லாம் பெரும்பாலும் கீழ்க்குடி மக்களே வாழ்ந்து வந்தனர். அவர்களைக் கைதூக்கிவிடவும், அவர்களின் நல்வாழ்வுக்காகவும், கிறிஸ்துவ சங்கம் ஒரு திருக்கோயிலையும், மருத்துவமனை ஒன்றினையும் அமைத்தது. அவைகளைச் செவ்வனே பராமரிக்க ஒரு பாதிரியாரும் நியமிக்கப்பட்டார். ஆரம்ப காலத்தில் பாதிரியார் 'தம் கடன் பணி செய்து கிடப்பதே' என்றிருந்தாலும் இன்னல்கள் பல நேர்ந்தன. இருப்பினும் நாளடைவில் அவர் தம் முயற்சி திருவினையாகக் கண்டார். அவரின் புகழ் பரவத் தலைப்பட்டது. நாற்பது ஐம்பது வீடுகளைச் சார்ந்தோர் சிலுவையை அணிந்திருப்பது கண்டு, மேட்டுக்குடிவாசிகளுக்கு அச்சமும், ஆத்திரமும் ஏற்பட்டது என்னவோ உண்மைதான். ஆனால் அவர்களும் பாதிரியாரைச் சற்று மரியாதையாக நடத்தக் காரணமாயிருந்தது அவர் நோய்களுக்கு அளித்த சில மாத்திரைகளும், அரிய மருந்துகளுமே யாகும். அவர் தந்த மாத்திரைகள் கடுகளவே ஆயினும் சாதாரணத் தலைவலியிலிருந்து காலரா வரையான கொடு நோய்களையும் கணப் பொழுதில் குணப்படுத்தின. பாதிரியாரின் மருத்துவமனை ஊரின் நடுவே உள்ள நீர் நிறைந்த குளம்போல் மக்களுக்குப் பயனளித்தது. உயர்குடிப் பிறந்தோர் என்று தம்மைக் கருதி வந்தோரும், பாதிரியாரின் தயவு தேவைப்படாவிட்டாலும் அவர் தம் கைப் பையிலிருந்த மாத்திரைகளின் தயவுக்குத் தவம் கிடந்தனர்.

ஏதோ ஒரு காரணம் பற்றி டாக்டர் கோல்ட்வின் என்பவர் பாதிரியாரின் விருந்தினராக வந்திருந்தார். அந்தக் குக்கிராமத்திலே வாழ்ந்த ஒரு மாணிக்கத்தின் தொடர்பு



வேண்டியே திரைகடல் கடந்து வந்திருந்தார் அவர். வேத விற்பன்னர்கள் கோல்ட்வின்னை நன்கு அறிவர். வேதாந்தம், உபநிஷதம், பகவத்கீதை போன்ற அரும் பெரும் நூல்களுக்கு உரை எழுதிய பேரறிஞர். உலகப் புகழ்பெற்ற ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் பணி புரியும் ஆராய்ச்சியாளர். பிரம்மசூத்திரத்தின் தாத்பரியத்தைக் கசடறக் கற்க வேண்டி, தக்க ஆசிரியரின் உதவி நாடிப் பாரதம் வந்திருந்தார். நாடனைத்தும் தேடியும் ஏற்ற ஆசான் கிடைக்காது இறுதியில் புல்லூருக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டது. காசியிலே வாழ்ந்த பிரம்மானந்த சாஸ்திரிகளிடத்தில் பாடம் கற்கும் தறுவாயில் எழுந்த பல்வேறு ஐயப்பாடுகளுக்கு விடையளிக்கவல்லவர் புல்லூர்வாழ் சாமா சாஸ்திரிகளே எனக் கூறக் கேட்டே கோல்ட்வின் அவ்வூர் வந்தடைந்தார்.

சாமா சாஸ்திரிகளின் பெயரும், புகழும் காசிவரை எட்டியிருந்த போதிலும் உள்ளூர்வாசிகளுக்கு அவர் குடத்திலிட்ட விளக்காகவே இருந்தார். அவர் மெய்யறிவு யாருக்கும் பயன்படவே இல்லை.

கோல்ட்வின் காசியிலிருந்து வருங்காலை, பிரம்மானந்த சாஸ்திரிகளிடமிருந்து அறிமுகக் கடிதம் வாங்கி வந்திருந்தார். எனவே, சாமா சாஸ்திரிகளால் மறுக்க இயலவில்லை. ஆனால் பாடம் கற்கப் பல விதிமுறைகளை ஏற்படுத்தினார். ஊர்க் கோடியில் இருந்த பாழடைந்த அனுமப்பக் கோயிலுக்கு அதிகாலையில் குளித்து வரவேண்டும். அங்குதான் பாடம். முன்பணம் இருநூற்றுத் தொண்ணூறு ரூபாய் கொடுக்க வேண்டும். மது அருந்தவோ புலால் உண்ணவோ கூடாது. இப்படி எத்தனையோ விதிமுறைகள்.

கோல்ட்வின் மனமுவந்து அவர் கூறிய விதிமுறைகளையெல்லாம் ஏற்றுக் கொண்டார். காரணம் முதுகாட்டில் காக்கை உகக்கும் பிணங்களின் நடுவேயும் உட்கார்ந்து கற்றுத் தெளிய வேண்டிய ஆர்வம் அவருக்கு இருந்தது.

ஒரு நல்ல நாளில் பாடம் தொடங்கியது. கோல்ட்வின் மனமுவந்து கொடுத்த முன் பணம் சற்று அதிகமாகவே இருந்ததனாலும், உடையார் முன் இல்லார் போலிருந்து பாடம் கேட்ட கோல்ட்வின்னை மிகவும் பிடித்திருந்ததாலும், தமக்குத் தெரிந்தவற்றையெல்லாம் சாஸ்திரிகள் ஐயம் திரிபறக் கற்றுக் கொடுத்தார்.

ஒரு நாள் பாடம் முடிந்து இருவரும் வெளிவருகையில், ஒரு மூலையில் கீழ்க்குடியைச் சார்ந்த ரங்கன் என்ற சிறுவன் சிரித்தவாறு நின்றதைக் கண்டு சாஸ்திரிகள் வெகுண்டார். தெளிந்த நீரோடைபோல் சலனமற்றிருந்த சாஸ்திரிகளின் முகம், கரை புரண்டோடும்

காட்டாற்று வெள்ளம் போல் மாறுவதையும், கண்கள் கோபக் கனல் உமிழ்வதையும் கண்டு, ஏது விளையுமோ என்ற அச்சத்துடன் கோல்ட்வின் சாஸ்திரிகளையே பார்த்து நின்றார். சாஸ்திரிகள் சிறுவனிடம், ''முட்டாளே! எத்தனை நேரமாக இங்கு நிற்கிறாய்?'' என்று தம் சிம்மக் குரலில் கேட்டார்.

சிறுவன் சிரித்தவாறு, ''அப்பவே வந்தேனுங்க, சாமி. ஏதோ மந்திரம் சொன்னீங்க. கேட்டுக்கிட்டே நின்னுட்டேனுங்க'' என்று கூறினான். பொறுமை இழந்த சாஸ்திரிகள், ''ஐயோ, பாவி! கேட்ட உன் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டுமடா!'' என்று கத்தியவாறே அவனை நோக்கித் தம் கைத்தடியைப் பலமாக வீசினார். கைத்தடி தலையில் தாக்கக் குருதி வழிந்தோட வேர் அறுந்த மரம் போல் சாய்ந்து நினைவிழந்தான் ரங்கன்.

கோல்ட்வின் ரங்கனைப் பாதிரியின் வீட்டுக்குத் தூக்கிச் சென்று வேண்டிய சிகிச்சை அளித்தார். செய்தி அறிந்து ரங்கனின் தந்தை மாதவன் ஓடோடியும் வந்தான்; மகனின் நிலை கண்டு கதறி அழுதான். பாதிரியாரும் கோல்ட்வினும் ஆறுதல் கூறிச் சாந்தப் படுத்தினர். சில நாட்களில் பாதிரியார், கோல்ட்வின் பராமரிப்பில் ரங்கன் பூர்ண குணமடைந்தான்.

ஒரு நாள் தன் உயிரைக் காத்த கோல்ட்வினின் கையைப் பிடித்துக் கொண்டு ரங்கன், '' நான் என்ன தவறு செய்தேன் ஐயா! ஹரிஜனனாகப் பிறந்ததே ஒரு தப்பா?'' என்று கேட்டான். இதைப் பாதிரி ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கூறக் கேட்ட கோல்ட்வின் வெந்த கொடும் புண்ணில் வேல் நுழைந்ததற் கொப்பத் துயரப்பட்டார். அன்றைய இரவு முழுதும் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தார். மறு நாள் காலையில் மாதவனை வரவழைத்து, ''உன் மகனை எனக்குக் கொடுப்பாயா?'' என்று கேட்டார்.

'' என்னதான் ஏழையானாலும் பெத்த பிள்ளையைப் பிறருக்குக் கொடுக்க மனம் வருமா?''

''அதற்காகச் சொல்லவில்லையப்பா! என் பிள்ளையைப் போல் உன் மகனை நான் வளர்க்கிறேன். அவனை நன்றாகப் படிக்க வைத்து அறிஞனாக்குவேன்.''

''ரங்கன் பேரில் இவ்வளவு பரிவு ஏன் ஐயா?''

''வேத மந்திரமும் சங்கர பாஷ்யமும் கேட்கும் ஆர்வமுள்ள சிறுவனின் ஆத்மா ஏதோ முன் பிறவியிலே நல்வினை செய்ததாக இருக்க வேண்டும். ரங்கன் இந்தச் சேரியிலே வளர்ந்து உங்களில் ஒருவனாக வாழ்ந்து மடிந்து போவதை விரும்புகிறாயா? அல்லது கற்க வேண்டியவற்றைக் கசடறக் கற்று உங்கள் குலத்துக்கே பெருமை தேடித் தரும் அறிஞனாவதை விரும்புகிறாயா?''

''என்னென்னமோ சொல்றீங்களே, ஐயா! அவன் அப்படிப் பெரிய மனுஷன் ஆனால் பெருமைதான். ஆனாலும் அவனை விட்டுட்டு எப்படி இருப்போம்?''

'' காலம் முழுவதுமா இருக்கப் போகிறாய்? ஆறு ஏழு வருடங்களுக்கு மட்டும் தானே? பிறகு மீண்டும் இங்கேயே வருவான். சிந்தித்துச் சொல்.''

''கும்பிடறேனுங்க, எஜமான்! நீங்க அவன் உயிரையே காப்பாத்தினீங்க. உங்களுக்குத் தெரியாததில்லைங்க.''

மாதவன் தன் சம்மதத்தைத் தெரிவித்தான். உடல் நிலை சரியானதும் ரங்கனை அழைத்துக் கொண்டு கோல்ட்வின் தம்மூர் சென்றார்.

சாஸ்திரிகள் நடந்தவற்றையெல்லாம் கேள்விப்பட்டு கோல்ட்வின் முன்னிலையில் தாம் அப்படி நடக்காமல் இருந்திருக்கலாம் என்று வருந்தினார். ஆயினும் அவருடைய கோபமெல்லாம் ஹரிஜனங்களின் மீது திரும்பியது. ஆனால் அந்த ஊரில் இருந்த எவரும் சாஸ்திரிகள் செய்தது சரி என்று சொல்லவில்லை. ஊர் மக்களுக்குத் தம் மீது இருந்த மரியாதையும் மட்டும் குறைந்து வருவதை சாஸ்திரிகள் உணர்ந்தார். காட்டில் வாழ்ந்த சிங்கத்தைக் கூட்டில் அடைத்துப் பார்வைப் பொருளாக வைக்கப்பட்டிருந்த நிலைக்கு சாஸ்திரிகள் வந்து விட்டார். தலை குனிந்து அங்கு இருப்பதைவிட வேறு எங்கேயாவது செல்ல நினைத்தாலும், வீடு, வாசல், மாடு கன்றுகளை விட்டுச் செல்ல அவர் மனம் இடங்கொடுக்கவில்லை. எனவே, ஊரிலேயே நடமாடும் பிணம்போல் வாழ்ந்து வந்தார்.

சாஸ்திரிகளுக்கு ஒரு நாள் திடீரென்று ஒரு நற்செய்தி தபாலில் வந்தது. பெங்களூரிலிருந்த கல்லூரி ஒன்றில் அவரை சம்ஸ்கிருதப் பேராசிரியராக நியமித்து எழுதியிருந்த அந்த உறையில் டாக்டர் கோல்ட்வினின் கடிதமும் இருந்தது. சாஸ்திரிகள் கோல்ட்வினின் உயர்ந்த குணத்தை மனமாரப் பாராட்டினார். சாஸ்திரிகளின் குடும்பம் பெங்களூருக்குக் குடி பெயர்ந்தது.

கல்லூரியில் சேர்ந்த சில நாட்களில் அவர் புகழ் நாடெங்கிலும் பரவத் தொடங்கியது. எந்தத் தார்மிக சபையிலும் தலைமை தாங்க அவரையே அழைத்தனர். பண்டிதர்களின் சங்கம், கன்னட ஸாஹித்ய சங்கம், இராமகிருஷ்ணாசிரமம் முதலிய பல்வேறு இடங்களில் சாஸ்திரிகளின் உபன்யாசம் நடக்கத் தொடங்கியது. அவர் குரலில் இருந்த அபார சக்தி, ஸாஹித்தியத்தில் இருந்த முற்றும் தெரிந்து தெளிந்த தன்மை, கம்பீரம், நினைத்ததை விண்டுரைப்பதில் அவருக்கு இருந்த வல்லமை, தெளிவாகவும் சுருக்கமாகவும் மனத்தில் பதியுமாறும் கூறும் திறமை எல்லாமாகச் சேர்ந்து அவர் வெகு சீக்கிரத்தில் புகழ் ஏணியின் உச்சிக்கே செல்ல உதவின. சொல்லப் போனால் புல்லூரிலே பிறந்த சாஸ்திரிகளின் புகழ் உலகெங்கும் பரவத் தொடங்கியது.

சில நாட்களாகவே எந்தப் பத்திரிகையைப் புரட்டினாலும் டாக்டர் ரங்கஸ் எம்.ஏ., பி. எச்டி. டி. லிட். அவர்களின் புகழ் பற்றிய செய்திகளே நிறைய இடம் பெற்றிருந்தன. சுவாமி விவேகானந்தரைப் போலவே டாக்டர் ரங்கஸ், ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய கண்டங்களில் இந்து மதத்தின் மேன்மையையும், தொன்மையையும் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவுகள் பல ஆற்றியிருந்தார். அனைத்துலக நெறிக் கழகத்தின் சிறப்பு

அடிக்கடி சிறுநீர் கழிப்பது

அடிக்கடி சிறுநீர் கழிப்பது ஒரு கொடிய வியாதி. அது, பாதிக்கப்பட்டவரை நாளுக்கு நாள் மரணப் பாதையை நோக்கி இட்டுச் செல்லும்.

இவ்வியாதியால் அல்லல் படுவோருக்கு அதிக தாகம், பசி, உடல் பூராவும் வலி ஏற்படும்; உடலால் உழைக்கவோ, அல்லது மூளையை உபயோகப்படுத்தி வேலை செய்யவோ உற்சாகமிராது. நாளுக்கு நாள் உடல் எடை குறையும். உடலில் ஒருவித நமைச்சல் ஏற்படும். சரும வியாதியால் அவதியுறுவர். கல்லீரல் மந்தமாகி, மூத்திரக் காய்கள் பலவீனமடைந்து, சரிவர இயங்காது. இந்த வியாதியை உடனடியாகக் கவனிக்காவிடில், கில் வாயு, பார்வைக் குறைவு, தூக்கமின்மை, அதிகக் களைப்பு, உடலில் கட்டிகள் ஏற்படுவது போன்றவைகளால் கஷ்டப்பட நேரிடும்.

பழம்பெ காலத்திலிருந்து அனுசரிக்கப்பட்ட யூனானி முறைப்படி அபூர்வ மூலிகைகளினால் தயாரிக்கப்பட்ட "யூரிடோன்" மாத்திரைகள் இந்தக் கொடிய வியாதியை குணப்படுத்தும்.

"யூரிடோன்" மாத்திரைகளை உபயோகப்படுத்தி, ஆயிரக் கணக்கானவர்கள் பயன் அடைந்துள்ளனர். அடிக்கடி சிறுநீர் போவது கட்டுப்படுத்தப்பட்டு, ஒரு சில நாட்களிலேயே வியாதியின் அல்லல்களிலிருந்து நிவாரணம் அடைந்து மன நிம்மதியைப் பெறுகின்றனர்.

"யூரிடோன்" சிக்கனமானது, பத்திரமானது, எளிதில் எடுத்துச் செல்லக் கூடியது. உணவு உட்கொள்ளுவதில் விசேஷக் கட்டுப்பாடுகள் ஏதும் இல்லை. சாதாரண உடல்நலமுள்ளவர்களும் நல்ல ஆரோக்கியமாக இருக்க இதை உட்கொள்ளலாம். விவரங்கள் அடங்கிய இலவசப் பிரசுரத்துக்கு எழுதவும்.


40 மாத்திரைகள் கொண்ட பாட்டில் விலை ரூ. 10. பாக்கிங் தபால் செலவு ரூ. 2 தனி.

ஒரே தடவையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாட்டில்களுக்கு ஆர்டர் அனுப்புபவர்களுக்கு பாக்கிங் மற்றும் தபால் செலவு இலவசம்.

Barrys Remedies Laboratories (K. L.)

G. P. O. BOX 874

CALCUTTA-1



மாநாடு நியூயார்க் மாநகரத்தில் நடைபெற்ற போது இந்து மதத்தின் புகழினை வானளாவச் செய்தார். தாம் கிறித்துவ மதத்தைச் சார்ந்தவராயினும் டாக்டர் ரங்கஸ் இந்து மதத்தின்பால் ஈர்க்கப்பட்டு அதன் புகழைப் பரப்பத் தலைப்பட்டவுடனே, இந்திய நாட்டினர் அவரை வரவேற்று வாழ்த்துரை வழங்க விழைந்தனர். பெங்களூர் மாநகரத்திலும் அதற்கான ஒரு வரவேற்புக் குழு மகாமகோபாத்தியாய வேதரத்னாகர சாமா சாஸ்திரிகள் தலைமையில் அமைக்கப்பட்டது. நகரமன்றத்தில் கூட்டம் கூடியது. எள் போட்டால் எள் விழாமலிருக்கும் அளவுக்குக் கண்ணுக்கு எட்டியவரை மக்கள் கூட்டம். முக்கிய அழைப்பினர் அனைவரும் குறித்த நேரத்தில் வந்து தங்கள் ஆசனத்தில் அமர்ந்தனர். அறுபது அல்லது எழுபது வயதுடைய பழுத்த கிழவர் ஒருவரை டாக்டர் ரங்கஸ் வடிவிலே வழிமேல் விழி வைத்து எதிர்நோக்கிக்கொண்டிருந்த அவையினருக்குப் பெருத்த ஏமாற்றம் காத்திருந்தது. முப்பதே வயது மதிப்பிடத்தக்க சாதாரண உயரமுடைய, இளைஞர் ஒருவர் வந்தார். பாதிரியார்களுக்குரிய ஆடையோ அறிவாற்றலை வெளிப் படுத்தும் வெண் தாடியோ அவரிடத்தில் இல்லை. 'இவர்தானா பார் புகழும் டாக்டர் ரங்கஸ்' என்று கண்டவர் வியக்கும் வண்ணம் அவர் அமைதியே உருவாயிருந்தார். கூட்டம் ஆரம்பமாயிற்று. அதனைத் தொடர்ந்து ராவ்பகதூர் அனுமந்தப்பா தமக்கே உரித்தான அரைகுறை ஆங்கிலத்தில் அவையோரின் சலசலப்பையும் பொருட்படுத்தாமல் பேசிக் கொண்டே போனார். அவருடைய தைரியத்தைக் கண்டு வியக்காதவர் இல்லை. அடுத்து சாஸ்திரிகள் ஆற்றிய உரை பொருத்தமற்றிருந்தாலும் அவருடைய ஆழ்ந்த புலமையையும், அவருக்கு இந்த மாநிலத்தில் இருந்த ஈடுபாட்டினையும் கண்டு ஏனையோர் ஆச்சரியமுற்று அமர்ந்திருந்தனர்.

இறுதியாக டாக்டர் ரங்கஸ் பேசத்தலைப்பட்டார். அப்பழுக்கற்ற ஆங்கிலத்தில் அவையினருக்கு நன்றி செலுத்தித் தம் பேச்சை நிறுத்தினார். அவையோரின் ஆச்சரியம் அடங்குமுன் தம் தொண்டையைக் கனைத்துக் கொண்டு கன்னடத்தில் தம் உரையைத் தொடர்ந்தார். கவின்மிகு சொற்கள் டாக்டர் ரங்கஸின் கண்டத்திலிருந்து வெளிப்பட்டவுடனே அவையிலே சொல்லொணா ஆரவாரம் எழுந்தது. சோர்ந்து உட்கார்ந்தோர் உன்னிப்பாய்க் கவனிக்கத் தலைப்பட்டனர். சாமா சாஸ்திரிகள் தம் இடக் கரத்திலே கன்னத்தை ஊன்றிக் கொண்டு டாக்டர் ரங்கஸையே வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார். டாக்டர் ரங்கஸ் தொடர்ந்தார்:

''அவையைக் கௌரவிக்க வேண்டி நான் ஆங்கிலத்தில் சில வரிகள் பேசினாலும், உங்களில் ஒருவனே. கருநாடக மாநிலத்தைச் சேர்ந்தவனே. சிறிய வயதிலே சந்தர்ப்பங்கள் செய்த சதியினால், நான் பிறந்த பொன்னாட்டை விட்டு வெளிநாடு செல்ல வேண்டியதாயிற்று. அயல்நாடுகளில் நான் புரிந்த எளிய தொண்டினைப் பெரிதென மதித்து எனக்கு இன்று நீங்கள் புகழ்மாலை சூட்டுகிறீர்கள். அப்புகழ் உண்மையிலேயே இன்றைய அவைத் தலைவரைத்தான் சாரும்.''

இவ்வாறு கூறி டாக்டர் ரங்கஸ் நிறுத்திய பொழுது கூடியிருந்தோர் ஆச்சரியக் கடலில் மூழ்கினர். டாக்டர் ரங்கஸ் தொடர்ந்தார். ''உங்களுக்கெல்லாம் வியப்பாக இருக்கும். ஒரு சமயம் பதினைந்து பதினாறு வருடங்களுக்கு முன்னால் ஒரு கீழ்க் குடிமகன், மறைந்திருந்து வேத பாடம் நடப்பதைக் கேட்டு விட்டான். சொல்லிக் கொடுத்தவர் அவனுக்குத் தக்க தண்டனையும் கொடுத்தார். அன்றே மடிந்து போக வேண்டியவனின் வாழ்க்கை சற்றும் எதிர்பாராத திசையில் திரும்பியது. அங்கு இருந்த ஓர் ஆங்கிலப் பிரபு அவனை அழைத்துச் சென்று அறிஞனாக்கினார். அவனுள் இருந்த கசப்பான எண்ணத்தை மாற்றி இந்து தர்மத்தில் தவறேதும் இல்லை, அதை அழிக்க நினைக்காதே. இந்து மதத்தைச் சார்ந்த சில பேர்களது குணத்தில்தான் குறை உள்ளது என்று கூறி 'நீ இந்து தர்மத்தை நான்கு மூலைகளிலும் பரவச் செய்' என்று கட்டளையிட்டார். அச்சிறுவனுக்கு அவன் பிறந்த மண்ணிலேயே பெரும் புகழும் தேடித் தந்தார். அவர் வேறு யாருமல்ல. டாக்டர் கோல்ட்வின் அவர்களே. அச்சிறுவனும் நானே. மாதவனின் மகன் ரங்கனை நான் டாக்டர் ரங்கஸாக மாற்றினேன். இவ்வளவுக்கும் காரணமாக இருந்த சாஸ்திரிகள் என் குரு அல்லவா? இதைக் கேட்கும் உங்களுக்கும் பெருமைதானே?''

சாஸ்திரிகள் முகத்தில் அரும்பிய வியர்வைத் துளிகளை மேல்ஆடையினால் துடைத்துக் கொண்டார். ரங்கஸ் மேலும் தொடர்ந்தார். ''இன்று நான் ஒரு செய்தித் தூதனாக வந்துள்ளேன். அது என்னுடைய செய்தி அல்ல. வேத ரிஷிகளின் தேவ வாக்கியம். 'மமாத்மா ஸர்வ பூதாத்மா' என்று சொன்னவரின் அமிருத வாக்கு. இந்து தர்மம் ஒரு சிலரது மட்டுமே அல்ல, அது உலகத்தினுடையது. அந்த தர்மம், கருணை, பரிவு, அன்பு, ஞானம், பவித்ரம் என்ற அடிக்கற்களாலான தளத்தின் மேல் கட்டப்பட்டது. அதில் எல்லோருக்கும் இடமுண்டு. சாதி சமய வேறுபாடுகளே கிடையாது. அந்தத் தர்மத்தின் ஒளிமயமான தன்மை உங்கள் நெஞ்சில் விளக்கேற்றி வைக்கட்டும். உச்ச நீச மதபேதம் நீங்கி யாவரும் அதன் நிழலில் களங்கமற்ற குழந்தைகளைப் போல் வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.''

சபையில் கைதட்டலும், ஆரவாரமும் அடங்கச் சில விநாடிகளாயின. டாக்டர் ரங்கஸ் சாஸ்திரிகளின் இரு கால்களையும் பிடித்து வணங்கினார். சாஸ்திரிகளின் கண்களில் நீர் கரை புரண்டோடியது. அவர் ரங்கஸை அள்ளி அணைத்து, ''அப்பா, நீயே பரம்பொருளின் பெருமை உணர்ந்தவன். எனக்கே ஞானத்தை விளக்கிய ஒளி'' என்றார்.

இந்து தர்மத்தின் உண்மையான பொருளைத் தெரிந்து, தேர்ந்து, தெளிந்த சாஸ்திரிகளின் மன நிலையை அந்த நிகழ்ச்சி படம் பிடித்துக் காட்டியது.

தமிழாக்கம் : மத்தூர் கிருஷ்ணமூர்த்தி

பொன்னியின் செல்வன்



அமரர் கல்கி

இருபத்தோராம் அத்தியாயம்

உயிர் ஊசலாடியது!

ஒரு கண நேரம் ஒரு யுகமாகத் தோன்றக் கூடிய சந்தர்ப்பங்கள் சில உண்டு. அவற்றில் ஒன்று இப்போது வானதிக்கு நேர்ந்தது. அவள் கண்ணை மூடிக் கொண்டு, துர்க்கா பரமேசுவரியைப் பிரார்த்தனை செய்து கொண்டு, ஓட்டுக் கூரை ஓடத்தில் சுழன்று சென்ற நேரம் சில வினாடிகள்தாம் இருக்கும். ஆயினும் அவை சில யுகங்களாகவே அவளுக்குத் தோன்றின. பின்னர் ஏற்பட்ட ஒரு பெரிய அதிர்ச்சி அவளுடைய தேகத்தையெல்லாம் குலுக்கிப் போட்டபோது அவளுடைய கண்களும் திறந்து கொண்டன. கூரை ஓடம் ஆற்றங்கரை மரத்தின் வேரில் மோதியதனால் அந்த அதிர்ச்சி உண்டாயிற்று என்பதை அவள் அறிந்தாள். அதனால் அந்தக் கூரை சுக்கல் சுக்கலான போது அதிர்ஷ்டவசமாக வானதியின் பாதி உடம்பு, வளைந்திருந்த மரக் கிளைகளில் சிக்கிக் கொண்டிருந்தது. அதனால் அவள் மரத்தின் வேர்களில் மோதப்படாமல் தப்பினாள். தனது நிலையை ஒருவாறு உணர்ந்து மரக்கிளைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். வெள்ளத்தின் சுழல் அவளுடைய கால்களைப் பிடித்து அதிவேகமாக இழுத்துக் கொண்டிருந்தது. அந்த வேகத்தினால் கால்கள் பிய்த்துக் கொண்டு போய்விடும் போல் இருந்தது. அவள் உடுத்தியிருந்த சேலையும் அவளை இழுத்து வெள்ளத்தில் விட்டுவிட முயன்றதாகத் தோன்றியது.

வானதிக்கு அச்சமயம் அதிசயமான மனோதிடமும் தைரியமும் எங்கிருந்தோ வந்திருந்தன. பல்லைக் கடித்துக்கொண்டு தன் முழு பலத்தையும் கொண்டு எழும்பி மரக் கிளையின் மேலே தாவி ஏறினாள். வளைந்து ஊசலாடிய மெல்லிய கிளைகளுக்கு மேலே இரண்டு கவடுகளாகப் பிரிந்த ஒரு பெரிய கிளையில் வசதியான இடத்தில் கெட்டியாக உட்கார்ந்து கொண்டாள். சேலைத் தலைப்புக்களை முறுக்கித் தண்ணீரைப் பிழிந்தாள்.

அப்போது சடபடவென்று தண்ணீர் அடிபடும் சத்தம் கேட்டது. சற்று முன்னால், அவள் கண்களை மூடிக் கொள்வதற்கு முன்னால், பார்த்த முதலையின் நினைவு வந்தது.

கீழே குனிந்து நாலு பக்கமும் உற்றுப் பார்த்தாள். முதலில், முதலையின் வால் தண்ணீரை அடிக்கும் காட்சி மட்டும் தென்பட்டது. முதலையின் உடம்பில் பெரும் பகுதியை அவள் ஏறி வந்த ஓட்டுக் கூரையின் உடைந்து சிதறிய பகுதிகள் மறைத்துக் கொண்டிருந்தன. சிறிது சிறிதாக முதலை தன் வாலின் உதவி கொண்டும் உடம்பை அசைத்தும் நெளித்தும் அந்தக் கூரைப் பகுதிகளி

விருந்து முழுதும் விடுவித்துக் கொண்டு வெளிவந்தது. அப்படி வெளிவந்த மகிழ்ச்சியைக் காட்டுவதற்காக முதலை தன் வாயை அகலப் பிளந்தது. வானதியைப் பார்த்து அது, ''வா! வா! எப்படியும் நீ என் வாயில் விழ வேண்டியதுதான்'' என்று சொல்வதுபோலிருந்தது.

வானதியும் தான் தப்பிப் பிழைத்த விதத்தை எண்ணிப் பார்த்து உற்சாகம் கொண்டிருந்தாள். ''ஓகோ! அப்படியா சொல்கிறாய்? என்னை விழுங்கி விடுவேன் என்று சொல்கிறாய்? முதலையே! உன் கைவரிசை, வால் வரிசை ஒன்றும் என்னிடம் பலியாது! நீ பல்லைக் காட்டுவதிலும் உபயோகமில்லை. உன் பசிக்கு என்னை நம்பியிராதே! வேறு யாரை யாவது பார்த்துக் கொண்டு போ!'' என்று வானதி முதலையிடம் பேசினாள். அந்தக் குரலைக் கேட்ட முதலை தன் இரண்டு பயங்கரமான கண்களாலும் அவளை உற்றுப் பார்க்கத் தொடங்கியது.

வானதி, ''ஓகோ! உன்னுடைய சபலம் உன்னை விடவில்லை போலிருக்கிறது!'' என்று கூறிவிட்டுச் சுற்று முற்றும் பார்த்தாள். அவளுடைய நிலைமை சற்றுப் பீதி அளிக்கக்கூடியதாகவே தோன்றியது. தண்ணீரின் பக்கம் அந்தப் பெரிய மரத்தின் கிளைகள் வளைந்து தொங்கின. ஆனால் கரையின் பக்கத்தில் அப்படித் தாழ்ந்திருந்த கிளைகளையே காணவில்லை. அடி மரத்தின் வழியாக இறங்கினால், அங்கே வேர்களோடு வேராக முதலை காத்துக் கொண்டிருந்தது. நதியின் பக்கம் வளைந்திருந்த கிளைகளிலிருந்து குதித்தால் மடுவின் சுழல் அவளைச் சுற்றிச் சுழற்றிப் பாதாளத்துக்கு இழுத்துக் கொண்டு போகக் காத்திருந்தது. அந்தப் பெரிய சுழலைச் சற்று நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தால் கூடத் தலை சுற்றும் போலத் தோன்றியது. கரைப் பக்கம் கிளைகள் உயரமாக இருந்தாலும் பாதகமில்லை; எப்படியோ குதித்துச் சமாளிக்கலாம்'' என்று எண்ணி, மரக் கிளைகளின் வழியாக நடந்து மறு பக்கம் போக எத்தனித்து எழுந்தாள்.

ஏற்கனவே வெகு நேரம் அவளுடைய உடம்பின் கீழ்ப் பகுதி முழுதும் தண்ணீரில் இருந்தபடியால் கால்கள் சில்லிட்டுப் போயிருந்தன. எழுந்து நிற்க முயன்ற போது கால்கள் வெட வெடவென்று நடுங்கின. ''சீச்சீ! கால்களே! உங்களுக்கு என்ன வந்துவிட்டது?'' என்று சொல்லிவிட்டு வானதி மறுபடியும் உட்கார்ந்து கொண்டாள். யாருக்குப் பொறுமை அதிகம்? முதலைக்கா, தனக்கா? – என்று சோதித்துப் பார்க்க வேண்டியதுதான் போலும்!

இச்சமயம், கஜேந்திரனின் பிளிறல் சத்தம் கேட்டு வானதி



திடுக்கிட்டாள். சற்று முன் நதியைக் குறுக்கே கடந்து கரை ஏறி மேற்கு நோக்கிச் சென்ற யானை திரும்பி வந்துகொண்டிருந்தது. அதே சமயத்தில் ஆற்றின் கரை ஓரமாகப் படகு ஒன்று வருவதையும் கவனித்தாள். அந்தப் படகில் இருவர் இருந்தார்கள். ஆம், ஆம்; அந்த இருவரில் ஒருவன் ஜோதிடரின் சீடன்; இன்னொருத்தி பூங்குழலிதான்! கடைசியில் தன்னைக் காப்பாற்றி அழைத்துப் போகப் பூங்குழலிதானா வரவேண்டும்?

படகு மரத்தின் அடியில் வந்தது. மரக் கிளைமேல் உட்கார்ந்திருந்த வானதியைப் பூங்குழலி பார்த்துவிட்டாள். சிரித்துக் கொண்டே, ''இளவரசி! நல்ல இடம் பார்த்து ஒளிந்து கொண்டீர்கள். சீக்கிரம் இறங்கி வாருங்கள்! அதோ அந்த யானையின் மேல் வருகிறது யார் தெரியுமா?'' என்று கேட்டாள்.

வானதியின் மனத்தில் சட்டென்று உண்மை உதயமாகி விட்டது. ஆனாலும் அதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, ''தெரியாதே. யார்?'' என்று கேட்டாள்.



''தாங்கள் யாரைத் தேடிக் கொண்டு புறப்பட்டீர்களோ, அவர்தான்! இளவரசர்தான்!'' என்றாள் பூங்குழலி.

வானதி அடங்கா வியப்புடன் யானையின்மேல் வருகிறவரைச் சில கண நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். அவர் அருகில் வரும் சமயத்தில் தான் மரக் கிளையின் மேல் உட்கார்ந்திருப்பது மிக்க அசம்பாவிதம் என்று தோன்றியது. பூங்குழலியின் யோசனைப்படி அவளுடைய படகில் இறங்கிவிட வேண்டியதுதான் என்று எண்ணிக் கீழே பார்த்தாள்.

அச்சமயம் படகு வெள்ளத்தின் வேகத்தினால் மரத்தடியில் நிற்க முடியாமல் நகர்ந்து செல்வதைக் கண்டாள். படகுடன் போக விரும்பாமல் பூங்குழலி தாவிக் குதித்ததையும் பார்த்தாள்.

ஐயோ! இது என்ன? பக்கத்தில் பயங்கர முதலை கிடப்பதை இந்தப் பெண் கவனிக்கவில்லையா, என்ன?

ஒரு கணத்தில் ஒன்பதினாயிரம் எண்ணங்கள் வானதியின் உள்ளத்தில் எழுந்து கொந்தளித்தன !

அவள் வாயிலிருந்து ஏதோ உளறிக் குளறி வார்த்தைகள் வெளிவந்தன !

''முதலை !'' என்பது மட்டும் பூங்குழலியின் காதில் விழுந்தது. அவள் திரும்பிப் பார்த்தாள். ஆம்; அவளுக்கு வெகு சமீபத்தில் ஒரு பிரம்மாண்டமான முதலை அதன் வாயைப் பிளந்து கொண்டிருந்தது. பூங்குழலி திரும்பிப் பார்த்த சமயம் முதலை தன் வாலை ஓங்கித் தண்ணீரில் அடித்தது.

பூங்குழலி எவ்வளவோ தைரியசாலிதான்! எத்தனையோ அபாயங்களைச் சமாளித்திருக்கிறாள். ஆனால் பத்தடி தூரத்தில் வாயைப் பிளந்து கொண்டிருக்கும் முதலைக்கு முன்னால் மனோதைரியத்தை மட்டும் வைத்துக் கொண்டு என்ன செய்ய? கரணம் தப்பினால் மரணம்! ஒரு விநாடியில் உயிர் தப்பாவிட்டால், முதலையின் வாயில் போக வேண்டியதுதான்! எப்படி உயிர் தப்புவது? மறுபடியும் படகில் ஏறிக் கொள்ள வேண்டியதுதான் !

இவ்வாறு எண்ணிப் பூங்குழலி தண்ணீரில் பாய்ந்தாள். படகு அதற்குள் கொஞ்ச தூரம் போய் விட்டது. ஜோதிடரின் சீடன் படகை அவ்விடத்தில் நிறுத்த முடியாது என்று தீர்மானித்துச் சற்றுக் கீழ்ப்புறம் சென்று கரையோரமாக அதை ஒதுக்க எண்ணிக் கொண்டு போனான். பூங்குழலியின் ஆபத்தான நிலையை அவன் கவனிக்கவில்லை.

படகைப் பிடிக்கத் தாவி நீந்திச் சென்ற பூங்குழலி அலைமோதும் கடலைக் காட்டிலும் காவேரி வெள்ளத்தின் கரையோரச் சுழல் அபாயகரமானது என்று கண்டாள். சுழலின் வேகம் அவளைக் கீழ்நோக்கி இழுத்தது. முதலை அவள் பின்னால் அவளைப் பிடிப்பதற்காக நகரத் தொடங்கி விட்டதென்பதை உணர்ந்தாள். இந்த நிலையில் அவளுடைய சேலையின் தலைப்பு வளர்ந்திருந்த மரக் கிளைகளில் மாட்டிக் கொண்டு அவளுடைய நிலையை மேலும் அபாயகரமாக்கியது.

இதை யெல்லாம் மேற் கிளைமீது அமர்ந்திருந்த வானதி கண்டாள். தன் மீது பூங்குழலி கொண்டிருந்த மனக் கசப்பும், சற்று முன்னால் அவளுடைய கொடூர வார்த்தை காரணமாகத் தான் செய்த சபதமும், அவள் தன்னைக் கை தூக்கிவிட வேண்டாம் என்ற எண்ணிக் கையை உதறித் தண்ணீரில் விழுந்ததும், மின்னல் வேகத்தில் அவள் மனத்தில் தோன்றி மறைந்தன. கூடவே, அப் பெண் பொன்னியின் செல்வரைக் கடலிலிருந்து காப்பாற்றிச் சூடாமணி விஹாரத்தில் கொண்டு போய்ச் சேர்த்ததும், அதனால் சோழ நாடும் தானும் அவளுக்குப் பட்டிருந்த நன்றிக் கடனும் நினைவு வந்தன. அதோ யானைமீது அவர் வந்து கொண்டிருக்கிறார். அவர் வருவதற்குள்ளே இவள் முதலை வாயில் அகப்பட்டுக் கொண்டு விட்டால், அவர் மனம் என்ன பாடு படும்? தன்னைப் பற்றி அவர் என்ன எண்ணுவார்? பார்க்கப் போனால் தன்னைக் காப்பாற்றும் எண்ணத்துடன் அல்லவா இவள் தொடர்ந்து வந்து இந்த அபாயத்துக்கு உள்ளாகி யிருக்கிறாள்?

இவ்வளவு எண்ணங்களும் இங்கே நேயர்கள் படிப்பதற்கு ஆன நேரத்தில் நூற்றில் ஒரு பங்கு நேரத்துக்குள்ளே வானதியின் உள்ளத்தில் தோன்றின. ''வாயு வேகம் மனோ வேகம்'' என்று சொல்வது வெறும் வார்த்தை அன்று. எல்லா வேகங்களுக்குள்ளும் சிந்தனையின் வேகம்தான் அதிகமானது.

இவ்விதம் எண்ணமிட்ட நேரத்திலேயே தன்னுடைய கடமை இன்னதென்பதை வானதி நிச்சயித்து விட்டாள். மேற் கிளையிலிருந்து ஒரு கிளை கீழே இறங்கி, அதன் மீது படுத்த வண்ணம் கைகளைக் கீழே நீட்டினாள். பூங்குழலியின் தலைக் கூந்தலை வாரிப் பிடித்துக் கொண்டாள். பூங்குழலி மேல் நோக்கிப் பார்த்தாள். வானதியின் கைப்பிடியிலிருந்து அவள் தப்பிச் செல்ல முயலவில்லை. ஒரு கரத்தை மேலே

நீட்டினாள். வானதி இப்போது அந்தக் கரத்தைப் பிடித்துக் கொண்டாள். பூங்குழலி வெள்ளத்திலிருந்து மேலே எழும்பினாள். வானதி இருந்த கிளையிலேயே அவளும் தாவி ஏறினாள். இரண்டு பேரையும் தாங்க முடியாமல் அந்தக் கிளை வளைந்தது. பூங்குழலியின் ஒரு கையை விட்டு விடாமல் வானதி மேற் கிளைக்குத் தாவினாள். பூங்குழலியும் மேலே ஏற முயன்றாள். அந்த முயற்சியில் அவளுடைய கால்கள் தடுமாறின. மறு கணத்தில் அவள் மரக் கிளைக்கும் நதி வெள்ளத்துக்கும் இடையில் தொங்கிக் கொண்டிருந்தாள். அவளுடைய ஒரு கையை மட்டும் வானதியின் இரு கரங்களும் கெட்டியாகப் பற்றிக் கொண்டிருந்தன.

மரத்தின் வேர்களுக்கு மத்தியில் கிடந்த முதலை வெளிப்புறப்படுவதற்குச் சிறிது நேரம் ஆயிற்று. இப்போது அது வெளி வந்து விட்டது.

மரக் கிளையிலிருந்து தொங்கிய உருவத்தைப் பார்த்துவிட்டு, வாயை மறுபடியும் அகலமாகத் திறந்தது.

பூங்குழலியின் உடலும் உயிரும் ஊசலாடிக் கொண்டிருந்தன.

வானதியின் மெல்லிய கரங்கள் பூங்குழலியின் வைர உடலின் கனத்தினால் இற்று விழுந்து விடும் போலிருந்தன. அவளுடைய உள்ளமோ எந்தக் கணத்தில் பூங்குழலி தன் கையிலிருந்து நழுவி முதலையின் வாயில் விழுந்து விடுவாளோ என்ற எண்ணத்தினால் துடிதுடித்தது.

அத்தகைய விபத்து நேர்ந்துவிட்டால் பிறகு இளவரசரின் முகத்தை அவள் ஏறிட்டுப் பார்க்கவே முடியாது. பூங்குழலி விழும்போது அவளும் கூட விழுந்து உயிரை விட்டு விடுதலே மேலானது. அப்படித்தான் செய்ய வேண்டும்.

அதோ யானை நெருங்கி வந்துவிட்டது. இளவரசர் அதன்மேல் வருகிறார். அவர் வந்து காப்பாற்றும் வரையில் பூங்குழலியை விட்டு விடாமல் இருக்க இந்தக் கரங்களில் சக்தி இருக்குமா...?

யானை ஆற்றங்கரையில் வந்து மரத்தடியில் நின்றது. மறுபடியும் ஒரு தடவை பிளிறியது. அந்தச் சத்தத்தைக் கேட்டு முதலை அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தது. என்ன நினைத்துக் கொண்டதோ என்னவோ மறுபடியும் மரத்தின் வேர்களுக்கு மத்தியில் சென்று படுத்துக் கொண்டது.

வானதியும் மரக் கிளையின் மீது குனிந்தவண்ணம் யானையைப் பார்த்தாள். அதன்மேலிருந்தவரையும் பார்த்தாள். ஆம்; அவர் இளவரசர்தான்! பொன்னியின் செல்வர்தான்!

''யானைப் பாகா! யானைப் பாகா! அன்றொரு நாள் பறவைக் குஞ்சுகளைக் காப்பாற்றியது போல் இன்றைக்கு இந்தப் பேதைப் பெண்களைக் காப்பாற்று!'' என்று தனக்கு மட்டும் கேட்கக்கூடிய மெல்லிய குரலில் கூறிக் கொண்டாள்.

முடியாது; இனி இந்த ஒடக்காரப் பெண்ணைத் தாங்க முடியாது!

இனி ஒரு நிமிஷம் தாமதித்தாலும் தோள்பட்டைகளிலிருந்து கைகள் தனியாகப் பிய்ந்து விழுந்து விடும்!

அப்பப்பா! இவள் பெயர் பூங்குழலி! ஆனால் என்ன கனம் கனக்கிறாள்? இரும்பினால் செய்த உடம்பு போல அல்லவா இருக்கிறது!

'யானைப் பாகா! யானைப் பாகா! சீக்கிரம் வர மாட்டாயா?...'

பூங்குழலி 'கிறீச்' என்று கத்தினாள். அதைக் கேட்ட வானதி அவளை முதலை பிடித்துக் கொண்டதாக எண்ணினாள். சொல்ல முடியாத பயங்கரம் அவள் மனத்தில் குடி கொண்டது. கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

அவளுடைய கைகளைப் பிடித்துக் கீழ்நோக்கி இழுத்துக் கொண்டிருந்த கனம் மேலும் அதிகமாயிற்று.

முதலைதான் பூங்குழலியைப் பிடித்து இழுப்பதாக எண்ணிக் கண்ணை மூடிய வண்ணம் அவளை இன்னும் கெட்டியாகப் பிடித்துமேலே தூக்க முயன்றாள்.

''கையை விடு! வானதி! கையை விடு!'' என்று செவியில் அமுதென ஒலித்த இளவரசரின் குரல் கேட்டது.

இன்னது செய்கிறோம் என்று தெரியாமல் கையை விட்டாள்.

அவளுடைய தோள்களைப் பிய்த்து இழுத்த பாரம் நீங்கியது.

கண்களைத் திறந்து பார்த்தாள்.

பூங்குழலியைக் கஜேந்திரன் துதிக்கையினால் சுழற்றிப் பற்றி எடுத்துக் கரையிலே இறக்கி விடுவதைக் கண்டாள்.

பூங்குழலியின் கண்கள் மூடியிருந்தன.

யானைத் துதிக்கை அவள் மீது சுற்றிய போதுதான் அவள் அவ்வாறு 'கிறீச்' சிட்டுக் கத்தியிருக்க வேண்டும்.

அதே மாதிரி தானும் ஒரு தடவை கத்திவிட்டு மூர்ச்சை யடைந்தது வானதிக்கு நினைவு வந்தது.

இப்போது அதைக் காட்டிலும் பன்மடங்கு அபாயகரமான நிலைமையாயிருந்தும், தான் பயப்படாமலும் பிரக்ஞை இழக்காமலும் இருப்பதை நினைக்க அவளுக்கே வியப்பா யிருந்தது.

தன்னுடைய தைரியத்தைப் பார்த்து மெச்சிப் பாராட்ட இளைய பிராட்டி இங்கே இல்லையே? ஆயினும் பாதகமில்லை. எப்படியும் ஒருநாள் அவருக்குத் தெரியாமற் போகாது. இப்போது என்னுடைய கதி என்ன? பூங்குழலியை மட்டும் அழைத்துக் கொண்டு என்னை இந்த மரத்தின் மேலேயே விட்டு விட்டு இளவரசர் போய்விடுவாரா?

அவ்விதம் அவர் செய்தால் அது என்னுடைய அசட்டுத்தனத்துக்குச் சரியான தண்டனையாகத்தான் இருக்கும்!

இல்லை, இல்லை! கஜ ராஜனின் துதிக்கை மறுபடியும் அவளை நோக்கி நீண்டு கொண்டு வந்தது.

வானதி மீண்டும் ஒரு தடவை கண்களை மூடிக் கொண்டாள்.

மறுகணம் அவள் மரக் கிளையிலிருந்து தூக்கப்பட்டுக் கெட்டியான தரையில் விடப்பட்டதை உணர்ந்தாள்.

கண் விழித்துப் பார்த்தபோது தான் நதிக் கரையில் பூங்குழலிக்கு அருகில் நிற்பதைக் கண்டாள்.

தன்னை அறியாமல் எழுந்த அன்புடனும் ஆர்வத்துடனும் அந்த ஓடக்காரப் பெண்ணைக் கட்டித் தழுவிக் கொண்டாள் வானதி.

பூங்குழலி கண்களில் நீர் ததும்ப, தழுதழுத்த குரலில், "இளவரசி! இன்று என் உயிரைக் காப்பாற்றினீர்கள். நான் உங்களை நதி வெள்ளத்தில் மூழ்கிப் போகாமல் காப்பாற்றி அழைத்துப் போக வந்தேன். அதற்கு மாறாக நீங்கள் என்னை முதலை வாயிலிருந்து காப்பாற்றினீர்கள். இந்த நன்றியை என்றென்றும் மறக்க மாட்டேன்!" என்றாள்.

"பூங்குழலி! நானா உன்னைக் காப்பாற்றினேன்? உன்னையும் என்னையும் அந்த யானைப் பாகன் அல்லவா காப்பாற்றினார்? அவரிடம் உன் நன்றியைக் கூறு!" என்றாள் வானதி.

"என் உயிர் மேல் எனக்கு அவ்வளவாக ஆசை ஒன்றுமில்லை. ஆனால் என் அத்தை அவளுடைய செல்வப் புதல்வரிடம் ஓர் அவசரச் செய்தி சொல்லும்படி என்னை அனுப்பினாள். அதைச் சொல்லுவதற்கு முன்னால் நான் செத்துப் போக விரும்பவில்லை!" என்றாள் பூங்குழலி.

யானையின் மேலிருநதவரை வானதி நிமிர்ந்து பார்த்தாள். ஏதோ ஒரு விஷமக் குதூகலம் அவளை அச்சமயம் பற்றிக் கொண்டிருந்தது.

"யானைப் பாகா! யானைப் பாகா! எங்களை உன் யானை மேல் ஏற்றிக் கொண்டு போகிறாயா?" என்று கேட்டு விட்டுக் கலீர் என்று சிரித்தாள்.

இருபத்திரண்டாம் அத்தியாயம்

மகிழ்ச்சியும் துயரமும்

வானதியின் சிரிப்பொலியுடன் கலந்த வார்த்தைகளைக் கேட்டுவிட்டு இளவரசரும் சிரித்துக் கொண்டே யானையின் மேலிருந்து கீழே இறங்கினார்.

"ஆகா! யானை ஏற்றம் என்பது மிகவும் கடினமான காரியம். இராஜ்ய சிம்மாசனத்தில் ஏறுவது போலத்தான். யானைமேல் ஏறுவதும் கஷ்டம்; அதன் மேல் உட்கார்ந்திருப்பதும் கஷ்டம்; யானை மேலிருந்து இறங்குவது எல்லாவற்றையும் விடக் கஷ்டம். ஆயினும் அந்தக் கஷ்டங்களையும் சில சமயம் ஒருவன் அனுபவிக்க வேண்டியிருக்கிறது!" என்றார் பொன்னியின் செல்வர்.

"சிலர் அந்தக் கஷ்டங்களை மிக அற்பமான காரணங்களுக்காகக் கூட அநுபவிக்கிறார்கள். பறவைக் குஞ்சுகளைக் காப்பாற்றுவதற்காக யானை மேல் ஏறிக் கொண்டு ஓடி வருகிறவர்களும் உண்டு!" என்றாள் வானதி.

"அந்தச் சம்பவம் உனக்கு இன்னும் நினைவிருக்கிறதா, வானதி! நீ அதைப் பற்றி இன்றுவரை பேச்சே எடுக்காததினால் மறந்து விட்டாயோ என்று எண்ணினேன்!" என்றார் இளவரசர்.

"உலக மெல்லாம் சுற்றி அலைந்து அநேக வீரச் செயல்களில் ஈடுபடுகிறவர்கள் மறந்து விடுவார்கள். அரண்மனையிலேயே இருக்கும் பேதைப் பெண்ணுக்கு அதை ஞாபகம் வைத்துக்கொள்வதை விட வேறு என்ன வேலை? தாங்கள் அன்றைக்கு யானை மேல் ஏறிக் கொண்டு வந்ததும் நினைவிருக்கிறது; நான் கொடும்பாளூர்ப் பெண் என்று சொன்னதும் தாங்கள் முகத்தைச் சுருக்கிக்கொண்டு திரும்பிப் போனதும் நினைவில் இருக்கிறது!"

"அதற்கு அப்போது காரணம் இருந்தது வானதி!"

"அந்தக் காரணம் இப்போதும் இருக்கிறது, ஐயா! தாங்கள் உலகம் ஆளும் சக்கரவர்த்தியின் புதல்வர். சோழ வள நாட்டின் கண்ணின் மணி போன்ற பொன்னியின் செல்வர்.

நாளே பொட்டைக்காட்டுப் பிராந்தியத்தில் பிறந்து வளர்ந்தவள். சிற்றரசர் குலமகள்; அதிலும் போரில் இறந்து போனவருடைய அநாதை மகள்!...''

''வானதி! நீ எனக்கு அநீதி செய்கிறாய்! நியாயம் அற்ற வார்த்தை கூறுகிறாய்! போனால் போகட்டும்! நான் தஞ்சைக்கு அவசரமாகப் போக வேண்டும்! சீக்கிரம் சொல்! நீ எப்படி இங்கே வந்து சேர்ந்தாய்? தனியாக ஏன் வந்தாய்? ஓட்டுக் கூரை மேல் மிதந்து வந்தாயாமே? இந்தப் பெண் இங்கே எதற்காக வந்தாள்? எப்படி இத்தகைய பிராணபத்தில் சிக்கிக் கொண்டாள்?...''

''நான் ஒருத்தி இங்கே நின்றுகொண்டிருப்பது தங்களுக்கு ஞாபகம் வந்திருப்பது பற்றிச் சந்தோஷம். ஒரு நிமிஷம் தனியாகப் பேச அவகாசம் கொடுத்தால் நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டுப் போயே போய் விடுவேன்!'' என்றாள் பூங்குழலி.

அந்த இரண்டு பெண்களும் அச்சமயம் இளவரசரின் முன்னால் நேருக்கு நேர் நின்றபோது, எப்படியோ அவர்களுக்கு அசாதாரண தைரியமும் வாசாலகமும் ஏற்பட்டிருந்தன.

''சமுத்திர குமாரி! உன்னை மறந்து விட்டேன் என்றா நினைக்கிறாய்? அது எப்படி முடியும்? நீதான் நான் கூப்பிடக் கூப்பிட நின்றுகூடப் பதில் சொல்லாமல் படகைச் செலுத்திக் கொண்டுவந்தாய். அப்படி அவசரமாக வந்தவள் மரக்கிளைக்கும் முதலையின் வாய்க்கும் நடுவில் நின்று ஊஞ்சலாடிக் கொண்டிருந்ததை என் ஆயுள் உள்ளளவும் மறக்க முடியாது!'' என்று சொல்லிவிட்டு இளவரசர் சிரித்தார்.

''உன்னைத் தூக்க முடியாமல் தூக்கிப் பிடித்துக் கொண்டு வானதி பட்டுக் கொண்டிருந்த அவஸ்தையையும் நான் மறக்க முடியாது. ஆனால் நீங்கள் இருவரும் இங்கே எப்படி வந்து சேர்ந்தீர்கள்? எதற்காக? யாராவது ஒருவர் சீக்கிரம் சொல்லுங்கள்!''

''பொன்னியின் செல்வ! நானும் தங்கள் திருத் தமக்கையாரும் தங்களை வழியில் கண்டு நிறுத்தித் தஞ்சாவூருக்குப் போவதைத் தடை செய்வதற்காக வந்தோம். தாங்கள் தற்சமயம் தஞ்சாவூர் வந்தால், அங்கே பெரிய யுத்தம் மூளும் என்று இளைய பிராட்டி அஞ்சுகிறார். அதற்கு முன்னால் தங்களைச் சந்தித்துப் பேச விரும்புகிறார்...''

''இளைய பிராட்டி இப்போது எங்கே?''

''குடந்தையில் இருக்கிறார்...''

''நீமட்டும் எப்படி இங்கே வந்தாய்?''

''வழியில் குடந்தை ஜோதிடர் வீட்டில் நானும் இளைய பிராட்டியும் சிறிது நேரம் தங்கினோம். அந்தச் சமயத்தில் காவேரி கரையை உடைத்துக் கொண்டு வந்து ஜோதிடர் வீட்டையே அடித்துக் கொண்டு வந்து விட்டது. இளவரசே! காவேரித் தாய் தங்களைக் குழந்தைப் பிராயத்தில் காப்பாற்றியதாகச் சொல்கிறார்கள். தங்களுக்கு இந்தப் பொன்னி நதியின் பேரில் எவ்வளவோ ஆசை உண்டு என்பதையும் அறிவேன். ஆனால் இன்று அந்த நதியினால் நாடு நகரங்களும், மக்கள், மிருகங்களும் பட்ட கஷ்டத்தை நினைப்பதற்கே பயமாயிருக்கிறது. காவேரித் தாய் மிகக் கொடுமையானவள் என்று சொல்லத் தோன்றுகிறது....''

''வானதி! காவேரி அன்னையின்பேரில் அப்படிப் பழி சொல்லாதே! இந்த மாதரசிக்கு எங்கள் சோழ நாட்டின் பேரில் அவ்வளவு ஆசை. அந்த ஆசை வரம்பு மீறிப் போகும்போது கரையை உடைத்துக்கொண்டு கிளம்பிவிடுகிறாள். இதை அறியாதவர்கள் அன்னையின் பேரில் வீண் பழி சொல்லுகிறார்கள். ஏன்? கரையை மீறிக்கொண்டு வருவதற்காகச் சமுத்திரராஜன் பேரில்கூடச் சிலர் குறை சொல்கிறார்கள். ஆனால் பூங்குழலி அப்படிக் கடலரசன் பேரில் குறை சொல்ல மாட்டாள்!'' என்றார் இளவரசர்.

''மன்னியுங்கள்! நானும் இனிக் காவேரி அன்னையின் பேரில் குற்றம் சொல்லவில்லை. நானும் தங்கள் தமக்கையும் குடந்தை ஜோதிடர் வீட்டில் இருந்தபோது திடீரென்று காவேரியின் ஆசை பொங்கிப் பெருகி விட்டது. தங்கள் தமக்கை முதலியவர்கள் ஓடிப் போய்க் கோவில் மண்டபத்தின் பேரில் ஏறிக் கொண்டார்கள். நான் என் அசட்டுத் தனத்தினால் மண்டபத்தின்பேரில் ஏறத் தவறிவிட்டேன். ஜோதிடர் வீட்டு ஓட்டுக் கூரையைப் பிடித்துக் கொண்டு மிதந்து வந்தேன்....''

''உன்னைக் காப்பாற்றுவதற்காகப் பூங்குழலி படகில் ஏறிக்கொண்டு வந்தாளாக்கும். அழகாய்த்தானிருக்கிறது! உங்கள் இருவரையும் சேர்த்து இந்தக் கஜேந்திரன் காப்பாற்ற வேண்டியதாயிற்று. இந்த யானையின் அறிவே அறிவு! உங்கள் இருவரையும் அதன் துதிக்கையில் பூமாலையை எடுப்பது போல் அசங்காமல் கசங்காமல் எடுத்துச் சற்று முன் கரையில் விட்டது! இன்று காலையில் இதே யானை, கையில் அங்குசத்துடன் நேரங் கழித்து ஓடி வந்த யானைப்

பாகனைத் தூக்கிச் சுழற்றி வெகு தூரத்தில் போய் விழும்படி எறிந்தது! அவன் உயிர் பிழைத்திருப்பதே துர்லபம்!''

''ஐயோ! அது என்ன? நானே தங்களிடத்தில் அதைப் பற்றிக் கேட்க வேண்டும் என்றிருந்தேன்...''

''என்னை நீ என்ன கேட்க வேண்டுமென்றிருந்தாய்?''

''யானைப் பாகனாலும் அங்குசத்தாலும் தங்களுக்கு ஏதாவது இங்கு நேர்ந்ததா என்று கேட்க விரும்பினேன்.''

''இங்கு நேர இருந்தது என்பது உண்மைதான்; அது உனக்கு எப்படித் தெரிந்தது? ஜோதிடர் சொன்னாரா என்ன? அந்தப் பித்து இளைய பிராட்டிக்கு இன்னும் போகவில்லையா?''

''ஜோதிடர் சொல்லவில்லை. சொன்னாலும் நாங்கள் நம்பி யிருக்க மாட்டோம். பெரிய பழுவேட்டரையர் சொன்னார்!''

''என்ன? என்ன? சொன்னது யார்?''

''ஆம், இளவரசே! தனாதிகாரி பெரிய பழுவேட்டரையர்தாம் சொன்னார். நாங்கள் ஜோதிடர் வீட்டில் இருந்தபோது திடும்பிரவேசமாக அவர் உள்ளே நுழைந்து வந்தார். தங்களுக்கு வரக்கூடிய ஆபத்தைப் பற்றிச் சொன்னார். விஷந் தடவிய அங்குசத்தைப் பற்றியும் சொன்னார்...!''

''ஆகா! இது பெரிய அதிசயந்தான்! அவருக்கு எவ்விதம் தெரிந்தது? அவரும் ஜோதிடர் ஆகிவிட்டாரா? அல்லது ஒரு வேளை... எல்லாரும் சொல்வது போல் அவரே இந்த ஏற்பாடு செய்தாரா?''

''இல்லை, இளவரசே! அவர் செய்த ஏற்பாடல்ல. பாண்டிய நாட்டுச் சதிகாரர்கள் இரகசியமாகப் பேசிக்கொண்டிருந்ததை ஒட்டுக் கேட்டதினால் அறிந்து கொண்டாராம்...!''

''ஓகோ! இன்னும் ஏதாவது அவர் சொன்னாரா?''

''நினைப்பதற்கும் சொல்லுவதற்கும் பயங்கரமா யிருக்கிறது. தங்களையும் தங்கள் தந்தையையும் மூத்த இளவரசரான ஆதித்த கரிகாலரையும் ஒரே நாளில் யமனுலகம் அனுப்ப அந்தச் சதிகாரர்கள் திட்ட மிட்டிருப்பதாகச் சொன்னார். அவர் ஆதித்த கரிகாலரைக் காப்பாற்றுவதற்காகக் கடம்பூருக்கு விரைந்து போய்விட்டார். தங்களுக்கும் சக்கரவர்த்திக்கும் இளையபிராட்டி எச்சரிக்கை செய்ய வேண்டும் என்பதாகச் சொல்லிவிட்டுப் போனார்...''

''ஆகா! அவருடைய எச்சரிக்கை என் ஒருவன் விஷயத்தில் உண்மையாயிருந்தபடியால் மற்றவர்கள் விஷயத்திலும் உண்மையாகத்தான் இருக்க வேண்டும்!... சமுத்திர குமாரி! நீ ஏதோ சொல்ல வேண்டும் என்றாயே?''

''ஆம், இளவரசே! ஈழத்து ஊமை ராணி தங்களை உடனே தஞ்சைக்கு அழைத்து வரும்படி என்னை அனுப்பி வைத்தார்...''

''ஆகா! அதைப் பற்றி உன்னிடம் கேட்க மறந்தே போனேன். ஈழத்து ராணிக்காகவே நான் இவ்வளவு அவசரமாகப் புறப்பட்டு வந்தேன். அவரைத் தஞ்சாவூருக்கு யாரோ பலவந்தமாகக் கட்டி இழுத்து வந்தார்களாமே? அது உண்மையா?''

''உண்மைதான், ஐயா! ஆனால் முதன் மந்திரி அநிருத்தர் நல்ல நோக்கத்துடனேதான் அவ்விதம் செய்தார்.''

''ஓகோ! அநிருத்தர் வேலையா? என் தந்தையிடம் சேர்ப்பிப்பதற்காக அழைத்துச் சென்றிருக்க வேண்டும். பூங்குழலி! முதன் மந்திரியின் நோக்கம் வெற்றி பெற்றதா? அவர்கள்.... சக்கரவர்த்தியும் ஈழத்து ராணியும் சந்தித்தார்களா?''

''ஆம், சந்தித்தார்கள்!''


''என் வாழ்க்கை மனோரதம் நிறைவேறிவிட்டது. இதைக் காட்டிலும் சந்தோஷமான செய்தி எனக்கு வேறு எதுவும் இல்லை. என் பெரியன்னை அருகில் இருக்கும்வரையில் என் தந்தையின் உயிருக்கு அபாயமும் இல்லை. அந்த மாதரசிக்கு அபூர்வமான வருங்காலத் திருஷ்டி உண்டு என்பது உனக்குத் தெரியுமே, பூங்குழலி!''

''ஆம், எனக்கு அது தெரியும். ஈழத்து ராணி இருக்கும்வரையில் சக்கரவர்த்திக்கு அபாயம் இல்லை. ஆனால்...!''

''ஆனால் என்ன? ஏன் தயங்கி நிற்கிறாய், சமுத்திர குமாரி!''

''சொல்லவே தயக்கமாக இருக்கிறது. நான் எழவில்லை. ஈழத்து ராணி தம்முடைய இறுதிக் காலம் நெருங்கிவிட்டதாக எண்ணுகிறார். கடைசியாகக் கண் மூடுவதற்கு முன்னால் தங்களை ஒரு முறை பார்க்க விரும்புகிறார்!'' என்றாள்.

''தெய்வமே! இது என்ன சொல்லுகிறாய்? சந்தோஷமான செய்தியைச் சொல்லிவிட்டு உடனே இந்தப் பேரிடி போன்ற செய்தியையும் சொல்லுகிறாயே! இனி நான் ஒருகணமும் தாமதிப்பதற்கில்லை. வானதி! இளையபிராட்டியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதாகச் சொல்லு!'' என்றார் இளவரசர் அருள்மொழி வர்மர். (தொடரும்)



ராமாயணம்

ராஜாஜி

கண்களில் நீர் மல்க பரதனைப் பற்றியும் தந்தையைப் பற்றியும் சொல்லி விட்டு மறுபடியும் விஷயத்தைப் பற்றிப் பேசினான் ராமன். "ராவணனைக் கைவிட்டதுபோலவே விபீஷணன் நம்மையும் கைவிடுவான் என்கிற வாதத்தில் நான் நியாயம் காணவில்லை. நம்மைக் கைவிடுவதற்கு என்ன காரணம் விபீஷணனுக்கு உண்டாகும்? அந்த ராஜ்யத்தில் நாம் ஆசை வைத்திருக்கிறோமா? இல்லை. நாம் வெற்றியடைந்தால் தானே இவனுடைய ஆசை நிறைவேறும்? இந்தக் காரணங்களால் நாம் இந்த விபீஷணனைச் சேர்த்துக்கொள்ள மறுத்து விடுவது தவறாகும். நான் சொன்ன இவையெல்லாம் நீதி சாஸ்திர விஷயம்.

"உண்மையில் நல்லவனோ கெட்டவனோ ஒருவன் 'சரணம்' என்று என்னிடம் வந்தால் அவனை நான் தள்ளிவிட முடியாது. இது என் பிறவித் தருமம். அதனால் நான் நஷ்டமடைந்தாலும் அதை நான் பொருட்படுத்த மாட்டேன். என் உயிருக்கு அதனால் அபாயமாயினும் இந்தத் தருமத்தை நான் காப்பாற்றித்தான் ஆக வேண்டும். விட்டுவிட மாட்டேன். இவனால் என்ன அபாயம் எனக்கு உண்டாக முடியும்? இதற்கு நான் பயப்படவில்லை. ராவணனே வந்து சரணம் என்றாலும் பரீட்சை செய்யாமல் ஒப்புக் கொள்வேன். அப்படி இருக்க அவன் தம்பியை நான் எப்படித் தள்ளுவேன்? போய் விபீஷணனை அழைத்து வாருங்கள்" என்றான் ராமன்.

"ராமசந்திரனே! நான் தெளிந்தேன். அழைத்து வருகிறேன். விபீஷணனும் எங்களைப் போல் உமக்குப் பிரிய நட்புக் கொண்டவன் ஆகுக!" என்று சொல்லிச் சுக்ரீவன் விபீஷணனிடம் சென்றான்.

*   *   *

ராவணனைத் துறந்து வந்த விபீஷணனைச் சக்கரவர்த்தித் திருமகன் தன் படைக்குள் சேர்த்துக் கொண்ட கட்டமானது வைஷ்ணவ சம்பிரதாயத் தலைவர்களுக்குப் பாரதத்தில் கீதையைப் போலவே ஒரு தனி சாஸ்திரமாய் வழங்கி வருகிறது. 'எம்பெருமானை யார் சரண் புகுந்தாலும் தோஷங்களைப் பாராமல், சந்தேகம் கிளப்பாமல் ஒப்புக்கொள்வான். சகல தோஷங்களும், அந்தச் சரணாகத முயற்சியிலேயே வெந்து சாம்பலாகிப் போம்' என்கிற தத்துவத்துக்கு விபீஷண கட்டம் சாஸ்திரமாக அமைந்து விட்டது. பெரும் பாவமோ வேறு குற்றமோ செய்தவர்கள், அபவாதத்துக்கு ஆளாகித் தவிக்கிறவர்கள், எல்லாரும் இந்தச் சரணாகதக் கொள்கையை அமிருதமாகக் காண்




பார்கள். சரணாகதி செய்தவனுக்கு உய்வு உண்டு. எத்தகையவனுக்கும் உய்வு உண்டு என்பது வைஷ்ணவ சம்பிரதாயத்துக்கு உயிர்நாடி.

'வைஷ்ணவ சம்பிரதாயத்துக்கு' என்று சொன்னேன். தவறு. நம்முடைய நாட்டில் மக்கள் அனுசரித்து வரும் எல்லாச் சம்பிரதாயத்துக்குமே இது உயிர்நாடி. ஏன்? உலகத்தில் மக்கள் அனுசரித்து வரும் சகல மத சம்பிரதாயங்களுக்குமே இது உயிர் நாடி என்றும் சொல்லலாம். ஒவ்வொரு மார்க்கத்திலும் போதகர்கள் இதையே அதிகமாக வற்புறுத்திச் சொல்வார்கள். 'பயப்படாதே, கவலைப்படாதே, எல்லாப் பாபங்களையும் நான் தீர்ப்பேன்' என்று அருச்சுனனுக்கு மட்டும் அல்ல கண்ணன் சொன்னது. உலகத்தில் எந்தப் பிரதேசத்தில் அந்தக் கண்ணன் அவதரித்து இறங்கி நின்ற போதிலும், இதையே சொல்லி வந்திருக்கிறான்.

ராமாயணத்தில் ராவணன் தம்பியைச் சக்கரவர்த்தித் திருமகன் சேர்த்துக் கொண்ட வால்மீகி சித்திரத்தை இரண்டு கூறாகப் பிரித்துக் கொள்ளலாம். நீதி சாஸ்திரப்படி பகைவருடைய கூட்டத்திலிருந்து வந்த ஒருவனைச் சேர்த்துக் கொள்வதற்கு முன் என்ன ஆராய வேண்டுமோ, எப்படி ஆராய வேண்டுமோ, அதை எடுத்து முனிவர் பல வழிகளில் காட்டியிருக்கிறார். வானர ராஜன் வாய் வழியும் சம்ஸ்கார சம்பன்னனான, நல்ல பண்பாட்டுக்குச் சிகரமான ஹனுமான் வாய் மொழியாகவும், தருமத்தில் ஸ்திரமாக நிற்கும் ஸ்ரீராமன் வார்த்தையாகவும், சுருக்கமாகவும் தெளிவாகவும் காட்டியிருக்கிறார்.

■நீதி சாஸ்திர விளக்கத்துடன் ராமனுடைய சம்ஸ்கா ம், அதாவது பயிற்சியாலும், சகஜமாகவும் பெற்ற நற்குணத்தையும் காண்கிறோம். ''என்னுடைய தருமம் — யார் சரண் புகுந்தாலும், 'இல்லை





போ' என்று என்னால் சொல்ல முடியாது!'' என்று ராமன் சொன்னான். இதுவே ராமசந்திரனுடைய தருமம். 'ராவணனே வந்து சரணம் என்றால் தள்ளுவேனா?' என்று கேட்கிறான் சுக்ரீவனை.

ராமசந்திரனை ஈசுவர அவதாரமாக வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு இந்த வாக்கியம் ஒரு தனி சாஸ்திரமாகி விட்டது. பின்னால் கீதையில் 'கவலைப்படாதே, மா சுச:' என்று கண்ணன் சொல்லி முடித்த சாஸ்திரத்தையே சக்கரவர்த்தித் திருமகனும் விபீஷண கட்டத்தில் சுக்ரீவனுக்குச் சொன்னான். பாவங்கள் மலிந்த உலகத்துக்கு உயிரும் ஒளியும் தரும் மருந்து.

83. சேது பந்தனம்

இதன் மத்தியில் ராவணன் ஒரு பைத்தியக்காரப் பிரயத்தனம் செய்தான். ஒரு சாரனை அனுப்பிச் சுக்ரீவனைக் கலைக்கப் பார்த்தான். சுகன் என்ற அந்த அரக்கன் ஆகாய மார்க்கமாக வந்து சுக்ரீவனைத் தனியாகக் கண்டு அவனுக்குச் சொன்னான்:

''லங்கேசனான ராவணன் உம்மிடம் அன்பு கூர்ந்து என்னை அனுப்பியிருக்கிறான். நீரும் அரசன். ராவணனும் அரசன். ஊரிலிருந்து துரத்தப்பட்ட இந்த ராமனுடன் நீர் சேர வேண்டிய அவசிய மொன்றுமில்லை. ராமனுடன் சேர்ந்து ராவணனுடைய தீராப் பகையை ஓர் அரசனாகிய நீர் ஏன் சம்பாதித்துக் கொள்ள வேண்டும்? நீர் ராவணனுக்கு தம்பியைப் போன்றவர். ராமனுடைய மனைவியை ராவணன் விரும்பி அவன் ஏதேனும் செய்தால் அது உமக்கு என்ன சம்பந்தம்? உமக்கு அதனால் என்ன நஷ்டம்? நீர் சரியாக யோசித்து விவேகமாக நடந்து கொள்வீராக. நீரும் உம்முடைய படையும் கிஷ்கிந்தைக்கு உடனே திரும்பிப் போவதே விவேகம்.''

இவ்வாறு சுக்ரீவனைக் கலைக்கப் பார்த்தான் ராவணன்.

சுக்ரீவன் சாரனுக்குச் சொன்னான்: ''ஹே நீசனே! போய் உன் அரசனுக்குச் சொல்லு. 'நீ எனக்கு அண்ணனும் அல்ல; தம்பியுமல்ல. நீ துஷ்டன். ராமன் என் நண்பன். அவனுக்கு நீ சத்துருவானாய். ஆனபடியால் எனக்கும் நீ சத்துருவானாய். நீயும் உன் கூட்டமும் சீக்கிரம் அழியப் போகிறீர்கள். மூடனே! ராமனை விரோதம் செய்து கொண்டு எதிர்த்து நீ பிழைக்கப் போவதில்லை. இதைத் தெரிந்து கொள். நீ எங்கே ஓடி மறைந்தாலும் பிழைக்க மாட்டாய்!' இவ்வாறு நான் சொன்னேன் என்று உன் அரசனுக்குச் சொல்.''

இவ்வாறு சுக்ரீவன் அந்தச் சாரனுக்குச் சொல்லியதும் வானரர்கள் அவனைப் பிடித்து இம்சை செய்தார்கள். ராமன் உத்தரவால் அவனைக் கொல்லாமல்விட்டு விட்டார்கள். அவனும் லங்கைக்கு வேகமாய்த் திரும்பிப் போய் விட்டான்.

விபீஷணன் சரண் புகுந்தவுடன் ராமனுடைய உத்தரவின் பேரில் லக்ஷ்மணனும் சுக்ரீவனும் அங்கேயே விபீஷணனுக்கு லங்கா ராஜ்யப் பட்டம் தந்து, சமுத்திர ஜலத்தைக் கொண்டு பட்டாபிஷேகமும் செய்து விட்டார்கள். விபீஷணன் ராமனுடன் நட்புப் பிரதிக்ஞை செய்து கொண்டான். 'ராவணனைக் கொல்லாமல் நான் அயோத்திக்குத் திரும்புவதில்லை' என்று ராமனும் சபதம் செய்தான்.

பிறகு விபீஷணனும் லக்ஷ்மணனும் வானர ராஜனும் சமுத்திரத்தைத் தாண்டுவதைப் பற்றி யோசித்தார்கள். முதலில் சமுத்திர ராஜனை வேண்டிக் கொள்வதே மேல் என்று எல்லோரும் தீர்மானித்து ராமனிடம் சொன்னார்கள். 'அதுதான், என் எண்ணமும்' என்று ராமன் சொன்னான். கடற் கரையில் தர்ப்பைப் புல் பரப்பி, சாஸ்திர முறைப்படி ராமசந்திரன் சமுத்திர ராஜனை உத்தேசித்து உபவாசம் தொடங்கினான்.

மூன்று நாட்கள் அன்ன ஆகாரமின்றி மௌனமாக விரதமிருந்து ராமன் சமுத்திர ராஜனைப் பூஜித்தான். சமுத்திரம் கேட்கவில்லை. பிறகு ராமன் எழுந்து இனித் தன்னுடைய சக்தியைப் பிரயோகித்தே இந்தக் காரியத்தை முடிக்க வேண்டும் என்று தீர்மானித்து வில்லும் மந்திரபூர்வமாக எறியவேண்டிய பாணங்களும் கொண்டு வரும்படியாக லக்ஷ்மணனுக்குச் சொன்னான்.

சமுத்திரத்தின் மேல் பாணப் பிரயோகம் செய்ய ஆரம்பித்தான். பூமி அதிர்ந்தது. கடலில் கலக்கம் ஏற்பட்டது. சமுத்திர ராஜனால் அதைத் தாங்க முடியவில்லை. மேரு மலைமேல் உதய சூரியன் ஜொலிப்பது போல் சமுத்திர ராஜன் பிரசன்னமாகி ராமனுக்குக் கைகூப்பி நின்றான். **(தொடரும்)**

பழகு இசை

படரஸ்கி என்னும் பியானோ வித்வான் தினமும் பியானோ வாசித்துப் பழகுவார். தினசரி வாசித்துப் பழகும் முக்கியத்துவத்தை அவர் இப்படி விளக்கினார் :

'' ஒரு நாள் பழகத் தவறினால் அதன் விளைவை நானே உணருகிறேன்; இரண்டு நாட்கள் தவறினால் விமர்சகர்கள் அதைக் கண்டு கொள்கிறார்கள்; மூன்று நாட்கள் தவறினால் அது ரசிகர் கூட்டத்துக்கே வெட்ட வெளிச்சமாகி விடுகிறது. தகவல்: கன்னிசா

ஆதாரம்: இல்லஸ்ட்ரேடட் வீக்லி




மோகனச்
சிரிப்பில்
மிதந்ததுண்டோ?
ஃபண்டா ஆரஞ்சு
சுவை இனிதே...
பருகிடவே
எடுக்காதோ தாகம்!
ஃபண்டா கோகா-கோலா
கம்பெனியின் தயாரிப்பு
CMCF-3-152- TAM



சுழிக்காற்று

அத்தியாயம் ஒன்று

மரகதக் கம்பளத்திலே சிவப்பு மரவட்டை நெளிந்து செல்வது போலப் பச்சைப் பசேல் என்ற வயல் வெளிகளையும் வாய்க்கால்களையும் மாந்தோப்புக்களையும் வாழைத் தோட்டங்களையும் கீறிக் கொண்டு அந்த ரயில் ஆடி அசைந்தபடி ஊர்ந்து கொண்டிருந்தது. ஆம், அது ஊர்ந்துதான் சென்று கொண்டிருந்தது.

பட்டணத்திலே கையை நீட்டிப் பஸ்ஸை நிறுத்தி ஏறிக் கொள்வதுபோல இந்தப் பட்டிக்காட்டிலே அடிக்கொரு கிராமமாகத் தலையை நீட்டி ரயிலை

கௌசிகன்

நிறுத்தித் தங்களுக்கு உரிய மரியாதையை வசூலித்துக் கொண்டு பதில் மரியாதை செய்து வழியனுப்பின. ஆகவே இந்தப் பிராந்தியத்தில் ரயில் தன்னிச்சைப்படி வேகமாக ஓட முடியாதுதான். கிராம மக்களின் வாழ்வோடு இணைந்துவிட்ட அந்த ரயிலும் இப்படி நின்று நின்று நெடுமூச்செறிந்து கொண்டு போவதற்காக அலுத்துக் கொள்ளுவதில்லை.

அன்று அந்த வண்டியின் முதல் வகுப்புப் பெட்டியில் பிரயாணம் செய்து கொண்டு வந்த சேகர் மட்டும் அலுத்துக்கொண்டே வந்தான். அவன் இதில் வழக்கமாகப் பிரயாணம் செய்பவனில்லை. தவிர அவன் அலுத்துக் கொண்டது ரயில் வண்டியின் வேகத்தைக் குறித்தும் அல்ல. ஓர் அழகிய பெண்ணின் நினைவினால்தான் அவன் மனம் நிலைகொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தது.

அந்தப் பெட்டியில் அவனைத் தவிர வேறு யாருமில்லை — அதாவது தற்போது. சென்ற ஸ்டேஷன் வரை அவனுடன் ஓர் அழகிய பெண்ணும் பிரயாணம் செய்து வந்தாள். அதாவது அவன் காதலி மஞ்சுளாவைத்தான் சொல்லுகிறேன்!

நீங்கள் முறுவலிக்கிறது தெரிகிறது. ஆனால் நீங்கள் நினைப்பது போல உல்லாசப் பிரயாணம் செய்ய அவள் இந்தக் 'கட்டை வண்டி' ரயிலில் வரவில்லை. தன் மனத்துக்குப் பிடித்த மணாளனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாலும் சம்பிரதாயப்படி கோலாகலமாக அவள் திருமண விழாவை நடத்திக் களிக்கக் காதலனோடு கிராமத்துக்கு வந்துவிட வேண்டும் என்பதுதான் மஞ்சுளாவுக்கு அவள் தாத்தா இட்டிருந்த கட்டளை. தாத்தாவின் செல்லப் பேத்தியான அவளும் அதன்படியே தன் உள்ளங் கவர்ந்த கள்வனை— காதலனைச் சேகரைத் தேர்ந்தெடுத்தாள். ஆனால் திடீரென்று 'தந்தைக்கு உடல்நலமில்லை, உடனே புறப்பட்டு வரவும்' என்று அவள் சித்தி அடித்திருந்த தந்தியினால் தவித்துப் போன அவள் காதலனோடு கிராமத்துக்குக் கிளம்பினாள்.



முந்தின ஸ்டேஷனில் தன் தோழி யாரையோ பார்க்க வேண்டுமென்று இறங்கிய மஞ்சுளா வண்டி கிளம்பியும் வந்து ஏறவில்லை. இந்தப் பக்கத்து ஊர்களெல்லாம் அவளுக்குத் தெரிந்தவைதாம். இங்கெல்லாம் அவளுக்குச் செல்வாக்கு உண்டு. எல்லாரையும் தெரியும். என்றாலும் இளங் காதலியைப் பிரிந்திருக்க எந்தக் காதலனால்தான் முடியும்? மன நிம்மதி இல்லாமல் தவித்தான் சேகர்.

வண்டி தன் வேகத்தை மெதுவாக்கிக் கொண்டிருந்தது. இரண்டு மைலில் இன்னொரு ஸ்டேஷன். வண்டி அந்தச் சிறிய ஸ்டேஷனின் பிளாட்பாரத்துக்குள் நுழைந்தது. சேகரினால் இனியும் பேசாமல் உட்கார்ந்திருக்க முடியவில்லை. தன் காதலி வண்டியில் ஏறிவிட்டாளா அல்லது கடந்த ஸ்டேஷனிலேயே தங்கிவிட்டாளா என்பதை அறிந்து கொள்ளாமல் அவனால் அங்கு தனிமையோடு போராடிக் கொண்டு உட்கார்ந்திருக்க முடியாது. கீழே இறங்கி வண்டி முழுவதும் ஒரு முறை பார்த்து விடுவது என்ற முடிவோடு கவலை படிந்த முகத்துடனும், அலைபாயும் கண்களுடனும், வெளியே தலையை நீட்டி இங்குமங்கும் பார்த்தான். இதற்குள் வண்டியும் நீராவியைக் கொப்பளித்து விட்டு நின்றது.

சேகர் தன் முடிவுப்படி கீழே இறங்கி மஞ்சுளாவைத் தேட நினைத்துக் கதவருகில் வந்தபோது வேகமாக ஒரு பெண் ஓடி வந்து அந்த வண்டியில் — அதாவது அவன் பெட்டியில் ஏறினாள். அது அவன் காதலி மஞ்சுளா இல்லை. ஆகவே சேகர் அந்தப் பெண் உள்ளே ஏறி வர ஒதுங்கிக்கொண்டு மறுபடியும் தன் இடத்திலேயே போய் அமர்ந்து கொண்டான். கீழே இறங்கும் பரபரப்பு ஏனோ அவனிடமிருந்து போய் விட்டது. ஏறிய பெண்ணைப் பார்த்தான்.

தூய வெள்ளை வாயில் புடவை. ஒரு வேளை நர்ஸாக இருக்குமோ? கட்டமைந்த உடல். இருபது வயது இருக்கலாம். இளமை தன் மாய வித்தையை அவள் உடலில் காட்டியிருந்தது.

புதிதாக வண்டியில் ஏறிய பெண்ணின் நினைவைச் சிந்தனை அசை போடச் சேகர் வெளியே தன் பார்வையை அலைய

விட்டான். ஒருவேளை வேறு பெட்டியில் ஏறிக் கொண்டிருந்த அவன் காதலி இந்த ஸ்டேஷனில் இங்கு வந்து ஏறிக் கொள்ளக் கூடாதா என்ற நப்பாசை கீழே இறங்கும் வேகத்தைத் தளர்த்திவிட்டது.

படியேறி உள்ளே வந்த அந்தப் பெண்ணை மறுபடியும் நேருக்கு நேராகப் பார்த்தான் சேகர். அவளும் இவனைப் பார்த்தாள். யாரையோ எதிர்பார்க்கும் ஆவலும் உற்சாகமும் அவள் பார்வையில் குழைந்து கிடந்தன. அந்தப் பெட்டியில் அவனைத் தவிர வேறு யாருமில்லாது போகவே ஏமாற்றத்துடன் தலையை வெளியே நீட்டி அங்கும் இங்கும் பார்த்தான்.

இந்த ஸ்டேஷனிலும் மஞ்சுளா வந்து ஏறாததால் வேறு பெட்டியில் அவள் ஏறியிருப்பாள் என்ற நம்பிக்கை குறைந்து குழப்பத்துடன் தனக்குள் ஏதோ முனகிக் கொண்டான் சேகர்.

''என்ன சொன்னீர்கள்?'' என்றாள் அந்தப் பெண்.

எங்கோ கவனமாகக் கவலையுடன் இருந்த சேகர், ''என்ன கேட்டீர்கள்?'' என்றான் அவள் பக்கம் திரும்பி.

''ஏதோ சொன்னது போலிருந்தது. என்ன என்று கேட்டேன். உங்களுக்கு நீங்களே பேசிக் கொண்டீர்களோ?''

''இருக்கலாம்...'' என்றான் சேகர் இலேசாகச் சிரிக்க முயன்றபடி.

நோயாளியைச் சோதிக்கும் டாக்டரின் கண்களோடு அவனை அவள் பார்த்தாள். ''உங்களுக்கு உடல் நலக் குறைவா? ஏதோ போலிருக்கிறீர்களே?''

''அதெல்லாம் இல்லை. போன ஸ்டேஷனில் இறங்கிச் சென்ற ஒருவர் மறுபடியும் திரும்பி வந்து ஏறவில்லை. அதுதான் கவலையுடன் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.... ம் நீங்களும் யாரையோ தேடுகிறீர்கள் என்று நினைக்கிறேன்?''

மறந்த காரியத்தை நினைவுபடுத்திக் கொண்டவளைப் போல அவள் பரபரப்படைந்து, ''ஆமாம்! என் சிநேகிதி ஒருத்தி இந்த வண்டியில் வருவதாகத் தந்தி கொடுத்திருந்தாள். அவளைத் தான் தேடிக் கொண்டிருக்கிறேன்...'' என்று சொல்லிக் கொண்டே அந்தப் பெட்டியின் அடுத்த அறைக்குச் செல்லும் இடைகழி வழியே சென்று மறைந்தாள் அந்தக் கட்டழகி.

அதே சமயம் 'மஞ்சுளா எங்கே?' என்று கேட்டுக் கொண்டே உள்ளே ஏறி வந்தான் கோபால் — சேகரின் உயிர்த் தோழன். அவனும் அவர்களுடன் பிரயாணம் செய்தாலும் இளங் காதலர்களுக்கு இடைஞ்சலாக முதல் வகுப்பில் வராமல் இரண்டாம் வகுப்பில் தனியாக வந்து கொண்டிருந்தான். நல்ல கம்பீரமான தோற்றம். உறுதியான உடல். உடற்பயிற்சி நிலையத்தின் ஆசிரியர் பின் எப்படி இருப்பாராம்?

வண்டியில் வாழைத் தார்களை ஏற்றிக் கொண்டிருந்தார்கள். கரியை உமிழ்ந்தபடி நின்று கொண்டிருந்தது என்ஜின். நண்பனைக் கண்டதும் சேகரின் முகம் மலர்ந்தது. ''டேய் கோபால்! மஞ்சுளா போன ஸ்டேஷனிலேயே இறங்கினாள். இன்னும் அவள் வந்து ஏறிக்கொள்ளவில்லை. வேறு பெட்டியில் ஏறிக் கொண்டிருக்கிறாள் என்பதற்குமில்லை; இத்தனை நேரமாகியும் வரவில்லை'' என்று கவலை தோய்ந்த குரலில் சொன்னான் சேகர்.

''சேகர்! நமக்குத்தான் இந்தப் பக்கம் புதிசு. மஞ்சுளா இந்தப் பக்கத்திலேயே பிறந்து வளர்ந்தவள். ஜமீன் வீட்டுப் பெண்ணான அவளுக்கு இங்கெல்லாம் நல்ல செல்வாக்கு உண்டு. வீணாகக் கவலைப்படாதே. யாராவது தன் தோழியைச் சந்தித்திருப்பாள். இரண்டு பெண்கள் பேசக் கிளம்பிவிட்டால் பிறகு கேட்பானேன்? அவள் கம்பார்ட்மெண்டிலேயே உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பாள். சரி, நான் வருகிறேன்...''

வண்டி நீராவியால் பிளாட்பாரத்தைக் குளிப்பாட்டி விட்டு மெள்ள நகர ஆரம்பித்தது.

எங்கிருந்தாவது ஓடி வந்து ஏற வரும் காதலியை எதிர்பார்த்து ஏமாந்து போய் ஓர் ஏக்கப் பெருமூச்சை உதிர்த்து விட்டு முன் சீட்டில் காலை நீட்டியபடி சாய்ந்து உட்கார்ந்து கண்களை மூடிக் கொண்டான் சேகர்.

முல்லை வாசல் ஜமீன் அந்த வட்டத்திலேயே நல்ல செல்வாக்குப் பெற்ற ஒன்று. முல்லைவாசல் பண்ணை தர்மலிங்கம் என்றால் முப்பது மைல் வட்டாரத்தில் உள்ள எல்லாக் கிராமத்து மக்களுக்கும் தெரியும். அத்தனை புகழ் பெற்றது அந்த ஜமீன். கிழவருக்கு இப்போது வயது ஐம்பதுக்கு மேலாகிறது. உழைப்பால் உயர்ந்தவர் கிழவர். அந்த வட்டாரத்திலேயே யந்திரங்கள் வைத்து நவீன முறையில் விவசாயம் செய்பவர் தருமலிங்கம்தான். தங்கமான மனிதர். கண்டிப்பான பேர்வழி. ஆனாலும் கண்யமானவர்.

முல்லைவாசல் பண்ணையின் பிரும்மாண்டமான பங்களா இந்தக் காலத்துக் கட்டடமல்ல. பழைய காலத்து அரண்மனை அது. நாயக்க மன்னர்

களின் காலத்தில் பெயர் பெற்ற ஒரு பாளையக்காரரின் அரண்மனையாக இருந்ததாம் அது. அந்த வட்டாரமே சரித்திரப் பிரசித்தி பெற்ற இடம்தான். தருமலிங்கம் அந்த அரண்மனையையும் அதைச் சுற்றி யிருந்த நிலங்களையும் வாங்கிப் பண்ணை நடத்தி வந்தார். முல்லைவாசலுக்கு மின்சாரம் வந்து பத்து வருஷங்களாகின்றன. வெளிப் பார்வைக்குப் பழைய காலத்துக் கட்டடமாக இருந்தாலும் பண்ணையாரின் பங்களாவின் உள்ளே சகல நவீன வசதிகளும் நிறைந்திருந்தன.

சாமுண்டிக் கோட்டை ரயில்வே ஸ்டேஷனிலிருந்து முல்லைவாசல் எட்டு மைல் தூரத்தில் இருந்தாலும் கூட, 'முல்லை வாசலுக்கு இங்கே இறங்கவும்' என்று சாமுண்டிக் கோட்டை ரயில்வே ஸ்டேஷனில் போர்டு போடும் அளவுக்கு முல்லைவாசலுக்குப் பெருமை தேடித் தந்திருந்தார் தருமலிங்கம். விவசாய ஆராய்ச்சியாளர்கள் முல்லை வாசல் ஜமீன் பண்ணைக்கு விஜயம் செய்து விட்டுத்தான் எந்த ஒரு விஷயத்தையும் முடிவு கட்டுவார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். சாமுண்டிக் கோட்டைக்கும் முல்லைவாசலுக்கும் மாட்டு வண்டியும் குதிரை வண்டியும் போய் வருவது நாகரிகக் குறைவு என்று கருதி, நாலைந்து 'டாக்ஸி'களை வாங்கிவிடத் தாமே கடனாக முன் பணம் கொடுத்து ஏற்பாடு செய்தவர் தருமலிங்கம்.

தருமலிங்கத்துக்கு இரண்டே புதல்வர்கள். மூத்தவர்தான் கந்தசாமி. தகப்பனுரோடு தோளோடு தோள் கொடுத்து உழைத்து வருபவர். தருமலிங்கத்தின் அந்தரங்கத்துக்கும் ஆஸ்திக்கும் பாத்திரமானவர் கந்தசாமி. இளையவன் வீராசாமி சிறு வயதிலேயே தகப்பனுரின் வெறுப்புக்கு ஆளாகி வீட்டை விட்டே ஓடி விட்டான். பள்ளியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் ஒரு சமயம் வீராசாமி தகப்பனுரின் கையெழுத்தைப் போலவே 'செக்' புத்தகத்தில் கள்ளக் கையொப்பமிட்டுப் பாங்கியில் பணம் வாங்கிச் செலவு செய்து விட்டான். இந்த ஒரு சம்பவமே மகனிடம் தீராத வெறுப்பை வளர்த்து வீராசாமி வீட்டை விட்டே—குடும்பத்தைவிட்டே—விலகிப் போகும்படி செய்து விட்டது. தருமலிங்கத்தின் மனைவி இறந்து பல வருஷங்களாயின.

மூத்தவன் கந்தசாமிக்குக் கல்யாணம் செய்து வைத்து மகிழ்ந்தார். மஞ்சுளாவைப் பெற்றுக் கொடுத்து விட்டு அந்த உத்தமி கண்ணை மூடி விட்டாள். மஞ்சுளாவுக்குப் பத்து வயது ஆகும் வரையில் கந்தசாமி மறுமணம் செய்து கொள்ளவில்லை. அதன் பிறகுதான் கோகிலாவை மணந்து கொண்டார். வாழ்க்கையில் அவர் செய்த பெரும் தவறு அது ஒன்றுதான்.

கிழவருக்குக் கோகிலாவின் குணமும் நடத்தையும் பிடிக்கவே யில்லை. குழந்தை மஞ்சுளா குமரியானுள். கோகிலாவின் பிடியில் மஞ்சுளா சிக்கி அவதிப் படக் கூடாதென்று அவளைச் சென்னைக்குப் படிக்க அனுப்பி ஹாஸ்டலில் சேர்த்து விட்டார். மஞ்சுளாவுக்குச் சகல சௌகரியங்களும் செய்து கொடுத்து விட்டு மாதம் முந்நூறு ரூபாய் வேறு தனியாக அனுப்பி வந்தார் கிழவர். மஞ்சுளா மகாராணியைப் போல் மாநிலக் கல்லூரியில் படித்து வந்தாள். விடுமுறைக்குக் கிராமத்துக்கு வருவாள். சில நாட்கள் தாத்தா, அப்பா இவர்களுடன் அளவளாவி விட்டுத் திரும்பி விடுவாள். கல்லூரிப் படிப்பு முடிந்த பிறகும்கூட மஞ்சுளா முல்லை வாசலுக்குப் போக விரும்பவில்லை.

ஆதியிலிருந்தே கிழவர் அவளுக்குச் சுதந்திரம் வழங்கி அவளை ஒதுங்கி வாழும்படி செய்து விட்டார். மஞ்சுளா படித்து உலகமறிந்த பெண்ணானதும் கிராமத்தில் தான் தங்குவதால் தகப்பனுரின் குடும்ப வாழ்வுக்குக் குந்தகம் ஏற்படும் என்று நினைத்துச் சென்னையிலேயே உத்தியோகம் பார்த்துக் கொண்டு தங்கி விட்டாள். மஞ்சுளாவுக்கு இருக்கும் சொத்துக்கு அவள் உத்தியோகம் பார்க்க வேண்டுமென்பதில்லை. ஆனால் அவள் வேலை பார்த்தது காசுக்காக அல்ல! காதலுக்காக! சேகரின் காதலைப் பெறவே அவள் காரிய தரிசியாக உத்தியோகம் ஏற்றாள்.

மஞ்சுளா கலாசாலைக்குள் காலடி எடுத்து வைத்தபோதுதான் அவளுக்குச் சேகரின் சந்திப்பு ஏற்பட்டது. கல்லூரி மாணவனாக அவள் அவனைச் சந்திக்கவில்லை. கல்வி போதகராக — அதாவது பேராசிரியராக அவனை அவள் சந்தித்தாள். சேகர் வகுப்புக்கு வந்தாலே ஒரு தனிக் களை கட்டும். சாதுரியமான போதனை. சிரிக்கப் பேசும் சுபாவம். சரளமான பேச்சு. இதனால் சேகர் கல்லூரி மாணவிகளின் இதயங்களிலே இடம் பெற்றவனாகத் திகழ்ந்தான். பேராசிரியர் சேகரிடம் மஞ்சுளா தன் மனத்தைப் பறி கொடுத்ததில் வியப்பில்லை.

முதல் ஆண்டுதான் சேகரின் அருமையான பாட போதனை மஞ்சுளா

வுக்குக் கிடைத்தது. மறு வருஷமே அரசாங்கம் சேகரின் திறமையையும் சாதுரியத்தையும் பற்றிக் கேள்விப் பட்டு யுத்த சேவைக்கு வருந்தி அழைத்துக் கொண்டது. அப்போது இரண்டாவது உலக யுத்தம் நடந்து கொண்டிருந்தது. சேகரைப் போன்ற அறிவாளிகளின் சேவை பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குப் போர் முனையில் அத்தியாவசியமாக இருந்தது.

மூன்று வருஷங்கள் யுத்த களத்தில் போற்றத் தகுந்த முறையில் சேவை செய்து விட்டு எதிரியின் குண்டடிக்கு இலக்காகி ஒரு காலில் ஊனத்தோடு தாய் நாடு திரும்பியபோது அதே பேராசிரியர் வேலை காத்திருந்தது சேகருக்கு.

சேகரினால் வலது காலை மடக்க முடியாது. சாதாரணமாக நின்றால் அந்த ஊனத்தை யாராலும் ஊகிக்க முடியாது. நடக்கும்போது கூட வலக் கரத்தில் உள்ள 'வாக்கிங் ஸ்டிக்'கின் உதவியால் — அது தெரியாதபடி அத்தனை லாகவமாக நடப்பான். இழுத்து இழுத்துத் தங்கி நடந்தாலும் அதுவே ஒரு கம்பீரமாக இருக்கும். சேகரின் தோற்றமே கம்பீரமானது தானே! மஞ்சுளா அந்த வடிவழகனிடம் மையல் கொண்டதில் வியப்பே இல்லை. அவள் அவன் அழகில் மட்டுமில்லை, அவன் புகழிலும் அறிவிலும் திறமையிலும் காதல் கொண்டாள். அந்தக் காதலில் அவளுக்கு அவன் ஊனம்கூட உறுத்தவில்லை.

யுத்த களத்திலிருந்து சேகர் தாய் நாடு திரும்பியபோது மஞ்சுளா அவனிடம் பாடம் கேட்கும் மாணவியாக இல்லை. கல்லூரிப் படிப்பை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு மேலே என்ன செய்வது என்று தெரியாமல் உட்கார்ந்திருந்தாள். சேகர் போர் முனையிலிருந்து திரும்பி வந்த செய்தியைப் பத்திரிகையில் படித்தபோது மஞ்சுளாவின் உள்ளம் உவகையால் துள்ளியது. பூமியின் அடியில் புதையுண்டு கிடந்த விதை ஒரு மழை பெய்ததும் எப்படி நிலத்தைப் பிளந்து கொண்டு முளைவிட்டுச் சிரித்தபடி கிளம்புமோ அப்படி அவள் நெஞ்சத்தினடியில் அமுந்திக் கிடந்த பேராசிரியர் சேகரின் நினைவு தளிர் விட்டுக் கிளம்பியது. எப்படியாவது சேகரைச் சந்திக்கத் துடித்தாள் அவள். சில நாட்களுக்குள்ளேயே தினசரியில் வெளியானதொரு விளம்பரம் அவள் கவலைகளுக்கு — காதலுக்கு மருந்தாக இருந்தது.

யுத்தத்திலே குண்டடி பட்டுச் சேகருக்குக் காலில் ஊனம் ஏற்பட்டாலும் அதுவே அவன் புகழையும் பெருமையையும் வளர்ப்பதாகவும் அமைந்தது.

எந்த விஷயத்தையும் ஆராய்ச்சிக் கண் கொண்டு பார்த்துச் சிந்திப்பது சேகரின் தனிக் குணம். மனோதத்துவத்தில் விசேஷத் திறமை படைத்த சேகரின் நுண்ணறிவு அவனை ஒரு சிறந்த துப்பறியும் நிபுணனாக்கியது.

ஒரு கொலை வழக்குக்கு ஜூரியாகப் போயிருந்தான். வழக்கின் விசாரணை நடந்து கொண்டிருந்தது. அநேகமாகத் தீர்ப்புக் கூறும் நிலைக்கு வந்துவிட்டது வழக்கு. விசாரணையின் முழு நடவடிக்கைகளையும் கவனித்து வந்த சேகரினால் தன் தவிப்பை அடக்க முடியவில்லை. உண்மைக் குற்றவாளியை விட்டு விட்டு இரு தரப்பு வக்கீல்களும் ஒரு நிரபராதியைக் கூண்டில் ஏற்றி விண் வாதம் புரிந்து கொண்டிருந்தார்கள். இதைச் சகிக்க மாட்டாமல் சேகர் நீதிபதியைத் தனிமையில் சந்தித்தான். தன்னுடைய ஊகத்தையும் அந்தக் கொலையில் உண்மைக் குற்றவாளி யார் என்பதையும் விளக்கிய போது நீதிபதியே ஒரு விநாடி திக்கு முக்காடிப் போய்விட்டார். யாருமே எதிர்பார்க்காத நபர் ஒருவரை — சந்தேகத்துக்கே இலக்காகாத ஒருவரைக் குற்றவாளி என்று குறிப்பிட்டான், சேகர். அது மட்டுமல்ல. தனக்கு அனுமதி அளித்தால் அந்த வழக்கை நடத்த உரவி உண்மைக் குற்றவாளியை வெளிக் கொண்டு வருவதாகவும் சொன்னான்.

நீதிபதி, சேகரின் வாதத் திறமையில் கட்டுண்டு அனுமதித்தார். சேகர் வழக்காட உதவிய போது வழக்கின் போக்கே மாறிக் கொலைகாரனே அரசாங்கத்திடம் வந்து சரணாகதி அடைந்தான். இந்த ஒரு சம்பவமே சேகரைத் துப்பறியும் தொழிலை மேற்கொள்ளச் செய்தது. 'எந்தச் சிக்கலான வழக்கு என்றாலும், அரசாங்கமோ தவிப்பட்டவர்களோ சேகரின் ஆலோசனையை நாடி வருவது வழக்கமாகி விட்டது.

தன் அலுவல்களைத் தானே கவனித்துச் சமாளிக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டபோதுதான் காரியதரிசி தேவை என்று விளம்பரப்படுத்தினான் சேகர். பெண்ணாயிருப்பது நலம் என்றும் விளம்பரக் குறிப்பு சொல்லியது. இப்படிப்பட்டதொரு சந்தர்ப்பத்தை நழுவ விடுவாளா மஞ்சுளா? மறு நாளே சேகரைக் காணச் சென்றாள். ஒரு காலத்தில் தான் அவனுடைய மாணவி என்பதை அவள் கூறித் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள். அதே சமயம் அவள் தன் மீது தணியாத பிரேமை கொண்டிருக்கிறாள் என்பதை

அவன் அவளது பார்வையிலிருந்தும் பேச்சிலிருந்தும் ஊகித்துக்கொண்டான். இதன்பிறகு, சேகர் மஞ்சுளாவைத்தான் தனது காரியதரிசியாக்கிக் கொண்டான் என்பதைச் சொல்ல வேண்டுமா என்ன?

ஆனால் சொல்ல வேண்டியது வேறொன்று இருக்கிறது. காரியதரிசியாகப் போன மஞ்சுளா சில நாட்களிலேயே சேகரின் காதலரசியாகிவிட்டாள். எதையும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் துப்பறியும் புலியான சேகர் மஞ்சுளாவை மட்டும் அந்தக் கண்ணோடு பார்க்கவில்லை. இளமை கொழிக்கும் அவள் உடலும், ஒய்யாரச் சிரிப்பும், உல்லாசப் பார்வையும் அவனைப் பித்தனாக்கிவிட்டன. அவள் தன் மீது காதல் மட்டுமல்ல, பக்தியே கொண்டிருக்கிறாள் என்பதை அறிந்த பிறகு அவனும் அவளுக்குத் தன் இதயத்திலே இடமளித்தான்.

இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்ட பிறகு வேறு என்ன வேண்டும்? இளைய ஜமீன்தாரிணி மஞ்சுளாவுக்கோ அவள் தாத்தா தருமலிங்கம் பூரண சுதந்திரம் வழங்கி யிருந்தார். அவள் தன் மனத்துக்குப் பிடித்தவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் — கணவனாக. ஆனால் அந்த ஆணழகனை அழைத்துக் கொண்டு வந்து தன் முன்னால் நிறுத்த வேண்டும். சகல சிறப்புகளுடனும் அவள் திருமணத்தை நடத்தி அவர் கண் குளிரப் பார்க்க வேண்டும். — இதுதான் அவர் தம் பேத்தியின் திருமண விஷயமாக இட்டிருந்த கட்டளை. சேகரை அழைத்துக் கொண்டு முல்லைவாசலுக்குப் போக வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கும் போதுதான் அப்படி ஒரு தந்தி வந்தது. எத்தனையோ மகிழ்ச்சியோடு தாத்தாவின் முன்னால் போய்ச் சேகரோடு நிற்க வேண்டுமென்றிருந்த மஞ்சுளா, மனத்தவிப்போடு கிளம்பும்படியாக நேர்ந்து விட்டது.

தருமலிங்கம் கடந்த ஒரு வருஷமாகப் படுத்த படுக்கையாகக் கிடந்தார். பட்சவாதம். எழுந்து நடமாட முடியாத நிலை. இருந்தாலும் பண்ணை இன்னமும் அவர் ஆக்கினைப்படிதான் நடந்து வந்தது. மூத்த மகன் — மஞ்சுளாவின் தகப்பனார் — கந்தசாமியின் தலையில் முழுப் பொறுப்பும் விழுந்தது. தகப்பனாரின் விருப்பப்படி எல்லாப் பொறுப்புகளையும் ஏற்று ஜமீனை நிர்வகித்து வந்த கந்தசாமியும் திடீரென்று நோய்வாய்ப் பட்டுப் படுத்த படுக்கையானார். ஜமீன் அதிகாரம் கோகிலாவின் கையில் வந்தது.

உள் விவரம் ஒன்றும் தெரியாவிட்டாலும் தகப்பனாருக்கும் உடல் நலமில்லை என்று மட்டும் மஞ்சுளாவுக்குத் தகவல் கிடைத்தது. தகப்பனாரையும் தாத்தாவையும் போய்க் காண வேண்டும் என்ற ஆவல் இருந்தாலும் காதலில் வெற்றி காணுவதற்காகக் காத்திருந்தாள். தாத்தாவுக்குத் தன் வாழ்க்கைத் துணைவனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ள விஷயத்தை இலேசாக ஒரு கடிதத்தில் தெரியப்படுத்தி யிருந்தாள் மஞ்சுளா.

அந்த ஸ்டேஷனையும் விட்டு வண்டி கிளம்பும் சமயத்தில் தூரத்தில் மஞ்சுளா வந்து கொண்டிருந்தாள். ஒரு பெரிய தேசத்து இளவரசியுடன் ஒருவன் எப்படிப் பணிந்து வணக்கத்துடன் பேசுவானோ, அப்படி அந்த ஊர் ஸ்டேஷன் மாஸ்டர் அடக்க ஒடுக்கமாக அவளுடன் பேசிக்கொண்டு வந்தார். மஞ்சுளா ஏறுவதற்காகவே அத்தனை நேரம் நின்றிருந்தது போல வண்டியும் மெள்ள நகர்ந்தது. ஸ்டேஷன் மாஸ்டரும் பணிவும் பெருமிதமும் கலந்த முகத்துடன் வணங்கி விடைபெற்றுக் கொண்டார்.



கோபாலும் கூடத் தன் பெட்டிக்குப் போகாமல் அவர்கள் பெட்டியிலேயே ஏறிக் கொண்டான். சேகருக்கு எதிரில் உட்கார்ந்து கொண்ட மஞ்சுளா தன் கையில் கொண்டு வந்திருந்த பொட்டலத்தைப் பிரித்து அதிலிருந்த வெள்ளரிப் பிஞ்சுகளை எடுத்துச் சேகரிடமும் கோபாலிடமும் நீட்டிக் கொண்டே, ''இந்த வட்டாரத்திலேயே எங்கள் பக்கத்து வெள்ளரிப் பிஞ்சுகள் பெயர் போனவை'' என்று சொல்லி விட்டுப் பரந்து கிடந்த பசுமையில் பார்வையைப் பதித்தபடி ''என்னதான் நகரங்களில் நாகரிகம் தாண்டவமாடினாலும் கிராமப் புறங்களில் உள்ள அமைதியும் ஆனந்தமும் வேறு எங்கும் கிடைப்பதில்லை'' என்றாள்.

காதலி திரும்பி வந்த திருப்தியோடு வெள்ளரிப் பிஞ்சுகளைச் சுவைத்துக் கொண்டே சேகர், ''மூன்று ஸ்டேஷனுக்கு நீ வராதது எத்தனை கவலையாகத் தெரியுமா போய்விட்டது?'' என்றான்.

மஞ்சுளா கன்னங் குழியச் சிரித்தாள். ''இதெல்லாம் எங்கள் ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசம். நான் வராவிட்டாலும் கவலைப் படாதீர்கள் என்று சொல்லி விட்டுத்தானே போனேன். இங்குள்ள எல்லோருமே எனக்குத் தெரிந்தவர்கள். பல வருஷங்கள் கழித்துச் சந்திப்பதால் ஒவ்வொருவரும் பேசப் பிடித்துக்கொண்டு விடுகிறார்கள்.... ம்... பிறந்து வளர்ந்த இடத்துக்கு வருவதென்றாலே அதில் ஒரு தனி இன்பம் இருக்கத்தான் செய்கிறது....'' வெளியே தட்டாமாலை சுற்றியோடும் சோலைகளையும் மாந்தோப்புக்களையும் பார்த்துக் கொண்டே சொன்னாள் மஞ்சுளா.

வெள்ளரிப் பிஞ்சுகளைத் தின்று முடித்து விட்டு நிமிர்ந்து உட்கார்ந்தான் சேகர். ''அது சரி, மஞ்சு. எனக்கு உன்னைத்தான் தெரியும். உன் குடும்பத்தையோ, உன் ஊரையோ பற்றி எனக்கு எதுவுமே தெரியாதே. உன் குடும்பத்தாரிடையே கொண்டு போய் நிறுத்தப் போகிறாயே. அவர்களுடன் சகஜமாகப் பழகுவதற்காகவாவது எனக்கு உன் குடும்பத்தைப் பற்றிச் சொல்லு'' என்றான்.

''பிரபல துப்பறிபவரான நீங்கள் அங்கு வந்ததும் குடும்பத்தைப் பற்றிய எல்லா விவரங்களையும் தெரிந்து கொண்டு விடுவீர்கள்'' என்று சொல்லிக் குறும்பாகச் சிரித்தாள் மஞ்சுளா. ''நாம் திராட்சைக் கொடி வீட்டில் தான் தங்கப் போகிறோம். அழகான இடம். இலக்கியங்களிலே வர்ணித்திருக்குமே அதுபோன்றதொரு ரமணீயமான சூழ்நிலையில் அமைந்துள்ள கட்டடம், அது'' என்று மஞ்சுளா சொல்லிக் கொண்டிருக்கும்போதே,

''மஞ்சுளா!'' — என்ற ஆர்வம் நிறைந்த குரலொன்று அழைத்தது. சட்டென்று திரும்பிய மஞ்சு, ''நிர்மலா!'' என்று மகிழ்ச்சி மலரக் கத்தினாள். சேகரும் கோபாலும் ஏககாலத்தில் திரும்பினார்கள். சிநேகிதியைத் தேடியலைந்த அதே நர்ஸ்தான்! அவள் தேடியலைந்த சிநேகிதி, சேகரின் காதலி மஞ்சுளாவேதான்! தோழிகள் இருவரும் தழுவிக் கொண்டனர். நிர்மலாவை அணைத்து இழுத்துத் தன் பக்கலில் அமர்த்திக் கொண்டாள் மஞ்சுளா.

அத்தியாயம் இரண்டு

''நிர்மலா, என் பிராண சிநேகிதி'' என்று சேகருக்கும் கோபாலுக்கும் அறிமுகப்படுத்தினாள் மஞ்சுளா. பிறகு, முகம் சிவக்கச் சேகரைக் கடைக்கண்ணால் குறிப்பிட்டு, ''இவர்தான் என் வருங்காலக் கணவர். காப்டன், புரொபஸர் சேகர்!'' என்றாள் நிர்மலாவிடம்.

சேகர் புன்முறுவலுடன் கரங் குவித்து வணக்கம் தெரிவித்தான்.

''இவர்தான் கோபால். சேகரின் நண்பர். கனம் தூக்குவதில் தென்னிந்தியாவிலேயே முதல் பரிசு பெற்றவர்......''

''....அதாவது சரியான மூட்டை தூக்கி முத்தையன் என்று அறிமுகப் படுத்தேன், மஞ்சுளா!'' என்று குறுக்கிட்டான் கோபால், கலகலவென்று சிரித்துக் கொண்டே.

ஆனால் மஞ்சுளா அதற்குப் பதில் சொல்லாமல், ''பெரிய குத்துச்சண்டை வீரர்'' என்று நிர்மலாவுக்குக் கோபாலை அறிமுகப் படுத்தினாள். கோபாலும் நிர்மலாவுக்கு வணக்கம் செலுத்தினான்.

''மஞ்சு....!'' என்று அழைத்தான் சேகர்.

ஆனால் அவள் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல், ''கோபால் எங்களுடன் வருவதாக இல்லை. நாங்கள் தான் வற்புறுத்தி அழைத்து வந்தோம். என் காதலரும் இவரும் இணைபிரியா நண்பர்கள்'' என்றாள் நிர்மலாவிடம்.

''மஞ்சுளா....'' ஏதோ சொல்வதற்காக இரண்டாம் முறையாகக் கூப்பிட்டான் சேகர்.

''நிர்மலா, என் தகப்பனாரின் பிரத்தியேக நர்ஸ். அதாவது மூன்று வாரங்களுக்கு முன்பு வரை. என் சித்தி கோகிலா, நிர்மலாவை ஏன் வேலையிலிருந்து நீக்கினாள் என்றுதான் எனக்குப் புரியவில்லை. நிர்மலா இப்போது மிஷன் ஆஸ்பத்திரியிலேயே சேர்ந்துவிட்டாள்.'' தன் தோழியைப் பற்றிய விவரங்களைச் சேகருக்கும் கோபாலுக்கும் மூச்சு விடாமல் சொல்லி முடித்த மஞ்சுளா, தன் தோழியை நோக்கி, ''நிர்மலா! என்னை எதிர்கொண்டழைக்க நீ இப்படி இங்கேயே வருவாய் என்று நான் நினைக்கவே இல்லை. உன்னைப் பார்த்ததில் எனக்கு எத்தனை மகிழ்ச்சி தெரியுமா?'' என்று அவள் கரங்களை வாஞ்சையுடன் எடுத்து அணைத்துக் கொண்டாள்.

அவள் எப்போது தன் பேச்சை முடிக்கப் போகிறாள் என்று காத்திருந்தவன் போலக் கனைத்துக் கொண்டு, ''மஞ்சுளா, வருகிற ஜூலை மாதத்திலிருந்து நான் மறுபடியும் கல்லூரியிலே சைகாலஜி புரொபஸராகவே வேலை ஏற்றுக் கொள்ளப் போகிறேன். ஆகவே, என்னைப் பேராசிரியர் என்று மட்டும் அழைத்தால் போதும். காப்டன் என்பது கடந்த கால விஷயம். கனவு போல. அதை மறந்துவிடு'' என்றான் சேகர்.

''எனக்கு நீங்கள் காப்டன், புரொபஸர் சேகர்தான்! இதுவும் கூடப் போதாது. எழுத்தாளர் என்றுகூடச் சேர்த்துச் சொல்லுவேன். நிர்மலா, இவர் பெரிய நாவலாசிரியரும்கூட. தெரியுமா?'' என்றாள் மஞ்சுளா சிறு குழந்தையைப் போலக் கலகலவென்று சிரித்தபடியே.

'' தகுதியற்ற பாராட்டுக்கள்....'' என்று சேகர் இதை ஆட்சேபித்தான்.

''எவை தகுதியில்லாதவை? ரகசிய ராணுவப் பகுதியிலே யுத்தத்தின்போது வெளிநாடுகளுக்குப் போய் வந்திருக்கிறார். ஈரான் மேலாக இவர் விமானத்தில் போய்க் கொண்டிருக்கும் போது, எதிரிகள் இவரது விமானத்தைக் குண்டுகளால் துளைத்துத் தள்ளிவிட்டார்கள். அந்த விபத்தில்தான் இடது காலில் அடிபட்டு....'' மஞ்சுளா தன் காதலனின் வீரப் பிரதாபங்களை நிர்மலாவிடம் விவரிக்கலானாள்.

'' உண்மையில் இந்தக் காலில் ராணுவ லாரி ஒன்று ஏறியதால்தான் இப்படி'' என்று குறுக்கிட்டான் சேகர்.

''பொய், நிர்மலா! பிரிட்டிஷ் அரசாங்கமே இவரது சேவையையும், தைரியத்தையும் பாராட்டிப் பதக்கம் கூடக் கொடுத்திருக்கிறது. ஒரு கால் பயனற்றுப் போன நிலையிலும்கூட இவர் எரிந்து கொண்டிருந்த விமானத்திலிருந்து விமானியை வெளியே இழுத்துக் காப்பாற்றியதற்காக வீரப் பதக்கம் பெற்றவராக்கும். ரொம்ப அழகான பதக்கம் அது. எங்கே, அதை நிர்மலாவுக்குக் காட்டுங்கள்'' என்று கேட்டுக் கொண்டாள் மஞ்சுளா தன் காதலனை.

''நீ கேட்கும்போதெல்லாம் காட்டுவதற்கு அதை என் கழுத்தில் மாட்டிக் கொண்டிருக்க வேண்டுமா என்ன? அது எங்கே கிடக்கிறதோ!'' சேகருக்கு இந்தப் புகழ்ச்சிகளையெல்லாம் கேட்கச் சங்கடமாக இருந்தது. ''யாரோ எங்கேயோ தவறு செய்து விட்டார்கள். மெடலை என் தலையில் கட்டிவிட்டார்கள்'' என்றான் சேகர், அழகாக, மெல்லச் சிரித்துக் கொண்டே.

நிர்மலாவுக்குச் சேகரின் அடக்கம் வியப்பை அளித்தது. காதலர் இருவ



ருக்குமிடையே நிகழும் சிறு பூசல் வேடிக்கையாகவும் இருந்தது அவளுக்கு.

சேகர் வெகு நேரமாகவே நிர்மலாவின் முகத்தை ஆராய்ந்து கொண்டிருந்தான். அவள் மஞ்சுளாவின் இந்தப் பேச்சுக்களை வேண்டா வெறுப்பாகத்தான் கேட்டுக் கொண்டிருக்கிறாள்; ஏதோ ஒரு விஷயம் அவள் மனத்தில் பாரமாக அழுத்தி அவஸ்தைப்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை அவன் உணர்ந்து கொண்டான். அதைப் பற்றி அவளிடம் கேட்க நினைத்த அதே விநாடியில் மஞ்சுளாவே கேட்டு விட்டாள்.

'' நிர்மலா! ஏன் என்னவோபோல் இருக்கிறாய். உன் மனத்தை ஏதோ வேதனை வாட்டுகிறது. அப்படித்தானே?''

'' இன்னும் அவர்கள் அவரைக் கண்டுபிடிக்கவில்லை மஞ்சுளா!'' என்றாள் நிர்மலா. அவள் முகம் வாடியது. கண்கள் பனித்தன.

''ராமுவைத்தானே சொல்கிறாய்?'' 'ஆமாம்' என்பதற்கு அடையாளமாகத் தலையசைத்தாள் நிர்மலா. 'அது யார்

ராமு?' என்று கேட்பது போல் புருவத்தைச் சுருக்கியபடி நோக்கிய சேகரிடம் மஞ்சுளா, ''ராமு எங்கள் பண்ணையில் வேலை பார்க்கும் காரியஸ்தன். விவசாயக் கல்லூரிப் பட்டம் பெற்ற பொறுப்புள்ள இளைஞன். சென்ற மாதம் தமிழ் நாட்டில் பயங்கரமான புயல் வீசியதே, உங்களுக்கு நினைவிருக்கிறதா? அன்று இரவுதான் ராமு திடீரென்று மறைந்து போனான்'' என்றாள்.

''இதுவரை அவரைப் பற்றி எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லை. டிராக்டர் விற்ற பணத்தை எடுத்துக் கொண்டு அவர் எங்கேயோ ஓடிவிட்டதாக இவர்கள் முடிவு கட்டி விட்டார்கள்'' என்று நிர்மலாவே ராமுவைப் பற்றிய விவரத்தைத் தொடர்ந்தாள்.

'டிராக்டர் விற்ற பணமா? அது என்ன?' என்பதைப் பற்றிச் சேகர் தெரிந்து கொள்ள விரும்பாவிட்டாலும் மஞ்சுளா அதை விளக்க ஆரம்பித்து விட்டாள்.

''தாத்தாவிடம் இரண்டு டிராக்டர்கள் இருந்தன. தாத்தாவோ அப்பாவோ நேரடியாகப் பண்ணையைக் கவனிக்காததால் அதிக நிலங்களைச் சாகுபடி செய்வதில்லை. ஆகவே, ஒரு டிராக்டர் உபயோக மில்லாமலிருந்தது. அதைத் தாத்தா கரும்பூர் சின்னப் பண்ணை ரெட்டியாருக்கு விற்று வரும்படி ராமுவை அனுப்பி யிருந்தார். ரெட்டியார் பண்ணை, முல்லை வாசலிலிருந்து பத்து மைலில் இருக்கிறது. காலையில் டிராக்டரை ஓட்டிக் கொண்டு போன ராமு முறைப்படி மாலையில் பதினையாயிரம் ரூபாயுடன் திரும்பி இருக்க வேண்டும். அன்று மாலைதான் புயல் வீச ஆரம்பித்தது. ஏதாவது வண்டி பிடித்து அதில் திரும்பி இருக்க வேண்டிய ராமு புயலில் சிக்கிக் கொண்டானோ என்னவோ, இதுவரை அவனைப் பற்றி எவ்விதத் தகவலும் தெரியவில்லை.''

''அவர் திருடரில்லை. பணத்துடன் ஓடிப் போகுமளவுக்கு அவர் நேர்மையற்றவரில்லை. எனக்கு நிச்சயமாகத் தெரியும், மஞ்சுளா. அவரை நம்பிக்கைத் துரோகி என்று இவர்கள் கதை கட்டி விட்டார்கள்!'' ஆவேசமாகப் பேசினாள் நிர்மலா.

''ஆதாரமில்லாமல் அவதூறு சொல்வது ரொம்பத் தப்பு.... அது சரி, உன் ஊர்ப் போலீஸ் இந்த விஷயத்தில் சிரத்தை எதுவும் காட்டவில்லையா?'' என்றான் சேகர்.

நிர்மலா கண்களில் நீர் பளபளக்க, ''போலீசும் இதில் நம்பிக்கை இழந்து விட்டது. ராமுவைத் தேடுவதைக் கைவிட்டு விட்டார்கள்....'' என்று சொல்லி விட்டுச் சில விநாடிகள் மௌனமாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். உணர்ச்சியைக் கட்டுப்படுத்த மிகுந்த பிரயாசைப்படுகிறாள் என்பதைப் புரிந்து கொண்டான் சேகர். ''மஞ்சுளா, எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. இன்றைக்கு நான் சென்னைக்குப் போய்த் தனிப்பட்ட முறையில் யாராவது ஒரு துப்பறிபவரின் உதவியை நாடுவது என்று இருந்தேன். ஆனால் உன் தந்தி என் பிரயாணத்தை நிறுத்திவிட்டது'' என்றாள் நிர்மலா.

''தந்தியா? என்ன விஷயமாக?'' என்று கேட்டான் சேகர்

''....'அவசரப்பட்டு எதுவும் செய்ய வேண்டாம். நான் ஒரு சிறந்த துப்பறிபவருடன் வருகிறேன்' என்று மஞ்சுளா எனக்குத் தந்தி கொடுத்திருந்தாளே. உங்களுக்குத் தெரியாதா?'' என்றாள் நிர்மலா.

சேகர் மஞ்சுளாவைப் பொய்யான கோபத்துடன் பார்த்தான். மஞ்சுளா அவன் பார்வையைச் சந்திக்காமல் குறும்பாகச் சிரித்தாள்.

''மூளைக்கு வேலை கொடுக்காமல் சில காலம் ஓய்வு எடுத்துக் கொள்ளும்படி டாக்டர் எனக்குக் கட்டளை இட்டிருக்கிறார். அதனால்தான் நான் உங்கள் தோழியுடன் இந்தக் கிராமத்துக்கு வருகிறேன். மஞ்சுளாவின் தந்தியினால் என் மீது உங்களுக்கு நம்பிக்கை வளர்ந்திருக்குமானால் அதற்காக வருந்துகிறேன்'' என்றான் பிரபல துப்பறியும் நிபுணனான சேகர். பாவம், நிர்மலாவின் முகம் சோர்ந்து விட்டது.

''ஓய்வுபெற வந்துள்ள உங்களுக்குத் தொல்லை தர எனக்கு விருப்பமில்லைதான்.... ஆனால் ராமுவின் மறைவோடு இன்னொரு சம்பவமும் என்னைக் குழப்பிக் கொண்டிருக்கிறது'' என்றாள்.

''இன்னும் என்ன? நிர்மலா?'' என்று கேட்டாள் மஞ்சுளா.

''பாலு திடீரென்று என்னிடம் ஒரு விதத் தகவலும் தெரிவிக்காமல் போய் விட்டான்.''

''பாலசுந்தரமா?'' என்று கேட்ட மஞ்சுளா, சேகரைப் பார்த்து ''பாலு நிர்மலாவின் அண்ணா'' என்றாள்.

''ஓஹோ! அப்படியா?'' என்றான் சேகர்.

''பாலுவின் விஷயம் என்ன நிர்மலா? அதைச் சொல்லு.''


அமரர் கல்கி எழுதிய
மகுடபதி
கல்கி
11.4.1971
புத்தாண்டு இதழில் ஆரம்பம்

''பாலு சென்ற வருஷம் கல்பாறையில் ஆரம்பிக்கப்பட்ட சர்க்கரைத் தொழிற்சாலையில் வேலை செய்து வருகிறான். பத்து நாட்கள் முன்பு லீவில் வந்திருந்தான். ராமுவை நான் மணந்து கொள்ளப் போகும் விஷயம் அவனுக்குத் தெரியும். ஆகவே ராமுவின் மறைவால் கவலைப்படும் எனக்கு ஆறுதல் சொல்லி ராமுவின் விஷயமாகவும் விசாரித்துப் பார்க்கலா மென்றுதான் வந்திருந்தான். இன்றோடு அவனுக்கு லீவு முடிந்து விடுகிறது. காலையில் காப்பி சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, தன்னை மறந்த சிந்தனையில் அவன் மூழ்கி இருப்பதை உணர்ந்தேன். காலை பத்து மணி இருக்கும். எங்கோ கிளம்பிப் போனான்.''

''எதற்காக, எங்கே என்று ஒன்றும் சொல்லவில்லையா?''

''இல்லை. ஆனால் தான் போவது முக்கியமான காரியமில்லாதது போல் அவன் நடிப்பதை மட்டும் நான் அறிந்தேன். தகுந்த காரணமில்லாமல் பாலு இப்படிப் பரபரப்படைய மாட்டான் என்பது எனக்குத் தெரியும். ஒரு வாரமாக எங்கெங்கோ சுற்றித் திரிந்த அவனுக்கு ராமுவைப் பற்றி ஏதோ ஒரு துப்புக் கிடைத்திருக்க வேண்டும். ஒரு வேளை தன் முயற்சி தோல்வி யடைந்தால் நான் ஏமாற்றமடைவேனே என்று என்னிடம் அவன் அதைத் தெரிவிக்கவில்லை என்று நினைக்கிறேன். ஆனால் மஞ்சுளா, ராமுவின் மறைவு பற்றிய சரியான தடையத்தைப் பாலு கண்டுபிடித்திருக்க வேண்டும் என்று என் உள்ளத்தில் ஏதோ ஒன்று சொல்லுகிறது.... காரணமில்லாத ஒரு பயமும் என் நெஞ்சைக் கவ்விப் பிசைகிறது.'' இதைச் சொல்லும்போது நிர்மலாவின் உடல் இலேசாக நடுங்கியது.

''அவனுக்கு லீவு முடிந்து விட்டது. நாளைக்கு வேலைக்குப் போய்ச் சேர்ந்தாக வேண்டும். ஆகவே ரயில் நேரத்துக்கு முன்னதாகவே திரும்பி விடுவதாகச் சொல்லிப் போனான். மாலை 4-10க்குத் தான் அவனுக்குக் கடைசி வண்டி. அதற்குள் வந்து ராமுவைப் பற்றித் தான் அறிந்ததைச் சொல்லிவிட்டு அந்த வண்டியைப் பிடித்துக் கல்பாறைக்குப் போவதாக அவன் திட்டமிட்டிருக்க வேண்டும். ராமுவைப் பற்றிய ஏதோ ஒரு முக்கியமான தகவலைக் கொண்டு வரப் போகிறான் என்று நான் ரொம்ப நம்பிக்கையோடு இருந்தேன். ஆனால் 4-10 வண்டியும் போய்விட்டது. அவனைக் காணோம்'' என்றாள் நிர்மலா.

''உனக்கு அவன் டெலிபோன்கூடச் செய்யவில்லையா?'' என்று கேட்டாள் மஞ்சுளா.

''இல்லையே மஞ்சுளா. அதுதானே எனக்குக் கவலையாக இருக்கிறது. என்ன ஆபத்தோ என்னவோ எனக்கு ஒன்றும் புரியவில்லை.'' அவள் குரல் கரகரத்தது.


''நிர்மலா, என்ன இப்படிக் குழந்தை மாதிரி. நாலு பத்து வண்டியில் பாலு போகவில்லை என்று உனக்கு நிச்சயமாகத் தெரியுமா?'' என்று கேட்டாள் மஞ்சுளா.

''ஸ்டேஷன் மாஸ்டரைக் கேட்டேனே. நாலு பத்து வண்டியில் யாரும் ஏறவில்லை என்று சொல்லி விட்டார். நினைக்கவே பயமாக இருக்கு மஞ்சுளா. ராமு மாதிரி பாலுவுக்கும் ஏதாவது ஆகியிருக்குமோ?'' நிர்மலாவின் கண்களில் நீர் நிறைந்து விட்டது. கைக்குட்டையை எடுத்து மூக்கைத் துடைத்துக்கொண்டாள். ''ராமு இப்படித் திடீரென்று மறையாதிருந் திருந்தால் இன்றைக்குத்தான் அவரும் நானும் திருமணம் செய்து கொள்வதாக இருந்தோம். மஞ்சுளா...'' என்றபோதே அவள் விம்ம ஆரம்பித்து விட்டாள்.

சேகருக்கும் கோபாலுக்கும் ரொம்பத் தர்ம சங்கடமாக இருந்தது. சேகர் அவளைச் சமாதானப்படுத்திப் பேச்சை வேறு திசையில் திருப்பும்படி சைகை செய்தான் மஞ்சுளாவுக்கு.

''இதோ சாமுண்டிக் கோட்டை நெருங்கி விட்டதே! கோயில் கோபுரம் தெரிகிறது'' என்றாள் மஞ்சுளா. வண்டி மெதுவாகச் சாமுண்டிக் கோட்டைக்குள் பிரவேசித்துக் கொண்டிருந்தது. அப்போது மாலை மணி ஐந்து முப்பது.

(தொடரும்)



கேட்பீர்

ஒவ்வொரு சிறு குரல் அசைவும் தெளிவாக, கணீரென்று கேட்கிறது- அதுதான் மகத்தான டெனூர் தரும் இயற்கையான நாதம்.

வாங்குவதற்கு முன்னர் எல்லா உயர் ரக 4 பாண்ட் ரேடியோக்கள் தரும் ஒலி வகைகளையும் கவனமாகக் கேளுங்கள். வீடு திரும்பும்போது எச்எம்வி டெனூர் தான் கொண்டு செல்வீர்கள் என்பது உறுதி.



எச்எம்வி **டெனூர்**

4 பாண்ட்கள், 6 வால்வ்கள், ஏஸி

ரூ. 390-00

(எக்ஸைஸ் வரி உட்பட, உள்ளூர் வரிகள் தனி)

அதன்
விலை வரிசையில்
அதுதான் மிக
அழகான ரேடியோ


ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்

GC-6398



சிங்கக் கழுகு (11)
பீட்டர் ஓ டான்னல்
சிங்கக் கழுகுக்கு அடியில் புதையல் ஒளித்து வைக்கப்பட்டிருப்பதை மாக்ஸ் எப்படித் தெரிந்து கொண்டான்; எப்படி அவன் கொல்லப்பட்டான் என்ற விவரங்களை மாடஸ்டி கார்வினுக்குக் கூறுகிறாள்.
மாக்ஸ் காலமானது குறித்து நான் ரொம்ப வருத்தப்படுகிறேன், மாடஸ்டி!
உம்ம்...
அது ஒன்றும் பெரிய காதல் காவியம் அல்ல. ஆயின் மாக்ஸ் என்னை ரொம்பவும் நேசித்தான் என்பதும் உண்மை. பாவம், தன் காதலின் எதிரொலியை என்னிடம் எதிர் பார்த்து ஏமாந்தான்.
சரிதான்.
சிரிப்பும் கிண்டலுமாக வாழ்க்கையை ரசித்த ஒரு நல்ல நண்பன் மாக்ஸ். அவனைக் கொல்ல ஏற்பாடு செய்த அல்போரினியைப் பழி வாங்காமல் நான் விடப் போவதில்லை.
நீ என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?
அல்போரினிக்கு அந்தப் புதையல் கிடைக்கக்கூடாது என்பதோடு அவன் மரணத்தைத் தழுவவும் வேண்டும்.
அப்படியே ஆகட்டும். மாக்ஸ் கொலை செய்யப்பட்டதால் ஆடிப் போயிருக்கிறாய். நீ ஊருக்குத் திரும்பு. அல்போரினியை நான் கவனித்துக் கொள்கிறேன். புதையலையும் மீட்டு வருகிறேன்.
நன்றி. ஆனால் இதில் நானும் நேரடியாக ஈடுபடவில்லை என்றால் எனக்கு மனச் சாந்தி கிட்டாது.
1749


நண்பகலில் கார்லின் அல்போர்லியின் அரண்மனைக்குப் போகிறான்.
ஆங்கிலேயனா? என்ன வேண்டுமாம் அவனுக்கு?
நீங்கள் அவனைச் சந்திப்பது நல்லது பிரபோ! அவன் ஒரு நிபுணன். அவனை மாக்ஸ்தான் இங்கு வர வழைத்தானாம்.
நிபுணனா? எதில் நிபுணன்?
கட்டடங்களை இடித்துத் தகர்ப்பதில். அவன் ஓர் ''உஷ்ண சட்டி'' வைத்திருக்கிறான். அந்த நவீன ஆயுதத்துக்குக் கான்கிரீட் மேடையை வெட்டுவது ரொட்டியைத் துண்டு போடுவது போல்தானாம்!
நம் பிரச்னையைத் தீர்த்து வைக்கக் கூடியவன் தான். ஆனால்... இவன் மாக்ஸனின் வீட்டுக்குப் போயிருக்கணுமே? அங்கிருந்து ஒருவேளை மாடஸ்டியையும் போய்ப் பார்த்திருப்பானோ?
இருக்கவே முடியாது, பிரபு! மாடஸ்டிதான் மாக்ஸ் இறந்ததும் தன் ஜாகையைவிட்டுக் கிளம்பிவிட்டாளே. மாட்டியோவும் அரயியும் அவளை இன்னும் தேடுகிறார்களே.
1750
குட்மார்னிங், மிஸ்டர் ஷா! மாக்ஸ் ஒரு விபத்தில் இறந்து விட்டான் என அறிந்ததும் என்னை வந்து பார்க்க வேண்டும் என்று உங்களுக்கு ஏன் தோன்றியது?
மாக்ஸ் குறிப்பிட்ட வேலை எனக்குக் கிடைக்குமா என்று அறியத்தான்.
இங்கிலாந்தில் இருந்த எனக்கு அவன் போன் செய்தபோது உங்கள் பெயரும் அடிபட்டது. அதனால் உங்களுக்காகத்தான் அவன் காரியம் பண்ணுகிறானோ என்று நினைத்தேன். ஒருவேளை என் ஊகம் தவறோ?
இல்லை இல்லை. ஊகம் சரிதான். வேலையும் நடக்க வேண்டியதுதான்.
நீங்கள் வரும்போது ஒரு சக்தி வாய்ந்த ஆயுதத்தை உடன் கொண்டு வந்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன்...
உஷ்ண சட்டிதானே? அதை விமான நிலையத்தில் வைத்து விட்டு வந்திருக்கிறேன்.
1751



மிஸ்டர் ஷா! மாக்ஸ் இறந்துவிட்ட போதிலும் நீங்கள் இங்கிலாந்தி லிருந்து இவ்வளவு தூரம் வந்தது வீண் போகப் போவதில்லை.
அவன் எதற்காக உஷ்ண சட்டியுடன் உங்களை வரச் சொன்னான் என்பது எனக்குத் தெரியும். அந்த வேலையை நானே நேரடியாக மேற்பார்வை யிடப் போகிறேன்.
இதுவரை என் செலவுகள் அனைத்தையும் நானே கவனித்துக்கொள்ள வேண்டியிருந்தது...
அதையெல்லாம் இனி நான் பார்த்துக் கொள் கிறேன். உங்க ளுக்கு ரகசியத் தைக் காப் பாற்றத் தெரி யும் என்று நம்புகிறேன். இரவில் வேலை செய்ய முடியுமா?
சரியான அளவு பணம் கிடைத்தால் இரண்டுமே சாத்தியம் தான்.
1752
மாடஸ்டி என்ற பெண்ணை நீங்கள் எப்போதாவது சந்தித்ததுண்டா?
மாடஸ்டி?... மாடஸ்டி...உம்... கேள்விப்பட் டதே இல்லையே?
அவளைப் பற்றி இப்போ என்ன?
மிஸ்டர் ஷா! என் முயற்சிக்கு அவள் பெரிய இடையூறு. அவள் நம்மிடம் சிக்கினால் ஒழிய இன் றிரவு நாம் செய் யப்போகும் காரியம் குறித்து நான் கவலை கொள் ளாதிருக்க முடியாது.
என் ஆட்கள் அவளை இப்போது கூடத் தேடிக் கொண்டிருக் கிறார்கள்.
அவர்கள் முயற்சி வெற்றி பெறட்டும்
நிச்சயம் வெற்றி பெற வும் செய்யும். ஏனெ னில் நீ கவலையற்றுக் காரியத்தில் இறங்க வேண்டும் என்பதற் காக அவளே வலிய வந்து உன் ஆட்களிடம் அகப்பட்டுக்கொள்ளப் போகிறாள்!
(தொடரும்)

அத்தியாயம் 49

எல்லாம் எத்தனை அழகாக, அதி விமரிசையாக நடந்திருக்கலாம்! அதாவது சீமந்தம் முதல் குழந்தைக்குத் தொட்டில் போட்டுப் பெயரிடுவதுவரையில்! ஏதோ பேருக்கு நடத்தினேம் என்று ஆகிவிட்டதே! இதைப் போய் அதிர்ஷ்டக்காரக் குழந்தை என்று நினைத்தோமே என்று இருந்தது யாமினிக்கு.

இருந்தாலும் அவள் எதற்கும் மனம் இடிந்தோ, தளர்ந்தோ போகாமல்தான் இருந்தாள். எதற்கெடுத்தாலும் முணுமுணுக்கிற அத்தை ஒன்றுக்குமே கலங்காமல், வாயைத் திறக்காமல் இருந்தது ஒரு பெரிய அதிசயம்தான்! அந்த அத்தையைப் பார்த்துத்தான் யாமினி தைரியமாக இருக்கப் பழகி வந்தாள்.

குழந்தை கொழுகொழுவென்று சிவப்பாக, ஆரோக்கியமாக, அழகாக இருந்ததைப் பார்த்துத்தான் அவள் ஆறுதல் அடைந்தாள். அப்பாவின் ஜாடைதான் என்று யாமினிக்கு நன்ருகத் தெரியும். கண், மூக்கு, நெற்றி, உதடு எல்லாம் அப்படியே பாஸ்கரன்தான்! அதையெல்லாம் பார்க்கிறபோதுதான் யாமினிக்கு ஏக்கமாயும், வருத்தமாயும் இருந்தது. இப்படி ஒரு குழந்தை பிறந்திருக்கிறன்; இதைப் பார்க்கக் கூட வரவில்லையே பெற்றவன் என்று மனசுக்குள் எண்ணி மறுகினுள்.

''இப்படித்தான் இருந்தே நீ குழந்தையிலே. கண் பட்டுடறாப்பலே அத்தனை கனம் கனப்பே. அதைக் கொண்டிருக்கான் உன் பிள்ளை'' என்றுள் அத்தை.

''இவனுக்கு இவன் அப்பா ஜாடை, அத்தை!''

''எல்லாம் உன் ஜாடையும் இருக்கு. குழந்தைக்கு ரெண்டு பேர் ஜாடையும் கலந்துதான் இருக்கும். உனக்கு அவர் ஜாடை தெரியறது. எனக்கு உன் ஜாடைதான் அதிகமாத் தெரியறது.''

அத்தையும் யாமினியும் என்னதான் எல்லாவற்றையும் அடக்கிக் கொண்



டிருந்தாலும் அல்லு அசலில் இருப்பவர்கள் எதையாவது கிண்டிக் கிளறி விட்டுப் போய்க் கொண்டுதான் இருந்தார்கள். பலருக்கு உள்ளூற இதில் ஒரு திருப்திகூட இருக்கும். எல்லாவற்றுக்கும் அண்ணா பட்டாபிதான் எதையும் விட்டுக் கொடுக்காமல் வந்து கொண்டிருந்தார். இது ஊரார் வாயைப் பெரிதும் அடைத்திருந்தது. பத்திலே எட்டிலே பாசத்தோடு குழந்தையைப் பார்க்க வருவார். வந்தால் வெறும் கையோடு வரமாட்டார். குழந்தைக்கு ஏற்ற உல்லன் சூட், டானிக், கிரைப் வாட்டர், கிளாக்ஸோ டின் என்று கொண்டு வந்து கொடுப்பார். யாமினிக்கும் உடல் தேறப் புஷ்டி தரும் பொருள்களாகவும் மருந்துகளாகவும் வாங்கி மனைவியின் மூலமாக அனுப்புவார். பணமாக அவரால் அதிகமாக உதவி செய்ய முடியாது. உதவி செய்ய வந்தாலும் யாமினியோ, அத்தையோ ஏற்க மாட்டார்கள். ஆனால் போதிய வசதி இல்லாத குடும்பத்தில் போஷாக்குக் குறை இருக்கக் கூடாது என்று அவருக்கு அங்கலாய்ப்பு. பாஸ்கரன் பேச்சையே அவர் எடுக்கவில்லை. அவனுக்குக் கடிதம் எழுதுவதையே அவர் நிறுத்தி விட்டார். அவன் வராமல் இருந்தால் இருந்து விட்டுப் போகட்டும். அம்மாவும் வரவில்லையே என்று அவருக்குப் பெரிய கோபம். ரோசப்பட்டுக் கொண்டு வீட்டிலேகூட அவர்கள் பேச்சையே எடுப்பதில்லை.

அதனால்தானோ என்னவோ, எதிர்பாராத விதமாக அவருக்குப் பாஸ்கரனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அவர் கோபமாக இருப்பதைக் குறிப்பிட்டு, மன்னி அவருக்குத் தெரியாமல் எழுதியிருந்தாள் என்பது அவருக்கு எப்படித் தெரியும்?

''யாமினியை யாரும் வீட்டை விட்டுப் போகச் சொல்லவில்லை. அவளாகத்தான் எங்களை அவமானப்படுத்துவது போல் ஊருக்குப் போனாள். அதுவே ஒரு பெரிய குற்றம். இருந்தாலும் உங்களை முன்னிட்டு இதைச் சொல்கிறேன். எப்படி அவளாக அங்கே புறப்பட்டு வந்தாளோ, அதேபோல் அவளாகவே

காணிக்கை

ஆர்வி



திரும்பி வரட்டும். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. அம்மாவும் அதையேதான் நினைக்கிறாள்!'' என்று பொருள்பட எழுதி யிருந்தான் பாஸ்கரன்.

இதைப் பார்த்ததும் மன்னிக்குச் சந்தோஷம். தன்னுடைய முயற்சி பலித்து விட்டதில் அவளுக்குப் பெருமை. இந்த மட்டுமாவது பதில் வந்ததே!

''யாமினியைப் போகச் சொல்ல வேண்டியதுதானே?''

''வேணுமானால் நீயே போய் இதைச் சொல்லிக் கொடுத்து விட்டு வா. அவள் போறதாகச் சொன்னால் போகட்டும்.''

''ஏன், சொல்ல மாட்டாளா?''

''அது எப்படிப் போறேன்னு சொல்வாள்? அவளுக்கு ரோசம் என்று இல்லையா? அவள் என்கிட்டப் படிச்சவள். அவள் சுபாவம் எனக்கு நன்றாகத் தெரியும்.''

''நீங்க சொன்னால் கூடவா?''


தாயிடமிருந்து மகளுக்கு வரும்
உட்வர்ட்ஸ் அறிவுரை

உங்கள் குழந்தையை ஆரோக்கியமுடன் குதூகலமாக வைத்திருக்க உறுதுணை

உட்வர்ட்ஸ்

கிரைப் வாட்டர்

தலைமுறை தலைமுறையாக புத்திசாலித் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கொடுத்து வருவது உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர். குடல் வலி, புளிப்பு, உப்புசம், பல்முளைப்புக் கோளாறுகள் ஆகியவற்றுக்கு உடனடி நிவாரணம் தருவது உட்வர்ட்ஸ்.



காத்துக் கொள்வீர் கண்டிப்புடனே. எப்போதும் ஒரு புட்டி உங்கள் கைவசமிருக்கட்டும்



உட்வர்ஸ் கிரைப் வாட்டர் நூறு ஆண்டுகளுக்கு மேலாக புத்திசாலித் தாய்மார்களால் உபயோகிக்கப் பட்டு வருகிறது.

AT. 30 TM

''சொல்றது இருக்கட்டும்; நானே கொண்டு விடறதாச் சொன்னாலும் அவள் வரமாட்டாள். முதல்லே நானே அவளைப் போகச் சொல்ல மாட்டேன். தப்பு அவன் மேலே; தணிஞ்சு போக வேண்டியது மட்டும் அவளோ? என்ன நியாயம் இது? சரி, அப்படியே இவளைத் தாழ்ந்து பணிஞ்சு போகச் சொன்னாலும் அங்கே எல்லாம் ஒழுங்காக இருக்கும்னு என்ன நிச்சயம்? செய்யற தப்பை இன்னும் தைரியமாகச் செய்ய மாட்டான்னு என்ன உத்தரவாதம்? அதனாலே இதிலே என்னை இழுக்காதே. நீ வேணாப் போய்ச் சொல்லு!''

அதே போல் மன்னி போனாள். யாமினி எல்லாவற்றையும் பொறுமையாய்க் கேட்டுக் கொண்டாள். பிறகு மன்னியின் மடியில் விட்டிருந்த குழந்தை அரவிந்தனை மெதுவாக எடுத்துக்கொண்டு பேசாமல் எழுந்து போகப் பார்த்தாள்.

''எல்லாம் கேட்டுண்டு ஒண்ணுமே சொல்லாமல் போறியே!''

''என்னத்தைச் சொல்றது! அந்த மாதிரி போக வேண்டிய அவசியம் வந்தால் போக வேண்டியதுதானே! வரட்டும்; பார்த்துக்கலாம். இது அத்தை காதிலே விழுந்தால் சத்தம் போடுவாள். அழைச்சிண்டு போக அவரே வந்தால் கூட லேசில் அனுப்ப மாட்டேன்னு உறுமிக்கிண்டிருக்காள்!'' என்றாள் யாமினி, லேசான புன்முறுவலோடு.

அந்தப் புன்னகைக்கு என்ன பொருள் என்று மன்னிக்குத் தெரியும். அதனால் நேரமாகிறது என்று விடைபெற்றுக் கொண்டு திரும்பி விட்டாள்.

''தான் பெத்த பிள்ளை — தங்கள் குலத்தில் உதித்த குழந்தை — அதைப் பார்க்கக் கூட வராத இந்த விசித்திரமான மனிதர்களை என்னவென்று சொல்றது? அவங்களை எதிலே சேர்க்கிறது?'' என்று சொல்லித்தான் அனுப்பினாள் அத்தை. அவளுக்கு விஷயம் தெரியாது. வழக்கமாகச் சொல்கிற மனக் குறையைத்தான் சொன்னாள். அது என்னவோ இந்தச் சந்தர்ப்பத்துக்கு ரொம்பப் பொருத்தமாய் இருந்தது.

அத்தை வஜ்ஜிரம் பாய்ந்த கட்டை. பழமையின் உயர் பண்புகளுக்கு அவள் ஒரு தர்மகர்த்தா. நற்குடிப் பிறப்பின் நேர்மைக்கும் மேன்மைக்கும் அவள் சரியான பிரதிநிதி. உறுதிக்கும் தைரியத்துக்கும் அவள் ஒரு விளக்கம். குடும்பத்தில் எது இருக்குமோ இருக்காதோ, யாமினியும் குழந்தையும் ஒரு குறைவும் இல்லாமல்தான் இருந்தார்கள். அத்தை அத்தனை திறமையாக நடத்திக் கொண்டு போனாள்.

குப்புறப் படுத்துக் கொள்ளத் தெரிந்த குழந்தை தவழ்ந்தான்; மெல்ல எழுந்தான். அதுவரையில் ஒரு மாறுதலும் இல்லாமல், எப்போது இதற்கெல்லாம் ஒரு விடிவு காலம் பிறக்கும் என்று தெரியாமல், புரியாமல்தான் நாட்கள் மாதங்களாகப் போய்க் கொண்டிருந்தன.

ஊரிலிருக்கிற ஒவ்வொருவராக வந்து, துக்கம் விசாரிப்பது போல ''ஏன் பாப்பா இன்னும் புருஷன் வீட்டுக்குப் போக வில்லையா?'' என்று கேட்டுக் கொண் டிருந்தார்கள். அத்தைக்கும் யாமினிக்கும் ஒரு நாளாவது நல்ல தூக்கமில்லை. ஊரார் கேட்பது இருக்கட்டும். கொஞ்ச நாட்களாகி விட்டால் அவர்களுக்கு இது பழகிக்கூடப் போய் விடும். பழசாகியும் போய்விடும். ஆறிப் போன கஞ்சிதான். ஆனால் இவர்களுக்கு உள்ளூற இந்த ஊமை வலி, உண்மை வலியாக மாறிக் கொண்டு வந்தது. அடிப்பாரம் போட்டுக் கொண்டு தொட்டாலே வலிப்பதுபோல அத்தனை வேதனை!

குழந்தை, அம்மா என்று கூப்பிட்டான். தாத்தா என்று கூப்பிட்டான். அத்தை என்று கூப்பிட்டான். அப்பா என்றும் கூப்பிட்டான். யாமினிக்கு அப்போதெல்லாம் நெஞ்சே பிளந்துவிடும் போல் இருந்தது. அத்தை அவளுக்கு எந்தத் துன்பத்தையும் காட்டாமல் பார்த்துக் கொண்டாள். ஆனால் குழந்தை அப்பா என்று கூப்பிடுவதையும் அந்த அப்பாவின் நினைவு எத்தனை ஆழமாகத் தன் நெஞ்சில் பதிந்திருக்கிறது என்பதையும் அத்தைக்கே காட்டாமல் அவள் பார்த்துக் கொள்ள வேண்டி யிருந்தது. வெளிப்படுத்திக் கொள்ள முடியாத பிரிவுத் துன்பத்தை அவள் உள்ளூற அநுபவித்து உருகினாள்.

''என் தேகம் என்ன கல்லாலே கட்டி, சாந்தாலே பூசியிருக்கா, நான் இருக்கிறது என்ன நிலை? இன்னும் எத்தனை நாளைக்கு இருப்பேனோ? அதுக்குள்ளே எல்லாத்தையும் நல்லபடியாப் பார்த்துட்டுக் கண்ணை மூட மாட்டேனா?'' என்று சொல்லிக் கொண்டிருந்தாள் அத்தை. இதே கவலையால் அவள் இரவெல்லாம் தூக்கமின்றிப் புரண்டாள்.

யாமினியும் தூக்கம் பிடிக்காமல் ஒவ்வொரு நாளும் புரண்டு கொண்டு தான் இருந்தாள். எத்தனை தடவை எழுந்திருப்பாள்? எத்தனை தடவை தண்ணீரை மொண்டு குடிப்பாள்!

''பாப்பா, தூங்கலே இன்னும் நீ?''

''பேசாமே நீ தூங்கு முதல்லே. என்னையே கண்காணிச்சுண்டு இருக்காதே. தாகமா இருந்தாக்கூட எழுந்திருக்கக் கூடாதுங்கிறியே!''

''அதென்ன தாகமோ உனக்கு. கண்ணையும் மூடிச்சு, தண்ணியையும் குடிச்சிண்டிருந்தால் கூடப் போய் நல்லாருந்தால் இருக்கும்!''

''இல்லாட்டாப் போகட்டும் போ! நன்று இருந்து இப்ப என்ன ஆகணும்? உன் தொந்தரவுக்காகவே நாலு நாட்கள் மன்னியோட இருந்துட்டு வரலாம் போலிருக்கு!''

''உன்னை யார் வேண்டாம்னு கையைப் புடிச்சுக்கிறா இங்கே? குசாலாப் போ!''

அப்படியே மன்னியின் வீட்டுக்கு ஒரு வாரம்போல் போயிருந்தாள் யாமினி. அப்போதுதான் திடீரென்று ஒருநாள் பார்வதி யம்மாளுக்கு உடல் நிலை சரியில்லாமல் மோசம் அடைந் திருக்கிறது என்று சென்னையிலிருந்து ராஜேஷ் தந்தி கொடுத்திருந்தான், பட்டாபி அண்ணுவுக்கு. பெற்ற தாய்க்கு உடம்பு சரியில்லாதபோது கூட ஒரு பிள்ளையால் தந்தி கொடுக்க முடியாமல் போனது யாமினிக்கு விசித்திரமாக இருந்தது. அதே சமயத்தில் அந்த அளவுக்கு பாஸ்கரன் மீளவே முடியாத நிலைமைக்கு வந்திருப்பானே என்று பெரும் கலக்கமாகவும் இருந்தது. கொஞ்ச நஞ்சமிருந்த நம்பிக்கைக்கும் இடமே இருக்காதே என்று அவள் இடிந்தே போனுள்.

ஆனல் அவள் பயந்தது போல எதுவும் தலைக்கு மிஞ்சிப் போய்விடவில்லை என்று மறுநாள் போக மறுநாள் தெரிந்தது. தந்தி வந்ததுமே புறப்பட்டுப் போன பட்டாபி அண்ணு சென்னை போய்ச் சேர்ந்த பிறகு விவரமாகக் கடிதம் எழுதி யிருந்தார்.

பாஸ்கரன் தொழிற்சாலை விஸ்தரிப்புச்சம்பந்தமாக ஐரோப்பா போயிருக்கானும். அந்தச் சமயத்தில்தான் பார்வதியம்மாளுக்கு இதயக் கோளாறு திடீரென்று வந்து கஸ்தூரி நர்ஸிங் ஹோமில் சேர்த்திருக்கிறர்களாம். அவளுக்கு ஒரு தடவையாவது குழந்தை அரவிந்தனைக் கொண்டு வந்து காட்ட வேண்டுமாம். இந்தக் கடைசி ஆசையைப் பூர்த்தி செய்யாவிடில் அவள் நெஞ்சு வேகாதாம். அவருக்கும் தாய்க்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்ய முடியவில்லையே என்று நிம்மதி யில்லாமலே போய் விடுமாம். அதனல் வேறு எதற்காக இல்லாவிட்டாலும் தம்மை முன்னிட்டாவது யாமினி குழந்தையை எடுத்துக்கொண்டு வரவேண்டுமாம்.

''என்ன செய்யப் போறே? உன் மச்சினர் இப்படி எழுதியிருக்காரே?''

மன்னி இப்படிக் கேட்டபோது அத்தையும் அங்கே இருந்தாள். யாமினி அத்தையின் முகத்தைப் பார்த்தாள்.

''செய்யறது என்னத்தை? போயிட்டு வர வேண்டியதுதான். ஆயிரம் இருந்தாலும் சாகிற சமயத்திலே விட்டுக் கொடுத்திடலாமா? காலம் போகும்; சொல்லு நிக்கும். எதுக்கும் நேரே போனுத்தானே நமக்கும் நடப்புத் தெரியும்!''

''என்னலே வீட்டை இப்படியே போட்டுட்டு வர முடியாதே. தனியாப் போவியா?'' என்று யாமினியைப் பார்த்துக் கேட்டாள் மன்னி.

''ஏன், நான் எதுக்கு இருக்கேன்? நான் போறேன் துணையா'' என்றுள் அத்தை. இத்தனை வருஷங்களும் இந்த ஒரு காரியத்துக்காகவே வாழ்ந்தவள் போலத் தோன்றினுள் அவள்.

அத்தியாயம் 50

அத்தை சொல்லி விட்டாளே தவிர யாமினியை என்னவோ அவள் வற்புறுத்தித்தான் அழைத்துக் கொண்டு போக வேண்டி யிருந்தது. பாஸ்கரன் ஊரில் இருந்தாலாவது அவள் போவதற்கு ஒரு பொருள் உண்டு. அவன் இல்லாத வேளையில் அந்தக் கிழவியை முன்னிட்டுக் கொண்டு அங்கே எதற்காகப் போவது? அவளுடைய கடைசி விருப்பம் நிறைவேறுவதற்காகவா? இல்லாவிட்டால் அவளுடைய நெஞ்சு வேகாதாமே! அப்படியே போனல் போகட்டுமே! நெருப்புக்கு அந்தத் திராணி இல்லாமல் போனல் மண் இருக்கிறது. எதையும் மக்கி ஜீரணித்துக் கொள்ளுகிற ஆற்றல் அதற்கு இல்லையா, என்ன?

''நான்தான் எங்கிருந்தோ சகதியில் இருந்து வந்தவளாச்சே. அவளுடைய பிள்ளையை ஏமாற்றி மயக்கினவளாச்சே! என் பிள்ளையைக் காட்டி அவளுடைய கண்களைக் குளிர வைக்கணும் என்று ஏன் இப்ப நினைக்கணும்? நான் வந்ததற்கே முதல் காரணம் அவன்தான். அவள் பேசினதால் உண்டான காயம் இன்னும் என் நெஞ்சிலே பச்சைப் புண்ணுக இருக்கு. நான் அந்த வீட்டிலே இனி அடி வைச்சு, அத்தனை பேர்

முகத்திலும் முழிச்சு அவமானப்பட மாட்டேன்!'' என்றெல்லாம் பிடிவாதம் செய்தாள்.

கடைசியில், ''உங்க வற்புறுத்தலுக்காக வந்து தொலைக்கிறேன். ஆனால் அந்த வீட்டுக்கு வர மாட்டேன். என் சிநேகிதி ஒருத்தி திருவல்லிக்கேணியிலே இருக்காள். அங்கே போய் இருப்போம்; இல்லாவிட்டால் ஏதாவது ஒரு ஹோட்டல்லே வேணுமானாலும் இருப்போம். சம்மதமானால் வர்றேன். என் நெஞ்சிலே புண் இருக்கிறது உண்மையானால் அந்தக் கிழவி கண்ணுலே என் பிள்ளை படக் கூடாது!'' என்று சொல்லி விட்டுத்தான் புறப்பட்டாள்.

அவள் என்ன வேதனையோடு சொல்லியிருப்பாள் என்பது எழும்பூருக்குப் போன உடனேயே தெரிந்துவிட்டது. ஸ்டேஷனுக்கு மாணிக்கம் பாஸ்கரனுடைய வண்டியை எடுத்துக்கொண்டு வந்திருந்தான். அவன் முகத்தைப் பார்த்ததுமே யாமினி தன் வார்த்தை பலித்து விட்டதை ஊகித்துக் கொண்டு விட்டாள். அத்தனை குரூரமான சொற்களை ஏன் சொன்னோம் என்றுகூட அவளுக்கு வருத்தமாக இருந்தது. மரணம் என்பது எல்லாவற்றையும் சமனப்படுத்துகிற ஓர் அற்புதமான சக்தி என்பது அப்போதுதான் அவளுக்குப் புரிந்தது.

''என்ன, மாணிக்கம், என்ன ஆச்சு?''


''அரை மணிதாம்மா ஆச்சு, மூச்சு நின்னு போயி! ராத்திரியெல்லாம் ஒரே அலட்டல். பாவம், அவங்களுக்குக் கொடுத்து வைக்கலே போலிருக்குது. பேரப் பிள்ளையைப் பார்க்க!'' என்று பாஸ்கரனை அச்சாக இருந்த சின்ன வடிவத்தை ஆவலோடு நோக்கினான்.

''இப்ப எங்கே நர்ஸிங் ஹோமுக்குத் தானே?''

தன்னிடம் சிறிதளவுகூட அபிமானம் வைக்காத அந்த ஆத்மாவுக்காக அவள் மனம் இரங்கியது. கண்ணீர் கசிந்தது. உயிரற்ற அந்தச் சடலத்தை ஒருதடவை பார்த்துவிட்டு, பெரியப்பாவின் கையிலிருந்த அரவிந்தனையும் பார்த்தாள். அவன் பாட்டிக்காக அழாவிட்டாலும் அம்மாவிடம் போக வேண்டும் என்பதற்காகப் பெரிதாக அலறி அழுதான். அவன் கண்ணீர் பாட்டியின் உயிரற்ற உடல்மீது கொட்டியிருந்தால் அதுவரை பாட்டி கொடுத்து வைத்தவள்தான்.

அதற்கு மேல் யாமினி அங்கே இருக்க விரும்பவில்லை. காரணம் பட்டாபிக்கும் புரிந்தது. அவள் அஜிதாவின் முகத்தில் விழிக்க விரும்பவில்லை என்பதில் என்ன தப்பு இருக்கிறது?

திருப்பித் தருவது எப்போது?



அமெரிக்கா 15½ கோடி டாலர் கடன் வழங்கும் புதிய ஒப்பந்தம் இம்மாத மத்தியில் கையெழுத்தாயிற்றல்லவா? குறிப்பிட்ட திட்டத்துக்கென்றல்லாது பொதுக் கடன் இது. இந்தியாவுக்குப் பொருளாதார உதவி தொடங்கி இருபது ஆண்டுகள் நிறைந்துவிட்டன. இன்று மொத்த அமெரிக்கப் பொருளாதார உதவித் தொகை 1000 கோடி டாலருக்கு (ரூ. 7500 கோடி) நெருங்கி விட்டது.

''என் சிநேகிதி காமுன்னு ஒருத்தி இருக்காள் திருவல்லிக்கேணியிலே... நான் அங்கே போயிருக்கேன். உங்க வார்த்தையைத் தட்ட முடியாமல்தான் நான் வந்தேன். ஆனால் விதியை யாராலே தட்ட முடியும்? மேலே நடக்க வேண்டியது ஆகட்டும். மாணிக்கத்தைக் கேட்டால் நான் இருக்கிற இடத்துக்கு வரலாம்'' என்று சொல்லி விட்டு, மாமியாருக்கு ஒரு நமஸ்காரத்தையும் செய்து விட்டு வெளியே வந்து விட்டாள்.

காமுவின் வீடு அவளுக்கு நினைவு இருந்தது. நல்லவேளையாக அவளும் வீட்டில் இருந்தாள். ஆனால் யாமினியும் அத்தையும் குழந்தையோடு அந்த வீட்டில் ஒரு நாள் கூட இருக்க முடியாது போல் இருந்தது. சின்ன போர்ஷன். அதையும் தவிர அவர்கள் வந்திருந்த நிலையும் நேரமும் சரியில்லை.

அதற்குள், ''உனக்கு விஷயம் தெரியுமோ யாமினி? சுசீலா இந்த ஊரிலே தான் இருக்காள்'' என்றாள் காமு.

அதைக் கேட்டதும் காதில் தேன் பாய்வது போலிருந்தது.

''தெரியாதே — எங்கே இருக்காள்?''

''நந்தனம் எக்ஸ்டென்ஷனிலே! அவளுக்கு உன் பேரிலே ரொம்ப வருத்தம். அவள் கல்யாணத்துக்கு உனக்கு அழைப்பிதழ் அனுப்பியிருந்தாளாம். கடிதாசும் எழுதியிருந்தாளாம். நீதான் அப்பல்லாம் ஊரிலே இல்லை போலிருக்கே. அது தெரியாது அவளுக்கு. அப்புறம் பல தடவை போன் பண்ணினாளாம். யாருமே சரியாப் பதில் சொல்லலியாம். ஒரு நாள் யாரோ ஒருத்தி போனை எடுத்தாளாம். நீ பிரசவத்துக்காக ஊருக்குப் போயிருக்கிறதா அவள் சொல்லித்தான் தெரியுமாம். தற்செயலாக என்னை மரீனாவில் பார்த்துவிட்டு, 'பாருடி, நாங்க அப்படி இருந்தோம், இப்படி இருந்தோம். காலம் எப்படி மாறிப்

போச்சு பார்த்தியா?' அப்படின்னு ரொம்ப வருத்தப் பட்டுக்கிண்டாள். அவள் தனிக் குடித்தனம்தான் செய்யறளாம். அவளுடைய கணவர் எங்கேயோ அதிகாரியாக இருக்காராம். வீடு அழகா இருக்கு. சொந்த வீடு தானும்!'' என்றாள் காமு.

காமுவிடம் விலாசத்தை வாங்கிக் கொண்டு வந்த வண்டியிலேயே அங்கே போய்ச் சேர்ந்தபோது சுசிலா வாசலில் ஏதோ காய்கறி வாங்கிக் கொண்டிருந்தாள். யாமினியைக் கண்டதும் அவள் வாங்கியதை யெல்லாம் அப்படியே போட்டு விட்டு உள்ளே போவதா, வெளியில் வருவதா என்று நிதானப் படாமல் அப்படித் தவித்துப் போனாள். சுசிலாவா இப்படிக் கறுப்பெல்லாம் உதிர்ந்து காலையிலே பூத்த நந்தியா வட்டையைப் போல மாறி யிருக்கிறாள் என்று மகிழ்ந்து போனாள் யாமினி.

''ஏண்டி இவளே — என்னடி இது?''

''என்னடி இது — நீதானடி இது?''

இருவரும் அது நடு வாசல் என்பதையும் மறந்து ஒருவரை யொருவர் கட்டித் தழுவிக் கொண்டு பூரிப்புத் தாங்காமல் பேசத் தோன்றமல் நின்றார்கள்.

''அடி இவளே...உன் பிள்ளையாடி?'' என்று அத்தையின் கையிலிருந்த அரவிந்தனை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டாள் சுசிலா. அவன் அழ அழ உள்ளே ஓடினாள். அங்கே ஆபீசுக்குப் புறப்படத் தயாராக இருந்த தன் கணவன் முன்னே போய் நின்றாள்.

''பார்த்தீங்களா இவனை? யார் தெரியுமா இந்தப் போக்கிரிப் பயல்! நான் சொல்லிக்கிட்டே இருக்கல்லே? என் தோழின்னு சொல்லல்லே. யாமினி— அவனோட பிள்ளை. அட சும்மா அழாமல் இருடா....அடி யாமினி, இப்படி வாயேன். எங்க சுந்தரம் இவர்தான். வந்து பாரேன்...பார்த்தீங்களா எங்க யாமினியை? என் டியர்—என் உயிர்...'' என்று கூறியபடியே குழந்தையை யாமினியிடம் போக விட்டாள்.

சுசிலாவுக்கு மூச்சுத் திணறிற்று. உணர்ச்சி மிகுதியால் பேச்சு வரவில்லை. சுந்தரம் இதைப் பார்த்துச் சிரித்துக் கொண்டான். பார்க்க வாட்ட சாட்டமாக நன்றாகவே இருந்தான்.

''நான்தான் சுந்தரம். வருமான வரி அதிகாரியாக இருக்கேன். உங்களைப் பார்க்கணும்னுதான் நாங்க பேசிக்கிட்டே இருப்போம் அடிக்கடி. இப்ப வந்து நான் அவசரமாப் போகணும். போயிட்டுச் சாயங்காலம் சீக்கிரமா வந்துடுவேன். அதனாலே முடிஞ்சா அதுவரையிலே இருங்க. இல்லாட்டா இன்னொரு நாள் வாங்க. நாங்களும் வர்றோம்...''

''அதெல்லாம் இன்னொரு நாள் வர்றதாவது? இப்ப இவளை யார் போக விடப் போறாங்க? அதெல்லாம் இருப்பாள்; நீங்க வந்துடுங்க சீக்கிரம். நான் போன் பண்ணிக்கிறேன் இவங்க வீட்டுக்கு. அடடே உங்கூட வந்தவங்களை அடியோடு மறந்துட்டேன், பார்த்தியா? அந்தக் காய்கறிக்காரன் — நல்லவேளை, கறிகாய் வச்சுட்டுப் போயிருக்கான்..'' என்று வாசல் பக்கம் போனாள் சுசிலா.

யாமினி சிரித்துக் கொண்டாள். சுசிலா உருவத்தில்தான் மாறியிருந்தாள் என்றால் குணத்திலும் மாறியிருந்ததாகத் தோன்றியது. அவள் இப்படி உணர்ச்சி வசப்பட்டு யாமினி பார்த்ததே யில்லை. தாம்பத்தியம் அப்படிச் செய்திருக்குமோ?

சுந்தரம் சென்ற பிறகு, வண்டியை எடுத்துக் கொண்டு போகுமாறு மாணிக்கத்தை அனுப்பி வைத்தாள் யாமினி.

''முதல்லே நாம எல்லாருமே தலை முழுகணும். அப்புறம்தான் மற்றதெல்லாம்!'' என்றாள் யாமினி.

ஸ்நானம் செய்யும்போதும், பிறகு சாப்பிடும்போதும் சிநேகிதிகள் இருவரும் பேசிக் கொண்டே யிருந்தார்கள். கல்லூரியிலிருந்து போனது முதல் இந்த நிமிஷம் வரையில் நடந்ததை ஒன்று விடாமல் சொல்லி முடித்தாள் யாமினி.

சுசிலாவுக்கு எல்லாம் தனக்கே நேர்ந்தது போல ரோசமாக இருந்தது.

''அந்த மனுஷன் வெளி நாட்டிலேயிருந்து வரட்டும். அதுவரையிலே நீ கவலைப்படாமல் இங்கேயே இரு. இதுக்கு ஏதாவது ஒரு வழி செய்வோம். அது என்ன அக்கிரமம்? உண்டு இல்லைன்னு நான் பார்த்துப்புடறேன்!'' என்றாள் சுசிலா.

''அதைச் செய்யம்மா. புண்ணியமாப் போகட்டும்'' என்றாள் அத்தை.

''இதோ பார் சுசிலா. இதெல்லாம் உங்க வீட்டுக்காரர் காதுக்குக் கூட எட்டக் கூடாது. நாங்க இப்ப இதுக்கெல்லாம் ஒரு வழி செய்யணுங்கறதுக்காக இங்கே வரல்லே. நாங்க வந்த காரியம் வரதுக்கு முன்னாலேயே முடிஞ்சு போச்சு. இனிமே ஊருக்குப் போக வேண்டியது தான். என் விஷயத்தை நான் எப்படியோ தீர்த்துக்கறேன். நீங்கள்ளாம் சும்மா இருந்தால் நாலு நாட்கள் இருப்பேன். இல்லையோ, ராத்திரியே புறப்பட்டுடுவேன்!'' என்றாள் யாமினி.

யாமினியும் மாறித்தான் போயிருந்தாள். அவள் இப்படிப் பேசிச் சுசிலா பார்த்ததே யில்லை. (தொடரும்)


RENEWED GROWTH
WITH
DALMIA
REFRACTORIES
உஷ்ணத்தின் அடிப்படையிலே இயங்கும் தொழிற்சாலைகளுக்கு ''ரிஃப்ராக்டரீஸ்'' (சுட்ட கற்கள்) இன்றியமையாததாக இருப்பதால் நாளுக்கு நாள் வளர்ந்துவரும் நமது தொழில்களுக்கு ''ரிஃப்ராக்டரீ''களின் தேவையும் பெருகி வருகிறது.
ஆசியாவிலே ''ரிஃப்ராக்டர்'' உற்பத்தியாளர்களில் முதல் ஸ்தானம் வகிக்கும் டால்மியாவின் இரண்டு நவீன தொழிற்சாலைகளில், சுட்ட கற்கள், ரசாயன முறையில் இறுக்கப்பட்ட கற்கள், மித, அதிக, மிக அதிகமான உஷ்ணத்தை தாங்கவல்ல செங்கற்கள்; மணற் சத்துள்ள செங்கற்கள், கையனைட், ஸிலிமினைட் மற்றும் இரசாயனங்களைத் தாங்கக்கூடிய செங்கற்களையும் தயாரிக்கிறார்கள். வாடிக்கையாளரின் விசேஷ சேவைக்கேற்பவும் தயாரிக்கிறார்கள்.
ஒரிஸா சிமெண்ட் லிமிடெட்
ராஜ்கங்பூர், ஒரிஸா
பூரண விற்பனை ஏஜண்டுகள் :
M/s. S. G. சப்ளை ஏஜன்ஸி
48-D, முக்தாரம் பாபு தெரு, கல்கத்தா
உலைக் கற்கள் தயாரிப்பவர்கள் :
டால்மியா ஸெராமிக் இண்டஸ்ட்ரீஸ்
டால்மியாபுரம் (தமிழ்நாடு)
H. O. 4, ஸிந்தியா ஹவுஸ், புதுடில்லி-1

மங்கிய வெய்யில் மண் நிறமாகக் காட்சி அளித்தது. வெய்யில் விழுந்த மண்ணிலோ விரிசல் தெளிவாகத் தெரிந்தது. அந்த விரிசலில் சின்னஞ் சிறு முகம் தோன்றியது. பச்சிளம் பாலகனின் முகம்; நேற்றுத் தோன்றி இன்று மறைந்துவிட்ட சிசுவின் சிறு முகம். குற்ற உணர்விலே அவன் குறுகுறுத்துப் போய் முழங்கால்களுக்கிடையே முகம் புதைத்து உட்கார்ந்திருந்தான். அவன் ஏதோ சொன்னான். நிலத்தில் நின்று பேசியதாகத் தெரியவில்லை; ஆழ்ந்த கிணற்றுக்குள்ளிருந்து பேசுவதாகத் தோன்றியது. அவன் குரல் அவனைச் சுற்றியே எதிரொலித்தது. உடைந்த தொண்டையில் அவன் பேசிய பேச்சு அவன் உடலையே ஓர் உலுக்கு உலுக்கிவிட்டது.

அவன் படுக்கையிலிருந்து எழுந்து ரேடியோவுக்கு அருகில் போய் நின்றுகொண்டான். அவன் சகோதரன் வந்து குழந்தை இல்லை என்னும் செய்தியை அவனுக்குக் கூறினான். அவன் தன் சகோதரனின் இளம் விழிகளை ஒரு முறை நோக்கினான். அவற்றில் உள்ளத்தை முன்னெனக் குத்தும் கூரான சூன்யம் உருவாகியிருந்தது. அந்தச் சூன்யம் விழிகள் வழியே பாய்ந்து அவன் உடல் முழுவதையும் ஆட்கொண்டது. அவன் கைகளில் 'வால்யூம்' சுழன்றது. ரேடியோ உரத்துக் கதறத் தொடங்கியது. அவன் உடலே பாளம் பாளமாகப் பிளந்து போவது போலிருந்தது. ஆழமான நீரற்ற கிணற்றுக்குள் இறங்கித் தவித்து உருகுவது போன்ற பிரமையில் மறுகினான் அவன்.

அவன் தந்தையும் மூன்று தம்பிமார்களும் அவனோடு ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டார்கள். அவன் பேசாமல் நடந்து கொண்டிருந்தான். வழியில் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. பஸ் நிலையத்தில் அவனால் நிற்க முடியவில்லை. அவன் தந்தை அருகில்தான் நின்று கொண்டிருந்தார், பஸ் பிடிக்கும் முயற்சியில். அவன் விழாத தோஷமாகப் பக்கத்தில் இருந்த பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டான். முதுகு எலும்பு இப்படியும் வளையும் என்பது அவனுக்கு முதன் முறையாக அப்பொழுதுதான் தெரிந்தது. நாற்புறமும் ஓர் உயிரற்ற சந்தடி நிலவியது. அவன் பார்வைக்குச் சூன்யமாகித் தோன்றிய உருவங்கள் அவனைச் சூழ்ந்து நின்று பேசிக் கொண்டிருந்தன. எதிரே வெய்யிலின் விரிசல்கள் அவன் கண்முன்னே நிழலாடின.

'நீ அந்த ஆள்தானா?' – அவன் தன்னைத் தானே வெறுப்போடு ஒரு கேள்வியைக் கேட்டு அரைகுறையாக நிறுத்திக் கொண்டான். போலீஸ் அதிகாரி குற்றவாளியைக் கேட்கும் முதல் கேள்வியிலேயே ஆள் அயர்ந்து போய் விடுவானே, அதுபோல. அதற்கு மேல் அவனால் ஒன்றும் பேச முடியவில்லை.



மணல் வீடு



மூன்றாவது குழந்தை வேண்டுமென்று அவன் எண்ணவில்லை. இதற்காக முன்புகூட ஒரு முறை தன் மனைவிக்குச் சிகிச்சை அளித்திருக்கிறான். இந்தத் தடவை கூட அவன் முன்னெச்சரிக்கையாகத்தான் இருந்தான். இருந்தாலும்... அதற்காகத் தகாத காரியத்தைச் செய்து, அதனைத் தப்பித் தவறிக் கூட அவன் தன் மனைவியை இழக்கத் தயாராக இல்லை. அப்படி ஏதாவது இசைகேடாக நடந்துவிட்டால், இருக்கும் இரண்டு குழந்தைகளைக் காப்பாற்றுவது எப்படி? வழி ஒன்றும் தோன்றாமல் அவன் கண்களை இறுக மூடிக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்து விட்டான். இருக்கும் இரண்டு குழந்தைகளைக் காப்பாற்றுவதே பெரும் சுமையாகப் பட்டது அவனுக்கு.

சிறுமூச்சு, பெருமூச்சு விட்டு, ''மூன்றாவது குழந்தையை நினைத்தாலே எனக்கு மூச்சுத் திணறுகிறது. எப்படி ஜீவனம் நடக்கும்? மேலே என்ன செய்வது என்றே எனக்கு விளங்கவில்லையே! இப்பொழுது வருகிற வருவாயில் நாம் வாழ்வதே சிரமமாக இருக்கிறது. குழந்தைகளைக் குளிரிலிருந்து காக்க நல்ல கம்பளித் துணிமணிகள் நம்மிடம் கிடையாது. நீயோ இருக்கிற நூல் சட்டைகளையும், பைஜாமாக்களையும் இரண்டு மூன்றாக மாட்டிப் பள்ளிக்கூடம் அனுப்பி வைக்கிறாய்!'' என்பான் தன் மனைவியிடம். அதற்கு மேல் பேச வாய் வராமல் அவன் மௌனமாவான். மனைவியும் மௌனமாகக் குனிந்த தலை குனிந்தபடி கேட்பாள். உறைபனி உருகி வழிந்தால் உடல் சில்லிட்டு உரோமம் குத்திட்டுப் போகுமே, அந்த நிலையை அடைந்து, இருவருமே ஒருவரையொருவர் மௌனமாகப் பார்த்துக் கொள்வார்கள்.

பஸ்ஸிலிருந்து இறங்கி அவர்கள் ஆஸ்பத்திரி வராந்தாவில் போய் உட்கார்ந்து கொண்டார்கள். அவன் மட்டும் தனியாக டாக்டரைக் காண அறைக்குள் சென்றான்.

''நீங்கள் எப்படி வந்தீர்கள் இங்கே?'' என்று கேட்டார் டாக்டர்.

''நான் சிவா பேபிக்காக வந்திருக்கிறேன்.'' கொளுத்தும் வெய்யிலில் தனியாக நின்று தனக்குத் தானே பேசிக் கொள்வது போலத் தோன்றியது அவனுக்கே.

''மிஸ்டர்! உங்கள் குழந்தை ரொம்ப அழகாக இருந்தது. இத்தனை அழகான குழந்தையை நாங்கள் எத்தனையோ காலத்



மேற்கு பாகிஸ்தானைச் சேர்ந்த முல்தானில் 1938ம் ஆண்டு ஜூன் மாதம் 1ந் தேதி பிறந்தவர் ஸ்ரீ பல்தேவ் வன்ஷி. நாட்டுப் பிரிவினை காரணமாகப் பள்ளிப் படிப்பைத் தொடர முடியாமற் போனாலும், தமது சுய முயற்சியால் பி.ஏ., பி.இடி. பட்டம் பெற்றவர். மரத்தில் சிற்பம் செதுக்குவதில் ஆர்வம் கொண்டவர். கவிதை உள்ளம் படைத்தவர். புதுக் கவிதை முறையிலே 'தர்சக் தீர்க்கா' என்னும் கவிதைத் தொகுதி ஒன்று வெளியிட்டிருக்கிறார். 'அன்வய்' என்று ஒரு சஞ்சிகையும் நடத்தி வருகிறார்.

'மணல் வீடு' என்னும் தமது கதையில் யாருமே தெரிந்து வேண்டுமென்று செய்யாத ஒரு குற்றத்துக்குக் 'கன்காது' வைத்து மணல் வீடு சமைத்து மனத்தை உருக வைத்து விடுகிறார்!

பல்தேவ் வன்ஷி

துக்குப் பிறகுதான் பார்த்தோம். எடையி லும் எத்தனையோ குழந்தைகளைக் காட்டிலும் வேறாக இருந்தது. நாங்கள் அதைக் காப்பாற் றப் பெருமுயற்சி செய்தோம். ஆனால் எங்கள் முயற்சி பலன் தரவில்லை என்பதை மிகுந்த மன வருத்தத்தோடு சொல்ல வேண்டி யிருக்கிறது!''

அவன் டாக்டரின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தான். டாக்டர் கூறுவதெல் லாம் உண்மையாக இருக்குமா? அவனுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. ஏனென்றால் முதல் நாள் இரவுதான் அவனே தன் குழந்தையை இரு கைகளிலும் ஏந்திக் கொண்டு ஒரு வார் டிலிருந்து இரண்டாவது வார்டுக்கும் இரண் டாவது வார்டிலிருந்து மூன்றாவது வார்டுக்கு மாக அலைய வேண்டியிருந்தது. ஒரு சமயம் எக்ஸ்ரேக்குப் போவான்; மறு சமயம் பிராண வாயு செலுத்தும் அறைக்குப் போவான். ஐந்தடுக்குக் கட்டிடத்தில் மேலும் கீழும் அவன் ஏறி இறங்கியது அவனுக்கல்லவா தெரியும்? குழந்தையை மட்டுமின்றி ஆசை யையும், கவலையையும் தூக்கிக் கொண்டுகூட அலைந்தவன் ஆயிற்றே அவன்! ஆக்ஸிஜன் கண்ணாடிப் பெட்டிக்குள் குழந்தையை வைத்தபின்னும் அது சிணுங்கிச் சிரமப்பட்டு மூச்சு விட்டது.

''இதோ பாருங்கள், உங்களிடம் ஒரு விஷ யம் சொல்ல வேண்டும். நீங்கள் படித்தவர். நடக்க வேண்டியது நடந்து விட்டது என்பது உங்களுக்குத் தெரியும். எங்களுக்கு மிகவும் வருத்தம், எங்கள் முயற்சி பலன் தராத தில்!'' டாக்டர் இப்படிக் கூறிக் கொண்டே தமது வேறு வேலை எதையோ கவனிக்கச் சிறிது தூரம் போய் விட்டார். அவன் கண்கள் அகல விரிந்திருந்தன. ஆஸ்பத் திரிச் சுவர்களின் வெண்மையும் தரையின் வழுவழுப்பும் அவற்றை நிறைத்திருந்தன. அவனுக்குத் தனது கண் மணிகள் நிலைத்து நின்றுவிட்டன போலத் தோன்றியது. எல்லா வற்றையும் நன்றாகப் பார்த்துக் கொண்டி ருந்த போதிலும் எதையும் பார்க்க இயலாத குருடனாகக் காட்சி தந்தான் அவன். டாக்ட ரின் வார்த்தைகளில் அவனுக்குச் செயற்கை மணம் அடித்தது. இயந்திரப் போக்கு தொனித்தது. டாக்டரின் சொற்கள் அவன் உள்ளத்தைத் தொடவில்லை. உடலில் உலர்ந்த சருகுகளைப் போலப் பட்டுக் கீழே விழுந்து நழுவிந்தாற் போலிருந்தன.

டாக்டர் மீண்டும் அவன் அருகில் வந்தார். அவன் கையைத் தம் கையில் ஏந்திக் கூறி னார்: ''தங்கள் குழந்தையின் சாவுக்கு உண் மைக் காரணத்தை நாங்கள் அறிய விரும்பு கிறோம். ஏனென்றால், அது பிறந்து மூன்று மணி நேரத்துக்கெல்லாம் உங்கள் தாயார் அதற்குத் திராட்சைச் சாற்றைப் புகட்டி யிருக்கிறாள். அதனால் அதற்கு மூச்சுத் திண றத் தொடங்கி யிருக்கிறது. சாறு ஒரு வேளை சுவாசப் பைக்குள் போய்விட்டதோ, என் னவோ? இது பற்றி நாங்கள் ரிப்போர்ட் செய்தால் போலீஸ் அவர்களுக்குத் தொந் தரவு தரலாம்.''

டாக்டர் இங்கே நிறுத்திவிட்டு அவன் முகத்தில் தோன்றும் உணர்ச்சிகளைப் படிக்க லானார். அவர் சொல்ல நினைத்த அத்தனையும்

அவனது முகத்தில் அச்சமாக எழுதப்பட்டுத் தெளிவாகப் பளிச்சிட்டது. டாக்டருக்கு அவன் உணர்வுகளைப் படிப்பதில் சிரமம் ஏற் படவில்லை. டாக்டர் அவனையே வைத்த கண் வாங்காமல் பார்க்கலானார். அவனுக்கு அவ ருடைய முகம் பழைய காலத்துக் கூரையாக, விரிசல்கள் விழுந்து உப்புப் பூத்துக் காரைகள் கொட்டும் பூச்சாகத் தோன்றியது. அவன் அந்த விரிசல்களிலும் டாக்டரைக் காண முயன்றான்; நர்சுகளைக் காண முயன்றான். ஆனால் எதுவுமே நிர்மானமாக, முழு உருவமாகத் தோன்றவில்லை. அவன் நடு நடுங்கி விட்டான். ''இல்லை, டாக்டர்! அதெப்படி நடக்க முடியும்? அவள் என் தாயார்; என்னைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தவள்; எனது இரு குழந்தைகளை வளர்த்தவள் கூட அவளே. அந்தக் குழந்தை களிடம்தான் அவளுக்கு எவ்வளவு அன்பு! எவ்வளவு பாசம்! அவள் அப்படி வேண்டு மென்றே செய்திருப்பாள் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?'' என்று கேட்டான்.

''இல்லை. அப்படி நான் எண்ணவில்லை. இருந்தாலும் ஐயத்தைப் போக்க வேண்டும் இல்லையா?''

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''குழந்தையின் தொண்டையில் சிறு ஆப ரேஷன் செய்து பார்க்க விரும்புகிறோம்; கார ணம் என்ன என்று அறிய விரும்புகிறோம். ஏன் எங்களால் அதைக் காப்பாற்ற முடிய வில்லை என்பதையும் தெரிந்து கொள்ள விரும் புகிறோம்!'' என்று கூறிய டாக்டர் சிறிது நிறுத்தினார். பிறகு, ''உங்கள் குடும்பத்தில் யாருக்கும் டி. பி. கி. பி. இல்லையே!'' என்று கேட்டுப் பேச்சை மாற்றினார்.

''இல்லை, இல்லவே இல்லை!''

''இதற்கு முன்னால் எத்தனை குழந்தைகள் உங்களுக்கு?''

''இரண்டு.''

''ஆண் குழந்தைகளா?''

''ஆமாம்; ஆண் குழந்தைகள்தான்.

''என்ன வயது?''

''ஒருவனுக்கு ஏழு வயது, இன்னொருவ னுக்கு நாலு வயது!''

''உம்!'' சிறிது நேரம் ஏதோ யோசனை செய்தவர், ''இந்தாருங்கள்! இந்த ஃபாரத் தில் கையெழுத்துப் போட்டுக் கொடுங்கள், ஆபரேஷன் செய்து பார்ப்பதில் உங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று!'' என்றார். அதோடு நிறுத்திக் கொள்ளாமல், ''நீங்கள் மிகவும் தைரியமாகத்தான் பேசுகிறீர்கள்! எத்தனையோ பேர்களைப் பார்த்திருக்கிறோம், பேச முடியாமல் தவிப்பார்கள்; தொண்டை அடைக்கப் பிழியப் பிழிய அழுவார்கள்!'' என்று நீட்டினார்.

அவன் கண்களிலே ஒரு காட்சி நிழலாடியது. யாருக்காவது கையைக் காலை வெட்டி அறு வைச் சிகிச்சை செய்ய வேண்டுமானால் டாக் டர்கள் நோயாளிக்குத் தைரியமூட்டுவார்கள். ஆபரேஷன் தியேட்டரில் மேஜையில் படுக்க வைத்து அன்பொழுகப் பேசி மயக்க மருந்து அளிப்பார்கள். அப்புறம் கையைக் காலை வெட்டி அலங்கோலமாக்குவார்கள். மயக்கம் தீர்ந்து பார்த்தால் அவன் பெயர் மாறியிருக் கும்! ஆம், அவன் பெயருக்கு முன்னால் பூர்

துளிகள் சில செய்கின்ற மாயம்
தூய்மை பளிச்சிடும் வெண்மை மயம்!

கடைசி அலசலுக்கு முன், நீரில் 10—15 துளிகள் மாக்ஸிம் கலக்கவும். அதில் துணிகளை 15 நிமிடம் ஊறவைக்கவும். பிறகு பிழியாமல் அப்படியே உலரவிடவும்.

மாக்ஸிம் உபயோகிப்பதினால், ஒரே ஒரு காசு செலவில், நான்கு சட்டைகள் அல்லது இரண்டு சேலைகள் பனிபோல் வெண்மை பெறுகின்றன.

ULKA-GMH-77AM






'டெரின்', 'டெரின்/காட்டன்', கைத்தறி மற்றும் காட்டன் போன்ற எல்லா துணிகளுக்கும் பளிச்சிடும் வெண்மை அளிக்கும் புதிய அதிசய ஒயிட்டனர்.

மாக்ஸிம்

இந்தியாவில் ஜெஃப்ரே மானர்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்டால் தயாரிக்கப்படுகிறது.

பாடி பில்டிங்கில் டிவிஎஸ்ஸின் பழுத்த அனுபவத்தை நன்கு பயன்படுத்தி மிகச் சிறந்த பாடிகளை நியாய விலையில் அமையுங்கள்



ஆண்டுதோறும் ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடிகள் கட்டுகிறோம். 45 ஆண்டு அனுபவத்தின் காரணமாக தேவைகளுக்கு ஏற்ற பாடிகளை அமைக்க நன்கு அறிந்துள்ளோம். அன்றியும் எங்கள் அனுபவமும் ஆராய்ச்சியும். சிக்கனமாகப் பாடிகளைக் கட்ட உதவியுள்ளன.

பாடிகளை அமைக்கும் சாமான்களைத் தேர்ந்தெடுப்பதில் குறியாய் இருக்கிறோம். பக்குவமான உயர்தர மரம், பாஸ்பேட் ஸ்டீல் ஷீட் முதலியவற்றை உபயோகிக்கிறோம். ஒவ்வொரு வண்டியையும் கடினமான சோதனைக்குப் பின்னரே டெலிவரி செய்கிறோம். பாடிகளைப் பற்றி அதே சிந்தனையாய் ஆராய்ச்சி செய்து புதிய புதிய டிசைன்களைக் கண்டுபிடித்து நடைமுறையில் நேரும் பிரச்னைகளைச் சமாளிப்பதில் கண்ணும் கருத்துமாய் உள்ள நிபுணர்கள் கொண்ட தனிப் பகுதி ஒன்று டிவிஎஸ்ஸில் உண்டு.

டிவிஎஸ் கட்டும் பாடிகள் லேசானவை. ஆதலால் எண்ணெய்ச் செலவு குறைவு. அன்றியும் கரடுமுரடான சாலைகளில் ஆட்டம் கொடுக்காது. உறுதியானது. பல்லாண்டுகள் உழைக்கும்.

இந்தியாவிலேயே பாடிகள் கட்டும் மிகப் பெரிய ஸ்தாபனம் டிவிஎஸ்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ்
பிரைவேட் லிமிடெட்
மதுரை

(இது ஒரு டிவிஎஸ் ஸ்தாபனம்)

TVS
உங்கள்
நம்பிக்கைக்கு
உரியது
டிவிஎஸ்

SI-6089 R.

ஙலைடமொழி சேர்க்கப்பட்டிருக்கும்! அப்படி ஏதாவது....

அந்தச் சகதியிலிருந்து எப்படியாவது ஓடி விட்டால் என்ன என்று எண்ணினான் அவன். ஆனால் அவன் கால்கள் அவன் முயல முயல அழுந்தினவே ஒழிய அடியெடுத்து வைக்க முடியவில்லை. அடித்துப் போட்டாற் போல் ஆகிவிட்டான் அவன்.

''வேண்டாம் டாக்டர்! நான் எப்படி எழுதிக் கொடுப்பேன்?'' என்று அழாத தோஷமாகக் கெஞ்சினான் அவன்.

''இதில் உணர்ச்சிவசப்பட்டுப் போவதற்கு என்ன இருக்கிறது? இது உயிரற்ற உடல். இது இனிப் பயன்படாது என்று உங்களுக்குத் தெரியும். எதற்காக அரற்றிக்கொள்கிறீர்கள்? இந்தக் குழந்தையின் உணவுக் குழலும் மூச்சுக் குழலும் ஒன்றாக இணைந்துவிட்டதாக எங்களுக்குத் தோன்றுகிறது. அதை நாங்கள் பார்க்க விரும்புகிறோம். இதனால் பிற்காலத்தில் பிறருக்குப் பலன் ஏற்படலாமே!'' என்றார் டாக்டர்.

அவனால் பதில் கூற முடியவில்லை. இந்தக் காலத்தில் எவன் பிறருக்கு நல்லது நினைக்கிறான்? பிறர் நலனை மற்றவர்கள் நினைக்காத பொழுது அவன் மட்டும் நினைப்பானேன்?

டாக்டர் அவன் தோள்பட்டையில் கை வைத்து, அவனிடம் பேனாவை நீட்டிக் கூறினார்: ''கையெழுத்துப் போடுங்கள்! இதில் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது?''

அவன் பேனாவைக் கையில் வாங்கிக் கொண்டு ஒரு முறை காகிதத்தையும் மறு முறை டாக்டரின் பார்வையையும் நோக்கினான். அங்கே டாக்டர்தான் தோன்றினார். மனித இயல்பு படைத்த மனிதனைக் காணோம். தோள் பட்டையை அழுத்திய கைகளின் கனமயில் அவன் உள்ளிருந்த மனிதன் அழுந்தி விட்டான். அவன் மூச்சைப் பிடித்துக் கொண்டு டாக்டர் காட்டிய இடத்தில் கையெழுத்திட்டு விட்டான்.

''சடலம் எங்களுக்கு எப்பொழுது கிடைக்கும்?''

''ஒரு மணி நேரத்தில்!''

''இங்கு வரவேண்டுமா?''

''ஊஹூம். சவக் கிடங்கில்!''

''டாக்டர்! மூன்றாவது மாடியில் இருக்கும் என் மனைவிக்கு ஒரு முறை இந்தக் குழந்தையைக் காட்டி வரலாமா?''

''கூடாது; சவத்தை வார்டுக்கு எடுத்துப் போகக் கூடாது!''

''அப்படியானால் ஆபரேஷன் முடிந்ததும் அவளை இங்கே அழைத்து வருகிறேனே!''

''கூடாது, மிஸ்டர்! உங்களுக்கு எதுவுமே தெரியவில்லையே! ஆபரேஷனுக்கு அப்புறம் நீங்கள் இதைச் சவக்கிடங்கில்தான் போய்ப் பெற்றுக் கொள்ள வேண்டும்!'' கையெழுத்து வாங்குகிற வரையில் நயமாக ஒலித்த டாக்டரின் குரலில் இப்போது கடுமை தொனித்தது. மேற்கொண்டு அவன் ஏதாவது கூறினால் அது டாக்டரின் காதில் ஏறாது என்பது அவனுக்கு விளங்கி விட்டது. வெடித்துச் சீறி விழுவார் என்பதும் விளங்கி விட்டது. எனவே, அவன் வாய் திறந்து எதுவும் பேசவில்லை. மூன்றாவது மாடியில் உள்ள தன் மனைவியைப்


''டேபிள் லேட்டுக்குப் பதில் ஹேர் லேட்டுக்கு ஏற்பாடு செய்துட்டோம் !''

பார்த்து வரலாம் என்று அவன் அங்கிருந்து வெளியேறி நடக்கலானான். வராந்தா வழியாக நடந்து படியேறியபொழுது, அவனுக்கு யோசனையாகி விட்டது, 'மனைவியின் எதிரில் போய் எப்படி நிற்பது? மனிதனைப் போலவா? கணவனைப் போலவா? அல்லது...' என்று!

அறைக்குள் நுழைந்ததும் அவன் தன் முகத்தில் செயற்கை முறுவலை வரவழைத்துக் கொண்டான். மனைவியின் முகம் வெளிறிச் சாம்பலாகிக் காட்சி தந்தது. அவளது விழிகள் எத்தனை எத்தனையோ கேள்விக் குறிகளைத் தேக்கி நின்றன! மனைவியின் பார்வை அவன் முகத்தில் பதிந்து புதைந்தது. அவன் தன் முகத்தில் இழையோட விட்டிருந்த முறுவல், பழைய சிமிட்டிப் பூச்சைப் போலப் பாளம் பாளமாகத் தெறித்து உதிர்ந்தது. அவன் எப்படியோ சமாளித்துக் கொண்டு மனைவிக்கு அருகில் சென்று தலைமாட்டில் உட்கார்ந்தான். அவள் தலைமயிரைக் கோதியவாறே, ''குழந்தையை மேலே குழந்தைகளின் வார்டில் சேர்த்திருக்கிறார்கள். நான் இரவு வெகு நேரம் வரை அங்குதான் இருந்தேன். அதற்குக் குளுகோஸும் ஆக்ஸிஜனும் தருகிறார்கள். பிழைத்து விடலாம் என்கிறார் டாக்டர்! நமக்கும் அதிர்ஷ்டம் வேண்டும்!'' என்று ஒரு மூச்சில் சொல்லி முடித்தான். பிறகு பார்வையைத் தூக்கி வார்டில் இருந்த மற்றப் பெண்களைப் பார்த்தான். அவர்கள் கூரிய விழிகளால் அவனைச் சுட்டு விடுபவர்கள் போல் பார்த்தார்கள். அவர்களுக்கு நடந்ததெல்லாம் முன்பே தெரியும் போலிருந்தது அவனுக்கு. அவர்களது பார்வைக் கூர்மை தாளாமல் தலையைத் தாழ்த்திக் கொண்டான்.

''நான் இரவு முழுதும் தூங்கவில்லை. நினைவு முழுதும் குழந்தையைச் சுற்றியே இருந்தது. சிறிது நேரத்துக்கு முன்பு கண் இமைகள் கனத்து மூடவே நான் நடுங்கி விட்டேன். என் கைகளே என் முகத்தைத் தூங்கி அணைந்தாற் போல... என்று அரற்

முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும் என்பதற்கு டாக்டர் டி. எம். பி. மகாதேவன் அவர்கள் தபால்துறை சன்மார்க்க சங்கத்தில் நிகழ்த்திய சொற்பொழிவில் அழகானதொரு விளக்கவுரை தந்தார்:

காலில் ஒரு முள் தைத்து விட்டால், அந்த முள்ளை இன்னொரு முள்ளால் எடுக்கிறோம். ஒரு முள் மற்ற முள்ளை எடுக்க உதவியதே என்பதற்காக அதனிடம் நன்றி விசுவாசம் பாராட்டி, பற்றுக்கொண்டு அந்த முள்ளை நாம் மீண்டும் காலில் குத்திக்கொண்டு மகிழ்வதில்லை. குத்திய முள்ளோடு எடுத்த முள்ளையும் விட்டெறிந்து விடுகிறோம்.

பற்று விடுவதற்காகப் பற்றற்றான் பற்றினைப் பற்றுவதும் நல்லோர்களின் சேர்க்கையை நாடுவதும் முள்ளை முள்ளால் எடுக்கும் காரியமாகவே அமைய வேண்டும். —அக்ஷயம்

பித்த அவன் மனைவி அப்படியே நிறுத்தி விட்டாள்.

அவன் கண்களில் நீர் குளம் கட்டியது. அதை ஆறாகப் பெருக விடாமல் அணை கோலினான் அவன். தன்னைச் சுதாரித்துக் கொண்டு, ''உன்னை வீட்டுக்கு அழைத்துப் போக டாக்டரிடம் கேட்டேன். இங்கு படுக்கைகள் குறைவாக இருக்கின்றன. அநாவசியமாகத் தரையில் கிடந்து உருளுவதில் என்ன பயன்? இன்றைக்கு மாலையே உன்னை வீட்டுக்கு அழைத்துப் போய்விடுகிறேன். குழந்தை நன்றாகக் குணமடையாதவரையில் இவர்கள் விடமாட்டார்கள். நான் அடிக்கடி வந்து பார்த்துக் கொள்கிறேன்!'' என்றான்.

மனைவி மேலும் ஏதாவது பேச்சைத் தொடருவாளோ என்ற ஐயத்தில் அவனே மீண்டும் தொடர்ந்தான்: ''இதில் பயப்படுவதற்கு ஒன்றும் இல்லை. அநுபவிக்க வேண்டியதை அநுபவித்துத்தானே ஆக வேண்டும்? வேண்டாம் என்றால் விடுமா?'' என்றவன் சட்டென்று நிறுத்தி விட்டான். அவனுக்குத் தான் சரியாகப் பேசவில்லை; தன் பேச்சில் எங்கேயோ விரிசல் தெரிகிறது என்று தோன்றியது. விரிசலை மேலும் அதிகப்படுத்தினால் உண்மை உருவம் தெரிந்து விடும், அப்புறம் சமாளிக்க முடியாது என்பதையும் கண்டான். எனவே, ''என்ன யோசிக்கிறாய்?'' என்று கேட்டான்.

''ஹூம்... ஒன்றும் இல்லை!'' — கூரையைப் பார்த்த வண்ணம் கூறினாள் அவன் மனைவி. ''பிறந்தது முதல் நான் குழந்தையைத் தூக்கிக்கொள்ளவே யில்லை. ஏன், ஒரு முறை நன்றாகப் பார்க்கக்கூட இல்லை!'' என்று தொடர்ந்தவள் சிறிது நேரம் யோசனையாக இருந்தாள். பிறகு, ''குழந்தை யாரைக் கொண்டிருக்கிறது?'' என்று ஆசையை அடக்க முடியாமல் கேட்டாள்.

அவன் தட்டுத் தடுமாறி விட்டான். என்ன பதில் சொல்வது?

''சரி, நான் வருகிறேன். எனக்கு நேரம் ஆகிறது. மாலையில் வந்து உன்னை வீட்டுக்கு அழைத்துப் போகிறேன். இப்பொழுது ஏதாவது உனக்கு வேண்டுமா?'' என்று கேட்டவன், அவள் பதிலை எதிர்பாராமலே, அவள் கண்களில் தன் முகத்தைக் காட்டாமலே **வெளியேறி விட்டான்.**

கீழே தந்தையும் தம்பிகளும் **உட்கார்ந்து** அவனை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள் என்று நினைவு வந்தது. கீழே அவன் வந்த பொழுது அவனுடைய அண்ணனும் வந்திருந்தார். அவரோடு இரு உறவினர்களும் இருந்தார்கள்.

எல்லோரும் சவக் கிடங்குக்குச் சென்றார்கள். அவன் எல்லோருக்கும் பின்னால் சென்றான். அண்ணனுடன் அவன் மட்டுமே உள்ளே போனான். தோட்டி பெயரைக் கேட்டான்: ''சீலா பேபியா?''

''ஆமாம்!''

உறைந்த குரல் ஒன்று அவன் தொண்டையை உடைத்துக் கொண்டு வெளி வந்தது. தோட்டி கதவைத் திறந்தான். உள்ளே, சிறிய — பெரிய பல சவங்கள் இருந்தன. அவன் சீட்டைப் படித்துப் பார்த்தான்; அண்ணன் சடலத்தை எடுத்துக் கொண்டான். அறை ஒரேயடியாகக் குளிர்ந்திருந்தது. அவன் விழிகள் ஒருமிக்கப் பல சவங்களைக் கண்டு உறைந்து விட்டன. இந்த இடத்துக்கு அவன் எத்தனையோ முறைகள் வந்திருக்கிறான். ஆனால் பிறருக்காக. தனக்காகவும் இப்படி வரவேண்டியிருக்கும் என்று அவன் எண்ணிப் பார்த்ததே இல்லை இதுவரையில்.

அண்ணன் சவத்தைத் தூக்கிக் கொண்டு வெளியே வருவதைக் கண்டதும் தம்பிமார்கள் அழத் தொடங்கி விட்டார்கள். தந்தையின் கண்களிலும் நீர் கோத்தது. அவர் முதலில் சென்று குழந்தையின் கண்களைத் திறந்து பார்த்தார். பிறகு ஆபரேஷன் ஆகித் தைத்திருந்த இடத்தை நோக்கினார். அவனும் கூடத் தையலைப் பார்க்கச் சட்டென்று முன்னே வந்தான். தொண்டையிலும் மார்பிலும் இருந்த அறுவை அடையாளத்தைக் கண்டவனுக்குத் தனது கல்லாகி விட்ட விழிகளிலும் யாரோ கூரிய பிளேடைக் கொண்டு கீறிவிட்டாற் போல் தோன்றியது. அடுத்த கணம் விழிகளைப் பொத்துக்கொண்டு கண்ணீர் மடமடவென்று பெருகியது. அப்புறம் பார்வை மங்கி மறைந்துவிட்டது. கண்களுக்கெதிரே நீர்தான் ஆற்றுப் பெருக்காக ஊற்றெடுத்து ஓடியது. அந்த வெள்ளத்தில் குழந்தையைத் தூக்கிக் கொண்டிருந்த அண்ணன், தந்தை, தம்பிமார்கள், உற்றார் உறவினர்கள் அனைவருமே மூழ்கிவிட்டார்கள்.

ஆஸ்பத்திரிக்குப் பின்னால் இருந்த இடுகாட்டுக்குப் போகும்பொழுது யாரும் 'கோவிந்தா' போடவில்லை; 'ராமநாமமே சத்தியம்' என்றும் கூறவில்லை. எல்லோரும் தலை குனிந்த வண்ணம் பேசாமல் நடந்து கொண்டிருந்தனர்.

இடுகாட்டில் ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து வீட்டிலிருந்து கொண்டு வந்திருந்த களைக் கொத்தியைக் கொண்டும், இடுகாட்டிலேயே கேட்டு வாங்கிய மண் வெட்டியைக் கொண்டும் குழி தோண்டலானார்கள். குழி தோண்டும்பொழுது மூன்று தம்பிமார்களும் களைத்துப் போய்விட்டார்கள். மண் கெட்டிப்பட்டிருந்ததனால் சிரமமாகி விட்டது. எனவே அவனே எழுந்து குழி வெட்டலானான். அப்பொழுது அவன் உறவினர்களில் யாரோ தடுத்தார்கள், 'இந்த வேலையை நீ செய்யக் **கூடாது!' என்று! அவனுக்கு அந்தச் சொல்**



வின் பொருள் விளங்கவில்லை. எனவே, சொன்னவரை நிமிர்ந்து பார்த்தாள்.

"தந்தை தன் பிள்ளைக்குக் குழி தோண்டும் வழக்கமில்லை!" என்று விளக்கினார் அந்த உறவினர்.

"நீ உண்மையிலேயே மட்டமான மனிதனடா! நாயினும் கேடு கெட்டவன் நீ!" என்று தன்னைத் தானே தனக்குள் திட்டிக் கொண்டு அவன் அப்பால் நகர்ந்தான். சடலத்தைக் குழிக்குள் போட்டு மண்ணைத் தள்ளி மூடி அதற்கு மேல் கல்லையும் முள்ளையும் போட்டு மறைத்து விட்டு எல்லோரும் வீடு திரும்பினர். அவன் விழிகளில் தேங்கி நின்ற உப்பு நீர்க் கடலில் அவர்கள் மிதந்தனர்.

அவன் பல மாதங்களாகப் பாலை வனத்துச் சுடு மணலில் உருண்டு கொண்டிருந்தான். அதில் அவன் உடல் வெந்து கருகி விட்டது. மணல் உடலில் ஒட்டிக் கொண்டு இத்தனை நாட்களும் உறுத்திக் கொண்டே இருந்தது. மணலின் உறுத்தல் என்றாலே அவனுக்கு வெறுப்பு; கசப்பு. அது அவனுக்கு மரண வேதனையை அளித்தது. ஆனால் அவன் தன் மனைவிக்கும் அதற்கும் யாதொரு தொடர்பும் கிடையாது என்றே எண்ணினான். இருவருக்கும் இடையே, மௌனம் அகழியாகிக் கிடந்தது. அவன் வீட்டுக்கு வந்து உடை மாற்றிக் கொள்ளும் பொழுதெல்லாம் உறுத்தும் மணல் உடலிலிருந்து உதிர்ந்து கொட்டுவதாகப் பிரமையில் உழலுவான்.

"அதோ பாருங்கள்! அந்தக் குழந்தை எப்படிச் சிரிக்கிறது!" சுவரில் மாட்டியிருந்த காலண்டரைக் காட்டிக் கேட்டாள் அவன் மனைவி. அடுத்த கணமே ஏதோ பெரிய தவறு செய்து விட்டவள் போல உதடுகளைக் கடித்துக் கொண்டாள்.

இதற்கிடையில் பல முறைகள் புதிதாகப் பிறந்த குழந்தைகள் பற்றிய ஏதாவது ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருமானால் இருவரும் மணிக் கணக்கில் பேசாமலே இருந்திருக்கின்றனர். மனத்துக்குள்ளேயே அவர்கள் இந்த மாதிரிப் பேச்சுக்களைப் பேசுவதில்லை என்று தீர்மானித்திருந்தார்கள். ஆனால் இன்று மனைவியின் வாயிலிருந்து திடீரென்று இந்தச் சொற்களைக் கேட்டதும் அவன் அவள் முகத்தையே பார்க்கலானான். இருவரும் ஒருவருக்கொருவர் வெகு தொலைவுக்குச் சென்று விட்டது போலப் பட்டது அவனுக்கு. அவர்களுக்கிடையே நாள், மாதம், காலம் என்ற பொழுது பூமியைப் போல விரிந்துவிட்டது போலவும், அதில் மூச்சை முட்டச் செய்யும் புழுதி பறப்பது போலவும், கொளுத்தும் வெய்யில் தகிப்பது போலவும் உணர்ந்தான். அந்தக் காலத்தின் இடைவெளியை அவர்களால் தாண்டவே முடியவில்லை. அல்லது தாண்டும் ஆற்றல்தான் போய் விட்டதோ?

"இதோ பார்!" — அவன் தொண்டையில் நின்ற எச்சிலை எப்படி விழுங்கினானோ, மெதுவாகப் பேசினான். உடையில் ஒட்டிய தூசியைத் தட்டுவது போலச் சொற்கள் உதிர்ந்தன. "அந்தக் குழந்தை என் பெயரைக் கெடுத்து விட்டுச் சென்று விட்டது. நான் கடைசி முறையாக அதைப் பார்த்தபொழுது அதன் உடலில் தையல் போடப் பட்டிருந்தது. என் தலை என்றென்றைக்கும் குனிந்தது குனிந்ததாகி விட்டது. நான் அதை விரும்பவில்லை; வேண்டிப் பெறவில்லை என்பது மெய்தான். இருந்தாலும் அது வந்து விட்டது. வந்ததை விரும்பி ஏற்கவே முயன்றேன். ஆனால் அதற்குள் அது போய்விட்டது."

மனைவி மௌனமாக இருந்தாள். அவள் அவன் சொல்லில் உள்ள உண்மையையும், உண்மையின் தரத்தையும் அறிவாள்.

"இறந்த பின்னரும் நான் அதை அறுத்துப் பார்க்க எழுதிக் கொடுத்தேன். அதற்காகக் குழியும் தோண்டினேன்."

இதைச் சொல்லும்போது அவன் குரல் ஒலி இழந்து விட்டது போல் அவனுக்குத் தோன்றியது. அவன் மனைவி கட்டிலிருந்து எழுந்து உள்ளே அறைக்குள் சென்றுவிட்டாள். மிகுந்திருந்த சொற்கள் அவன் தொண்டையிலேயே சிக்கிவிட்டன. அவன் தனித்து விடப்பட்டான். பூமியைப் போல் விரிந்திருந்த காலத்தின் அளவை ஒரு முனையிலிருந்து மறுமுனைவரை அவன் பார்க்க முயன்றான். அவன் கண்களில் மணல் வந்து விழுந்தாற்போலிருந்தது. அவன் தன்னந் தனியனாக நின்று தவித்துக் கொண்டிருந்தான்.

தமிழாக்கம்: **ரா.வீ.**

நாளைக்குப் பரீட்சை!

"என்னடி, ராதா? வீடு எல்லாம் குப்பையாகக் கிடக்கே, பெருக்க வேண்டாமா? இன்னும் குளிக்கல்லே.....! ஸ்கூலுக்கு நேரமாகிறதே....?"

"என்னம்மா, நாளைக்குப் பொழுது விடிஞ்சா கணக்குப் பரீட்சையாம்! கொஞ்ச நேரம் முக்கியமான கணக்கையெல்லாம் திருப்பிப் பார்க்கிறதுக்குள்ளே இப்படி வேலை வாங்குறியே ?"

"சரி! சரி! படி! ஆமாம்!.... கண்ணன் வரக் காணுமே? யார் போய்ச் சொல்லிட்டு வருவா?"

"கொஞ்சம் இந்தக் கணக்கைப் போட்டுப் பார்த்துட்டு நானே போய் வரேன் !"



"ஏண்டி ராதா ? வந்து....!"

"என்னம்மா இது? நாளைக்குக் கணக்குப் பரீட்சை! முக்கியமான கணக்கையெல்லாம் எடுத்துக் குறிச்சிக்க வேண்டாமா? அதுக்குள்ளே இப்படித் தொணதொணக்கிறியே?"

"இல்லே ராதா! மத்தியானம் கைக்கு என்ன எடுத்து வைக்கட்டும்? தயிர் சாதமா ? டிபனா ? சொல்லி விடேன்.....!"

"எதையாவது வையேன்! தயிர் சாதம் போதுமே! வெய்யில்தான் கொளுத்துகிறதே...!"

"ஏண்டி, ராதா ? நீபாட்டுக்கு இப்படிப் புத்தகத்திலே மூழ்கியிருக்கியே? நம்ம மாலினியை எங்கே காணும்? அவளை ஸ்கூலுக்கு அனுப்ப வேண்டாமா ?"

"ஆமாம்மா....! எங்கே அவள்? ரொம்ப நேரமா காணுமே ?"


"நல்ல பெண்ணுதான் நீ ! உன் பெண்ணுக்கும் பரீட்சைன்னு நல்லாச் சொல்லித் தர நீ இங்கே விழுந்து விழுந்து உனக்குத்தான் பரீட்சை போலப் படிச்சுக்கிட்டு இருக்கே ? அது எங்கே விளையாடப் போயிட்டுதோ ?"

— ரமணி ரங்கநாதன்

பிளேடு தயாரிப்பு முறையில் ஓர் புதிய முன்னேற்றம்

உலகத்திலே சிறந்த பிளேடுகளை தயாரிப்பதில் கையாளப்படும் மிக நவீனமும் ரகசிய தொழில் நுணுக்கமுமான பிரத்யேக முறையான "மல்டி பேஸட் ஹொரண்டிங் ப்ராஸஸ்" மூலமாக, முதன்முறையாக பனாமா ஒரு புதிய சவர பிளேடைத் தயாரித்து அளிக்கிறார்கள். அது மட்டும் அல்ல, உலகத்திலேயே வெகு சுகமாக சவரம் செய்யக் கூடியதும், நீண்ட நாள் நன்கு உழைக்கக்கூடிய பிளேடுகளின் இரு ஓரங்களில் மட்டுமே ரசாயனமுறையில் பூசப்படும் உயர்ரக ரசாயனப் பொருளான "ஹைடென்ஸிடி பாலி டெட்ரா ப்ளூரோ எதிலீன்" என்னும் கலவைப் பொருள் இப்புதிய பிளேடின் இரு ஓரங்களிலும் பனாமா தொழில் நுணுக்க முறை மூலம் பூசப்பட்டு இருக்கிறது.






ஐக்கிய அமெரிக்காவில் நடைபெற்றுள்ள எத்தனையோ பொறி இயல் துறை சாதனைகளுள் மிகப் பெரிய சாதனை அந்நாட்டின் சாலைகளே. உலகிலேயே மிகஅதிகமாக மோட்டார் கார்களைப் பயன்படுத்துபவர்களும் மிக அதிகமாகப் பிரயாணம் செய்பவர்களும் அமெரிக்கர்களே. அருமையான சாலைகள் அங்கு இருப்பதால்தான் இது சாத்தியமாகிறது. நாற்பது லட்சம் மைல் நீளமுள்ள சாலைகள் அமெரிக்காவின் நகரங்களையும் கிராமங்களையும் இணைக்கின்றன.

சாலைகள் அமைக்கப் பணத்தை மாநில அரசுகளும் நகரசபைகளுமே கொடுத்து வந்தன, ஒரு காலத்தில். ஆயின் அமெரிக்காவில் பொருளாதாரச் சீர்குலைவு ஏற்பட்ட ஒரு சமயத்தில் நிலைமையில் அபிவிருத்தி காண ஒரு முக்கியமான வழி, நெடுஞ்சாலைகளை அமைப்பது எனக் கண்டு, மத்திய அரசு ஏராளமான பணத்தை இதற்கு ஒதுக்கியது. இதனால் வேலைவாய்ப்புக்கள் பன்மடங்கு பெருகியதுடன் வர்த்தகப் போக்குவரத்தும் அதிகரித்து, உற்பத்தியும் உயர்ந்தது. இன்று மத்திய, மாநில அரசுகள் அனைத்தும் சேர்ந்து சாலைகள் அமைக்கவும் பராமரிக்கவும் ஆண்டுதோறும் ஆயிரத்து ஐந்நூறு கோடி டாலர்களைச் செலவழிக்கின்றன. இந்தச் செலவில் எண்பது சத விகிதத்தைச் சாலைகளைப் பயன்படுத்துவோரே தந்து விடுகின்றனர்: பெட்ரோல் வரி, மோட்டார் கார்களுக்கான வரி இத்தியாதி மூலமாக.

சாலைகளின் நீளம் நாற்பது லட்சம் மைல்!

பத்துக் கோடி காரோட்டிகள், ஒன்பதரைக் கோடி லாரிகள், கார்கள், பஸ்களை ஓட்டுகின்றனர். இவர்கள் ஆண்டுதோறும் எட்டாயிரம் கோடி காலன் பெட்ரோலைப் பயன்படுத்தித் தொண்ணூற்று ஐயாயிரம் கோடி மைல்கள் பயணப்படுகின்றனர்!

அமெரிக்கச் சாலைகள் மலைகளுடன் போட்டியிட்டுக் கொண்டு உயர்கின்றன; கடலுக்குக் கரை கட்டியது போல் அமைந்துள்ளன; ஏரிகளைச் சுற்றி வளைத்துள்ளன; சதுப்பு நிலங்களை ஊடுருவியுள்ளன: இதனால் போக்குவரத்துத் துறை தன்னிகரற்ற முறையில் அந்நாட்டில் அபிவிருத்தி அடைந்தது.



விஸ்கான்ஸின் மாநிலத்தில் மில்வாங்கி நகரில் தாவர இயல் ஆராய்ச்சி நிலையம் ஒன்றிருக்கிறது. மிட்சல் பூங்கா என்று இதற்குப் பெயர். இப்பூங்காவில் அந்தப் பிரதேசத்தின் சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப மட்டும் தாவரங்கள் வளருகின்றன என்பதில்லை; உலகின் பல பாகங்களில் நிலவும் பலவிதமான சூழ்நிலைகளுக்கும் ஏற்ப இங்கு தாவரங்களை வளர்க்கிறார்கள்! இங்கு தேன்கூடுபோன்ற அமைப்புக் கொண்ட, மூன்று மாபெரும் 'டோம்'கள் உள்ளன. அமைப்பில் ஒவ்வொன்றும் கூம்பு; எழுபது முதல் எண்பது அடிவரை உயரம் கொண்டவை. ஆகவே இங்கு நெடிய மரங்கள்கூட வளர முடியும்.

மூன்று 'டோம்'களில் ஒன்றில் அதிஉஷ்ண சீதோஷ்ண நிலையும் மற்றொன்றில் மிதஉஷ்ண சீதோஷ்ண நிலையும் பிறிதொன்றில் பாலைவனச் சீதோஷ்ண நிலையும் செயற்கையாக ஏற்படுத்தப் பட்டுள்ளன. அந்தந்தச் சீதோஷ்ண நிலைக்கு ஏற்பத் தாவரங்கள் வளர்க்கப்படுகின்றன. உஷ்ணம், காற்றில் கலந்துள்ள நீராவியின் அளவு, காற்றோட்டம், சூரிய ஒளி முதலியன எல்லாமே அந்தந்தக் கூடத்தில் உள்ள தாவரங்களின் தேவைக்கு ஏற்றவாறு கட்டுப்படுத்தப்படுகின்றன.

இயற்கையின் எழிலை நகரின் மையத்தில் ரசிக்கிறார்கள் மில்வாங்கி நகரவாசிகள். இப்படிச் செயற்கையான முறையில் இயற்கை எழிலைக் கண்டுகளிக்கும் அனுபவத்தை-உலகில் வேறு எங்குமே பெற முடியாது.

இந்த அமைப்புக்களைக் கட்டி முடித்த பிறகு ஆரம்ப விழாவின்போது ஸ்ரீமதி லிண்டன் பி. ஜான்ஸன் கூறினார்: ''எழிலை ரசிப்பதையும் பாதுகாப்பதையும் இளம் தலைமுறையினர் வாழ்முறையாகக் கொள்ள வேண்டும்.''



ர.சு.நல்லபெருமாள்

35. இதய வாசல் திறக்குமா?

பல நினைவுகளை எண்ணத்தில் புரள விட்டுக் கொண்டிருந்த முரளிக்குத் தூக்கம் வரவில்லை. படுக்கையி லிருந்து எழுந்து சென்று மாடி வராந்தாவில் கிடந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்தான். நிலவொளி அவன்மீது விழுந்து கொண்டிருந்தது. தெருவில் ஓர் ஆண் நாயும் பெண் நாயும் சண்டையிட்டுக் குரைக்கும் ஒலி கேட்டுக் கொண்டிருந்தது. தூரத்தில் யார் வீட்டிலிருந்தோ கடிகாரம் இரு முறை மணி அடித்து ஓயும் ஓசை காற்றில் மிதந்து வந்தது.

இந்திய எல்லையில் சீனச் சண்டை ஓய்ந்தது பற்றிய மகிழ்ச்சியை நன்கு முரளி அனுபவிக்க முடியாமல் பல சொந்தக் கவலைகள் அவனை அப்பிக் கொண்டிருந்தன. மக்களுக்கு அவன் விடுத்த வேண்டுகோளுக்கு அவன் எதிர் பார்த்த அளவு பலன் இல்லை. கிட்டத் தட்ட இருபது நாட்களாகியும் 'பாரத மணி'க்கு நூற்று முப்பது ரூபாய்தான் கிடைத்திருந்தது. கையிருப்பில் உள்ள நியூஸ் பிரிண்ட் இன்னும் பத்து நாட்களுக்குத்தான் போதுமானதாக இருந்தது. மக்கள் ஒரு நல்ல தரமுள்ள பத்திரிகையைக் காக்க வேண்டும் என்ற அக்கறையும் பொறுப்பும் அற்றிருப்பதை உணர்ந்து மனம் கொதித்தான். கோபம் உள்ளூறக் கொப்பளித்துக் கொண்டிருந்தது.

சினிமாவில் இரண்டாவது காட்சியைப்பார்த்து விட்டுத் திரும்பும் சிலர், தெருவில் உற்சாகத்துடன் பேசிக் கொண்டு சென்றது முரளியின் கவனத்தைக் கவர்ந்தது.


''காதல்காட்சியில் எப்படி? தத்ரூபமாக நடித்திருக்கிறார்கள்இல்லையா?'' என்றான் ஒருவன்.

''ரொம்பப் பிரமாதம். அந்தக் கட்டம்... பார்க்கிலேமரத்தடியிலே கொஞ்சுகிறார்களே...... எப்படி? படா ஷோக்கா இல்லே?'' என்று வேறு ஒருவன் மதிமயங்கிக் கேட்டான்.

''ஆ...! அந்தக் கட்டம், ஏ கிளாஸ். சே....! ஹீரோயினை இறுக அணைத்துக் கொண்டே சாய்ந்தவாறு ஒரு போஸ் கொடுத்தாரே...! நாம் கொடுத்த காசு அந்த ஒரு கட்டத்துக்கே சரியாகப் போய்விட்டது. இரண்டு பேருமே காதல் கட்டங்களில் தங்களை மறந்து தான் நடிக்கிறார்கள்'' என்றான் முதலில் பேசியவன், ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டே.

''அந்தக்கட்டம் கண்ணுக்குள்ளேயே நிற்கிறது. நம்ம ஹீரோ அவளை அணைத்துக் கீழே புல் தரையில் படுக்கவைத்த போது அவள் கண்களைப் பாதி மூடிக் கொண்டே சரிகிறாளே... பிரமாதம்!'' என்று கூறிக் கொண்டே ஒருவன் மற்றொருவன் முதுகில் உற்சாகத்துடன் அடித்தான்.

''அவளும் சளைக்காமல் ஈடு கொடுத்துத்தான் பார்க்கிறாள்... நல்ல கட்டை! அந்தக் கிளப் டான்ஸ் ஒண்ணு போதுமே!'' ... என்று ஒருவன்



விட்ட விரகப் பெருமூச்சு, முரளிக்கு நன்கு கேட்டது.

முரளி முகத்தைச் சுளித்தான். காமக் களியாட்டத்தைப் பார்க்க நள்ளிரவில் இப்படித் துட்டைக் கரியாக்கும் மக்கள் 'பாரத மணி'யின் வளர்ச்சியைப் பற்றி அக்கறை கொள்ளவில்லையே...!

அட கடவுளே...! இந்நாட்டு மக்களை இப்படியேதான் இருக்கும்படி விட்டு விடுவாயா? புனிதமான நாடு, பழம் புகழ் பெற்ற நாடு, பாருக்குள்ளே நல்ல நாடு என்றெல்லாம் பெருமைப்படும் இந்த நாட்டுக்குத்தான் எத்தனை விதமான சோதனைகள்! நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக வெளிநாட்டவரின் படையெடுப்பிலும், பிற நாடுகளிலிருந்து வந்த கலாச்சாரங்களின் ஊடுருவலிலும் நசுங்கிக் கசங்கிப் போராடித் தவித்த பிறகு சுதந்திரம் பெற்றிருக்கும் இந்தப் பொன்னாட்டு மக்கள் இப்போது நா 'மிழந்து, பண்பிழந்து, இழிவான எண்ணங்களைச் சுமந்து, நகைப்புக்கு ஆளாகிச் சீரழியத்தான் வேண்டுமா...? நான் பிறந்த பொன்னாடு என்றைக்குமே இப்படித்தான் இருந்து விடுமா...?

முரளியின் மனம் கதறியது. தெருவில் உற்சாகமாகப் பேசிக் கொண்டு சென்றவர்களின் பேச்சொலி தேய்ந்து ஓய்ந்து, மீண்டும் மௌனம் நிலவியது.

தனிமையும், நல்ல நிலவொளி வீசும் அமைதியான இரவும் அவனுக்கு இதமாக இருந்தன. நிலவைப் பார்த்தவாறே நாற்காலியில் சாய்ந்து கிடந்தான்.

திடீரென்று சிவராமனின் தாயாரைப் பற்றிய நினைவு வந்தது.

சிவராமனைக் கொலை செய்யும்படி தூண்டியவர் வேதமூர்த்தி என்ற செய்தியை முரளி அவனிடம் முதலில் கூறிய போது பட்டம்மாள் திடுக்கிட்டாள்.

''அவரா என் பிள்ளையைக் கொல்லச் சொன்னார்? இந்த வீட்டுக்கே மூன்று தடவை வந்திருக்கிறாரே? என் கையால் அவருக்குச் சோறு போட்டிருக்கிறேனே? அவரா அப்படிச் செய்தார்...?'' என்று புலம்பினாள்.

பாவம், அவளுக்கு என்ன தெரியும்? கட்சியைப் பற்றியோ, கட்சிச் சித்தாந்தங்களைப் பற்றியோ, கட்சிக்காரர்களின் சிந்தனைகளைப் பற்றியோ அவளுக்கு என்ன புரியப் போகிறது! கம்யூனிஸ்ட் கட்சியும் கட்சிச் சித்தாந்தங்களும்தாம் உலகத்தையே ஆட்டிப் படைக்கும் உரிமை பெற்றவை; உலகத்தின் சுபிட்சமே இந்தப் பாதையில்தான் இருக்கிறது; இந்தப் பாதையைச் செப்பனிடும் பணியில் பல உயிர்கள் பலியாகத் தயாராய் இருக்க வேண்டும் என்றெல்லாம் பொதுக் கூட்டங்களில் உணர்ச்சியோடு பேசிக் கரகோஷம் பெறலாம். தாய்ப் பாசத்தால் துடிக்கும் அந்த ஜீவனிடம் இந்த விளக்கமெல்லாம் செல்லுபடியாகுமா?

அவளுடைய வேதனையைக் குறைத்து ஆறுதல் அளிக்கத்தான் முரளி எப்போதும் முயன்று கொண்டிருந்தான். முரளி இரண்டாவது முறை தில்லிக்குப் போய் விட்டுத் திரும்பியதும் பட்டம்மாளைப் பார்க்கச் சென்றபோது, ''வேதமூர்த்தியின் வழக்கு முடிந்து விட்டது. அவருக்குத் தூக்குத் தண்டனை கிடைத்து விட்டது'' என்று உற்சாகத்துடன் சொன்னான்.

பட்டம்மாள் பெருமூச்சு விட்டாள். அவள் கண்கள் கலங்கின.

''என் பிள்ளை போன பிறகு யாருக்கு என்ன தண்டனை கிடைத்து என்ன செய்ய? வேதமூர்த்திக்குத் தூக்குத் தண்டனை கொடுத்து விட்டால், என் பிள்ளை உயிரோடு வந்துவிடப் போகிறானா?'' என்று கூறிப் பெருமூச்சு விட்டாள். ''சாரதாவை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். அவளையும் கொல்லப் பார்த்தானே பாவி''என்று அங்கலாய்த்தாள்.

''இனி பயமில்லை. இப்போதைக்கு அவளை ஏதும் செய்யத் துணிய மாட்டார்கள்.''

''என்னமோ அப்பா. எனக்கு இதெல்லாம் ஒன்றும் புரியவில்லை. எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும். அவ்வளவுதான். நீ சீக்கிரம் ஒரு கல்யாணத்தைப் பண்ணிக் கொள்'' என்றாள் பட்டம்மாள்.

முரளி சிரித்துக் கொண்டே பதில் ஏதும் சொல்லாமல் மழுப்பினான்.

பட்டம்மாள் யாரை மனத்தில் வைத்துக் கொண்டு அவனுடைய திருமணத்தைப் பற்றிக் கூறினாள் என்பதை முரளி புரிந்து கொண்டான். சிவராமனையும், சாரதாவையும் இணைத்தே கண்டு வந்த அவளுடைய கண்கள், இப்போது முரளியைச் சிவராமனின் இடத்தில் இருத்திப் பார்க்கிறது என்பதை உணர்ந்து கொண்டான். சிவராமன் மறைந்த பிறகு, முரளியைத்தான் மகனாக எண்ணி வருகிறாள்.

அவளுடைய ஆசை அது.... பெற்ற மகனை மணக் கோலத்தில் காணும் பாக்கியம் அற்று விட்டாலும், மகனை விடத் தன் மீது அதிக அக்கறை காட்டும் முரளியை அந்தக் கோலத்தில் காணத் துடித்தாள்.

ஆனால் முரளியின் மனம், வைரம் பாய்ந்து இறுகிப் போன பிறகு, அவன் மனக் கதவை எப்படித் தட்டித் திறப்பது ?

சாரதாவின் முயற்சி அனைத்தும் பயனற்றுப் போய் விட்டன.

இரண்டு நாட்களுக்கு முன்பு அவனைச் சந்தித்த சாரதா சொன்னாள்: ''நானும் 'பாரதமணி'யில் ஓர் ஆசிரியராக வேலை பார்க்க முடிவு செய்திருக்கிறேன்.''

இதைக் கேட்டு முரளி ஒரு சோகப் புன்னகையை உதிர்த்தான்.

'' நான் கூப்பிட்டபோது வர மறுத்தாய். நீயாக வலிய வரும்போது, பத்திரிகையே வீழ்ந்துவிடும் நிலையில் இருக்கிறது'' என்றான் முரளி.

''நீங்கள் வீண் பிடிவாதம் பிடிக்கிறீர்கள். மக்களிடமிருந்து நீங்கள் எதிர்பார்க்கும் உதவி உங்களுக்குக் கிடைக்கப் போவதில்லை. இதே வேண்டுகோளை சினிமா நடிகை ஒருத்தி விடுத்திருந்தால், வெற்றி கிட்டியிருக்கும். சமூகத்தில் மனிதர்கள் இப்படி இருக்கும் போது....''— சொல்வதை நிறுத்தி விட்டு முரளியை உற்றுப் பார்த்தாள். அவன் பென்சிலை விரல்களுக்கிடையில் வைத்து உருட்டிக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.

''என்னதான் செய்வதென்று முடிவு செய்திருக்கிறீர்கள்?'' என்று சாரதா கேட்டாள்.


''இன்னும் ஒரு முடிவுக்கும் வரவில்லை '' என்றான்.


''அப்பா, உங்களுக்குத் தேவையான பணம் முழுவதையும் தரத் தயாராயிருக்கிறார். அதைக் கொண்டு 'பாரதமணி'யை நடத்தலாமே !''

'' ஆனால், நான் பணம் வாங்கத் தயாராயில்லையே !''

''பணம் இல்லாமல் பத்திரிகையை எப்படி நடத்துவீர்கள்?''

'' நடத்த முடியாவிட்டால் மூடிவிட்டுப் போகிறேன்.''


ESCORTS ENTERPRISES
Serve National Plans
Save foreign Exchange
Accelerate National Economy to goal of Self-Sufficiency
Escorts Limited NEW DELHI – BOMBAY – CALCUTTA – MADRAS – HYDERABAD
AND PLANTS AT BAHADURGARH (PATIALA) AND FARIDABAD (Haryana)


சின்ன மாமா
பட்டணத்தைப் பார்க்கபோகும்
சின்ன மாமா — இந்தப்
பாப்பாவை மறந்திடாதே
சின்ன மாமா
மிட்டாய் நிறைய வாங்கிவாராய்
சின்ன மாமா — எனக்கு
மிகவும் பிடிக்கும் **நியூட்ரின்** மிட்டாய்
சின்ன மாமா
NCM-ISA TAM
nutrine
நியூட்ரின் கன்பெக்ஷனரி கம்பெனி பிரைவேட் லிமிடெட், சித்தூர் (ஆ.பி.)

''மூடிவிட்டு....?''

''அதைப் பற்றி இப்போதே கவலைப் படுவானேன்?''

''நம் கல்லூரியில் இரண்டு லெக்சரர் போஸ்ட் காலியாகப் போகிறது. நாம் இரண்டு பேரும் அங்கு சேர்ந்து விட லாமே!'' என்றாள் சாரதா.

முரளி இலேசாகச் சிரித்தான். பிறகு சொன்னான்: ''நீ வேண்டுமானால் அந்த வேலையில் சேர். என்னையும் சேர்த்து ஏன் இழுக்கிறாய்?''

''நீங்களும் இருந்தால் எனக்குத் துணையாக இருக்கும்'' என்று கூறி விட்டு ஆவலோடு அவனை உற்றுப் பார்த்தாள்.

''என்னுடைய திசையே வேறு'' என்று வெடுக்கென்று பதில் கூறிவிட்டு எழுந்தான் முரளி. பாவம், சாரதா வின் முகம் கண்டிவிட்டது. அவ ளுடைய முகத்தில் ஏமாற்றத்தால் தோன்றிய சோகத்தின் சாயலை முரளி ஒரு கணம் உற்றுப் பார்த்தான். பிறகு மறுபுறம் திரும்பிக் கொண்டான்.

அவளுடைய முகத்தில் தேங்கி யிருந்த ஏக்கத்தின் சாயல், முரளியின் நினைவில் அடிக்கடி வட்டமிட்டுக்கொண் டிருந்தது. அவளை ஒரு காலத்தில் அவன் தேடிப் போனபோது, அவ ளுடைய இதய வாசல் அடைத்துக் கிடந்தது. இன்று அவள் நாடி வந்த போது, தன்னுடைய இதய வாசலை இழுத்து அடைத்துக் கொண்டான். ஆனால் அடைபட்டுப் போன இதயத் துக்குள் சாரதாவைப் பற்றிய பழைய ஆசைகளும், தவிப்புக்களும் புதைந்து கிடந்தன. பாவம், அவற்றை வெளியே எடுத்து எறிந்துவிட்டு மனக் கதவை அடைத்துக் கொள்ள அவனால் இயல வில்லை. அவளை வெளியே தள்ளிவிட்டு, அவளைப் பற்றிய எண்ணங்களை மட்டுமே இதயத்தில் சுமக்கும் விசித்திரநிலையை எண்ணிச் சிரித்துக் கொண்டான்.

மாடி வராந்தாவில் பல நினைவுகளின் நெரிசலில் சிக்கிய முரளி, ஓய்ந்து போய்த் தூக்கத்தில் ஆழ்ந்தான்.

(அடுத்த இதழில் முடியும்)

சிலந்திக் கூடல்ல; வீடு

தரையினுள் குகை போன்று குழி அமைத்து, அக்குழியின் மேல்புறத்தில் ஒரு கதவுகூடச் செய்து வாயிலை மூடித் தன் வாழ்க்கையை நடத்துவதால் தான் இதற்குத் ''தாழ் கதவுச் சிலந்தி'' என்று பெயர் வந்தது.

மதுரைக்குப் பதின்மூன்று மைல்களுக்கு அப்பா லுள்ள ''பிராணிகள் உலகம்'' என்று சொல்லக் கூடிய அளவுக்குப் பிராணிகள் நிறைந்து காணப்படும் அழகர்மலைக் காட்டில் இச் சிலந்திகளின் கூடுகள் மிகுதியாக உள்ளன. ஆனால் அக்கூடுகளை நாம் கண்டுபிடிப்பது இலகுவல்ல. செடிகளின் ஊடேயும் பாறைகளுக்கு அடியில் சிறு இடைவெளிப் பகுதி களிலும் கூடுகள் கட்டப்பட்டிருப்பதே காரணம். மழை நீரில் எளிதில் கரையாத கெட்டியான மண் ணுள்ள இடத்திலும், மழை பெய்தால் நீர் வந்து தங்காத ஏற்றமான இடத்திலும் இச்சிலந்தி கூட் டினைக் கட்டுகிறது.

தாழ்கதவுச் சிலந்தியின் தாடையில் ஒரு வகை யான பல் வரிசை உள்ளது. இதன் உதவியால்தான் தரையில் மண்ணைத் தோண்டித் தன் கூட்டை அமைக்கிறது. மழைக் காலத்தில் தான் அக்கூட்டைக் கட்டுகிறது. மழை பெய்து தரை ஈரமாகிவிடுவதால் மண்ணைத் தோண்ட உதவியாக இருக்கும். தான் தோண்டிய மண்ணை அது முன்னெச்சரிக்கையாகச் சில அடிகளுக்கு அப்பால் கொண்டு போய்ப் போடு கிறது. மண்ணைக் குழியின் வாயிலருகே வைத் திருந்தால் அங்கு ஒரு கூடு உள்ளதை எதிரிகள் அறிந்து கொள்ளக்கூடுமல்லவா?

தரையில் குழியைத் தோண்டுவதுடன் இதன் வேலை முடிந்து விடுவதில்லை. அக் குழியின் உட் புறச் சுவரைத் தான் சுரக்கும் ஒருவகைப் பட்டு போன்ற நூலினால் போர்த்துகின்றது. இவ்வாறு போர்த்தப்படுவதால் குழியின் உட்புறச் சுவர் சரிந்து கூட்டினுள் விழுவதில்லை. கூட்டினுள் நீர் கசிவ தில்லை. வட்ட வடிவமான குழியின் வாயிலை மூடு வதற்கு ஒரு கதவை அது தயார் செய்கிறது. இம் மூடியும் பட்டு நூலினால் செய்யப்படுகிறது. சற்றுத் தடிப்பாகவும் கடினமாகவும் நடுப்பாகத்தில் மண் துகள்களுடனும் அமைந்துள்ளது. இம் மூடியின் நடுவே இரண்டு சிறிய துவாரங்கள் காணப்படும். தாழ்கதவுச் சிலந்தி தன் கூட்டினுள் சென்றவுடன் மூடியில் உள்ள இத்துவாரங்களினுள் தன் கால்களை விட்டு மூடியை இழுத்து நன்கு இறுக்கமாக வாயிலை அடைத்துக் கொள்ளும். மேலும் சுவாசிப்பதற்கும் இந்த ஓட்டைகள் உதவும்.

இது இரவில்தான் பெரும்பாலும் தன் இரையைத் தேடும். மூடியைச் சற்று நீக்கி அந்த இடை வெளியின் வழியாக வெளிப்புறத்தில் ஏதாவது பூச்சிகள் தென்படுகிறதா என்று சுற்று முற்றும் பார்க்கும். எதேச்சையாக ஏதாவது சிறிய பூச்சி இதன் கூட்டின் பக்கமாக வரத் தொடங்கினால் உடன் தன் தலையை உள்ளுக்கிழுத்து மூடியின் அடிப்புறத்தில் தங்கியிருக்கும். கூட்டின் அண்மை யில் பூச்சி வர வர அதன் காலடி ஓசையைத் தாழ் கதவுச் சிலந்தியானது தனது கூட்டினுள்ளே இருந்து கொண்டே தரையின் அதிர்வு மூலமாகக் கேட்டறியும். பூச்சி கூட்டை நெருங்கியதும் இமைக் கும் நேரத்தில் வெளிவந்து அப்பூச்சியைப் பிடித்துத் தன் கூட்டினுள் கொண்டுவந்து இரையாக்கிவிடும்.

தாழ்கதவுச் சிலந்தி இரை தேட வெளிச்செல்லும் போது தன் கூட்டின் வாயிலைச் சிறு கற்களாலும் இலை தழைகளாலும் மூடி மறைத்துச் செல்லும்.

- அந்தோனி பேபிஸ்





ஒரு நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை

'தமிழில்தான் பேசுவேன்' என்று கூறி முதன் முதலில், சென்னை பல்கலைக் கழகச் சொற்பொழிவுகளைத் தமிழில் ஆற்றிய பெருமை பேராசிரியர் அ. சீநிவாச ராகவன் அவர்களையே சாரும். அது பல்கலைக் கழகத்தின் வரலாறு கண்டிராத புதுமை.

சென்னை பல்கலைக் கழகத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு பேராசிரியர் அவர்கள் நிகழ்த்திய ''கல்கி'' நினைவுச் சொற்பொழிவுகள் தாம் மேற்கூறிய தலைப்பில் நூல் வடிவம் பெற்றுள்ளன.

ஆசிரியர் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்டுள்ள காலம், சுவாமி ராமலிங்கப் பெருமான் பிறப்பிலிருந்து மகாகவி சுப்பிரமணிய பாரதியார் மறைவு வரையில். இது ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு ஆகிறது. இந்தக் காலவரையறைக்குள் வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் சிலரைப் பற்றி ஆய்வுரை வழங்கியிருக்கிறார், ஆசிரியர். இந்த ஒரு நூற்றாண்டுக் காலத்தில் இருந்த தமிழ்ப் புலவர்கள் அனைவரையும் பற்றிக் கூறுவதானால் கட்டுரை மிகவும் விரிந்துவிடும் என்ற காரணத்தோடு ஆசிரியர் வேறொரு காரணமும் காட்டியிருக்கிறார். பழைய மரபையொட்டிப் பாடிய புலவர்களை விடுத்து, சென்ற நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து தமிழைப் புதுப் பாதைக்குத் திருப்பிய ஒருசில கவிஞர்களைப் பற்றி மட்டுமே கூற விரும்புவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், ஆங்கில ஆட்சியாளர்களின் ஆதிக்கத்தின் காரணமாக, நம் நாட்டு வரலாறு, பண்பாடு-நாகரிகம், மக்களின் இலட்சியங்கள், மனப்பான்மை, விருப்பு வெறுப்புக்கள், பழக்கங்கள் எல்லாமே அடியோடு மாறத் தொடங்கின விதத்தை ஆசிரியர் தக்க சான்றுகளோடு விவரித்திருக்கிறார்; அந்த மாற்றம் நம் நாட்டை எப்படிப் பாதித்தது என்பதையும் விளக்கியிருக்கிறார்.

இந்தப் பலவீனமான நிலையில், வெளி நாட்டினரின் சமயப் பிரசாரம் வலுப் பெற்று, மக்களுக்கு வழிவழியாக வந்த தங்கள் வாழ்க்கை முறைகளில் இருந்த நம்பிக்கையை மெல்லச் சிதைத்து வந்தது. அந்த நம்பிக்கை அடியோடு சிதைந்து விடாமல் காப்பாற்ற ஆதரவாயிருந்தவை தெய்வ நம்பிக்கையும் பக்தியும்தாம்.

மேற்படி தெய்வ நம்பிக்கையும், பக்தியும் சிதைந்து போகாமல் காக்க உறுதுணையாயிருந்தவர்கள் இராமலிங்க அடிகளாரும், கோபாலகிருஷ்ண பாரதியும் ஆவர் என்பதை ஆசிரியரின் ஆய்வுரைகள் நன்கு விளக்கம் தருகின்றன.

ஆங்கில அறிவின் துணை கொண்டு தமிழ் இலக்கியத்துக்குத் தொண்டாற்றியவர்களின் வரிசையில் திரு எச். ஏ. கிருஷ்ண பிள்ளை, மாயூரம் வேதநாயகம் பிள்ளை, பேராசிரியர் சுந்தரம் பிள்ளை ஆகியவர்களின் இலக்கியப் பணியின் சிறப்பையும், அவர்களுக்குத் தூண்டுகோலாயிருந்த அந்தக் கால நிலையையும் ஆசிரியர் பல மேற்கோள்களுடன் விரிவாக விளக்கியிருக்கிறார்.

இறுதியாக மகா கவி சுப்பிரமணிய பாரதியாரைப் பற்றிக் கூறப் புகும் ஆசிரியர், விடுதலை வேட்கை மிகுந்த அவருடைய பாடல்களில் உரிமைக் குரல் கொடுக்கும் புத்தம் புதுப் பாணியின் சிறப்பை எடுத்துக் காட்டி, பாரதியாரின் கவி உள்ளத்தையே நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

தமிழ் இலக்கியத்தில் ஆர்வமுள்ளவர்கள் கருத்தூன்றிப் படித்துப் பார்க்க வேண்டிய நல்லதோர் ஆராய்ச்சி நூல் இது.

விற்பனை உரிமை: மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோயமுத்தூர்-1. விலை: ரூ. 4.00.

குஜராத்திச் சிறுகதைகள்

உலகம் பலவிதம் என்பார்கள். கதை உலகமோ பலப்பல விதம். பாரதத்தின் மொழிகள் அனைத்தும் சிறுகதைப் படைப்பில் ஒன்றை ஒன்று எப்படிப் போட்டி போட்டுக் கொண்டு முன்னேற முயல்கின்றன! இதைக் காணவே, மொழிபெயர்ப்புகள் தேவை என்பதை ஒவ்வொரு மொழியும் உணர்ந்து அத்துறையில் முனைந்துள்ளது.

குஜராத்தியில் சிறுகதைகள் எப்படி இலக்கியவளம் கண்டுள்ளன என்பதைக் கோடி காட்டும் வகையில் ஸ்ரீ டி. கே. ஜயராமன் பதினைந்து கதைகளைத் தேர்ந்தெடுத்துத் தமிழாக்கித் தந்துள்ளார்.

பழைய - புதிய எழுத்தாளர்களின் கதைகள் வகைக்கு ஒன்றாக இந்நூலில் இடம் பெற்றுள்ளன. உத்தியில் சிறந்தவை, கதை அம்சத்தில் சிறந்தவை, கட்டுக்கோப்பில் உயர்ந்தவை என்று ஒவ்வொன்றையும் கூறலாம்.

மதுராயின் 'வைத்துக் கொள்ளுங்களேன்' வாசகர்களையே கதாநாயகனாக்கி விந்தை புரிகிறது. மலயாநில் இளக் கவர்ச்சியை நிலைக்களனாகக் கொண்டு, மனித மனத்தைப் படம் பிடித்துக் காட்டும் அழகை, அவர் கதை முடிவில் வைக்கும் முத்தாய்ப்பைக் கொண்டு காணலாம்:

'சித்திரக்காரனுக்கு அங்கே சித்திரிக்க மூன்று பாத்திரங்கள். ஒன்று காளி தேவி, இரண்டாவது ஒரு மாயக்காரி, மூன்றாவதாக ஒரு முட்டாள்.'

'மண்ணும் விண்ணும்' கதையில் கைதேர்ந்த எழுத்தாளரான தூமகேது, சொர்க்கமாக இருந்த மண்ணுலகம் நாசமான கதையைக் கூறி, 'இனி எப்போது மண் விண்ணாகும்?' என்று ஏங்க வைக்கிறார்.


'இன்பத்திலும் துன்பத்திலும்' என்னும் கதையில் ஸ்ரீ பன்னாலால் படேல் ஒரு குருடியையும் நொண்டியையும் இணைத்து இன்பம் காட்டுவது போல் காட்டி முடிவில் வாசகர்களையே துன்பப் பெருமூச்சு விடுமாறு செய்து விடுகிறார்.

இப்படியாக ஒவ்வொரு கதையுமே ஒவ்வொரு வகையில் உள்ளத்தைத் தொடுவதாக அமைந்துள்ளது. டி. கே. ஜயராமனின் தெள்ளிய தமிழ் நடை சுவை கூட்டி மெருகூட்டுகிறது.

பிரசுரம்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4. விலை: ரூ. 3.50.



எல்லா பிரபல கடைகளிலும் கிடைக்கும்




இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் ஹிரோஷிமா மீது போடப்பட்ட அணுகுண்டின் பெயர் 'சின்னப் பையன்' (little boy). நாகசாகியின் மீது போடப்பட்ட குண்டின் பெயர் 'குண்டு மனிதன்' (fat man).

இதில் 'சின்னப் பையன்' கொன்றது 68 ஆயிரம் பேர்; 'குண்டு மனிதன்' கொன்றது 35 ஆயிரம் பேர்.

அழுகைக்குக் காரணம்!

வெளியூரைச் சேர்ந்த இருவர் கல்கத்தாவுக்கு முதல் முறையாக வந்தனர். இந்திய உணவுச்சாலை ஒன்றினுள் அவர்கள் இருவரும் நுழைந்தனர். சர்வர் அவர்கள் இருவருக்கும் உணவு கொண்டு வந்து வைத்தான். கூடவே இரண்டு தட்டுகளில் பச்சைமிளகாயையும் பக்கத்தில் வைத்தான்.

அவர்கள் இருவரும் பச்சைமிளகாயைப் பார்த்ததே கிடையாது. ஒருவன் பச்சைமிளகாயை ஒரு பிடி எடுத்து வாயில் போட்டுக் கொண்டான். உடனே அவனுடைய கண்களிலிருந்து நீர் கொட்ட ஆரம்பித்தது.



"என்ன ஆயிற்று உனக்கு? ஏன் அழுகிறாய்?" என்று மற்றவன் கேட்டான்.

பச்சைமிளகாயைத் தின்றவன் வெளியில் ஒன்றும் காட்டிக் கொள்ள விரும்பாமல், "தூக்கிலிடப்பட்ட என் தந்தையை நினைத்துக் கொண்டேன். உடனே அழுகை வந்துவிட்டது!" என்றான்.

மற்றவன் இதைக்கேட்டு அனுதாபப்பட்டான். பின்னர் அவன் ஒரு பிடி பச்சைமிளகாயை எடுத்து வாயில் போட்டுக் கொண்டான். அவ்வளவுதான். அவனும் அழ ஆரம்பித்து விட்டான்.

இப்பொழுது முதல் மனிதனுக்கு வியப்புக் கொண்டே அழுகைக்குக் காரணம் கேட்டான்.

மற்றவன் பதில் சொன்னான்: "உன் தந்தையை தூக்கிலிட்டபோதே, உன்னையும் தூக்கில் போடாமல் இருந்தனரே என்பதற்காக அழுகிறேன்!"

"ஸ்மைல் வித் ஜோக்ஸ்"லிருந்து - காழி ஜோயா

யாரோ : டைம் என்ன சார்?

ஸ்ரீரோ : லேட்டஸ்ட் மாடல் டிடோனி வாட்ச் டைம் இப்பொழுது ஏழு மணி எட்டு நிமிஷம் ஒன்பது விநாடி!

- கவிதா



"அப்பா! அப்பா! அந்த காகா தாப்பா?"

"ச்சீ! என்ன கெட்ட வழக்கம் இது. அந்த காசுக்கும் பத்து காசுக்கும் இப்படித்தான் தொந்தரவு செய்வார்களா?"

"நானும் அப்படித் தாப்பா சந்தேகப்பட்டேன், ஒரு ரூபாயோ ரெண்டு ரூபாயோ தந்துடு".

- தமல்

நாய்க்குட்டி பெரிதானால் நாய் ஆகிறது. பன்றிக்குட்டி பன்றி ஆகிறது. கழுதைக்



குட்டி கழுதையாகிறது. ஆனால் மனிதர்களில்தான் பலர் பெரியவர்கள் ஆகும் பொழுது நாய், பன்றி கழுதைகளாக ஆகிறார்கள்! - ரா. வீ.

ஜப்பானில் முன்பு எப்பொழுதும் இல்லாத அதிசயம் ஒன்று நிகழ விருக்கிறது. முந்தைநாட் கலைமுறையிலான வழி முறையை விட்டு ஜப்பானிய அரசர் ஹிரோஹிட்டோவும் ராணி நாகாகோவும் பிரிட்டன், பெல்ஜியம், மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளுக்குச் சமீபத்தில் விஜயம் செய்ய விருக்கிறார்கள். அரசோச்சும் ஜப்பானிய மன்னர் தம் நாட்டை விட்டு அயல் நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்வது இதுவே முதல் தடவை.

- பி. எம். எம்.



சிறு சேமிப்புகளுக்கு பெருகிய வட்டி பெறுங்கள்

மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட பெருகிய வட்டி விகிதம் தற்சமயம் அமுலிலிருக்கிறது


சேமிக்க இதுபோன்ற சந்தர்ப்பம் வேறு கிடைக்காது

	பழைய விகிதம் (ஆ. ஒ.)	புது விகிதம் (ஆ. ஒ.)
அஞ்சலக சேவிங்க்ஸ் பாங்க்		
1) தனி, கூட்டு, மற்றும் ப்ராவிடண்ட் ஃபண்ட் கணக்கு	3½%	4%
2) வருட முழுதும் குறைந்தபட்சம் ரூ. 100 இருப்பில் இருந்தால்	4%	4¼%
3) 2 வருடங்களுக்கான தேக்க டெபாசிட்	4¼%	4½%
அஞ்சலக நீண்டகால டெபாசிட்	5½%—6¼%	6%—7¼%
அஞ்சலக ரெகரிங் டெபாசிட்	6¼%	6¾%
7-வருட தேசிய சேமிப்புப் பத்திரம் (4-வது வெளியீடு)	7¼%	7½%

விவரங்களுக்கு அண்மையிலுள்ள அஞ்சலகத்தில் விசாரியுங்கள்; அல்லது உங்கள் மாநிலத்தின் தேசிய சேமிப்பு நிறுவனத்தின் பிராந்திய இயக்குனருக்கு எழுதுங்கள்.

தேசிய சேமிப்பு நிறுவனம்

davp 70/644



❀ சமீபத்தில் நம் முதலமைச்சர் அவர்கள், திரு ராஜாஜியும், திரு காமராஜ் அவர்களும் ராணுவ ஆட்சியைக் கொண்டு வர முயற்சி செய்கிறார்கள் என்று தேர்தல் பொதுக்கூட்டங்களில் பேசினார். இது எவ்வளவு தூரம் மக்களை ஏமாற்றுவதற்காகப் பேசப்படும் பேச்சு என்பதை நினைக்கும்போது சிரிப்புத் தான் வருகின்றது. நம் மதிப்புக்குரிய ராஜாஜி அவர்கள், இந்நாட்டில் கம்யூனிஸமும், சர்வாதிகாரமும் ஏற்பட்டுவிடக்கூடாது என்ற காரணத்துக்காகவும், ஜனநாயகம் தழைக்க வேண்டும் என்பதற்காகவும் பல ஆண்டுகளாகப் பாடுபட்டு வருகிறார். தேர்தல் பிரசாரங்களில் நம் மதிப்புக்குரிய முதல் அமைச்சர் நாட்டிற்கு நாங்கள் என்னென்ன சாதித்தோம், என்னென்ன சாதிக்கப் போகி றோம் என்று கூறி ஆதரவைப் பெற முயற்சி செய்வதுதான் அரசியல் நாகரிகமாகும்.

தேவகோட்டை
8–3–71 ப.லலிதா நாராயண்

❀ தமிழ்த் தினத்தாள் ஒன்றில் இராஜாஜி அவர்களையும், திரு காமராஜ் அவர்களையும் 'கார்ட்டூன்' சித்திரமாக வரைந்து, ''பிராமணர் சமூகத்தையும், நாடார் சமூகத்தையும் தூண்டிவிட்டுப் படுதோல்வி அடைந்தனர்'' என்று எழுதப்பட்டுள்ளது! இதைப் பார்க்கையில் நாட்டின் நலன் நோக்கும் நல்லோர் மனம் எவ்வளவு புண்பட்டுக் கொதித்திருக்கும்? பத்திரிகா தர்மத்துக்கு இது உகந்தது தானா? ஜாதி – தீண்டாமை – உணர்ச்சிகளுக்கு திரு ராஜாஜி அவர்கள் 'தூபம்' போட்டு வித்திட்டவரா அல்லது அவற்றை ஒழிக்கத் தம்மையே பணயம் வைத்தவரா? வரலாறு சொல்லாதா?

இன்றல்ல, சுமார் ஐம்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்பு அன்றிருந்த பிராமணக் கட்டுத் திட்டங்களையெல்லாம் துச்சமாக மதித்துச் 'சமபந்தி போஜன' முறைக்குத் தாமே ஓர் எடுத்துக்காட்டாய் சிதம்பரத்தில் நந்தனார் குலத்தில் பிறந்த, சிறந்த வேதாந்தியும், துறவியுமான சுவாமி சகஜானந்தரைத் தம் இல்லத்துக்கு அழைத்துத் தம்முடனே உணவருந்த வைத்தார். (அன்றைய நாளில் வேறு ஜாதியார் பார்த்திருக்கப் பிராமணர்கள் தண்ணீரும் அருந்த மாட்டார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.)

சேலம் நகரத் தந்தையாக இவர் இருந்த போது ஒரு ஹரிஜனச் சிறுவன் அக்கிரகாரத்துக்குள்ளே வேலைக்கு அமர்த்தப்பட்டான். உயர்நிலைப் பள்ளி விடுதியில் ஹரிஜனப் பையனைச் சமையல் வேலைக்கு அமர்த்தி, அதனால் ஏற்பட்ட எதிர்ப்புக் கிளர்ச்சிக்குச் சிறிதும் சலங்காமல், ''சம்மதமில்லா ஜாதி இந்துக்கள் விடுதியைவிட்டு வெளியேறட்டும்'' என்று கண்டித்தவர் திரு ராஜாஜி.

இப்புரட்சியின் பயனாக வைதீக பிராமணர்கள் அவரது இல்லத்தில் நடைபெற வேண்டிய வைதிகக் காரியங்களுக்கு யாரும் செல்லாதவாறு கட்டுப்பாடு செய்தனர். தம் தந்தை இறந்து போக, அவருக்குச் செய்ய வேண்டிய இறுதிச் சடங்குகளுக்குக்கூட யாரும் வராத போதும் கலங்காமல் தாமே சடங்குகளைச் செய்து முடித்தவர் ராஜாஜி.

சேலத்தில் அவர் ஸ்தாபித்த ஆசிரமத்தில் பார்ப்பனர்களும், பறையர்களும் சேர்ந்து உட்கார்ந்து சாப்பிடுவதனால்தான் மழை பெய்யவில்லை என்று சிலர் கூறிய அவதூறு களையும் பொறுத்தார் ராஜாஜி.

தமிழகப் பிரதமராக இருந்த நேரத்தில் இந்தியத் துணைக் கண்டமே வியக்க, மதுரை மீனாட்சி கோயிலையும், பழநி ஆலயத்தையும் ஹரிஜனங்களுக்குத் திறந்து, அதற்கான சட்டத்தையும் இயற்றியவர் திரு ராஜாஜி.

ஆகவே, ஜாதி வேற்றுமையை ஒழிப்பதிலும் தீண்டாமையை ஒழிப்பதிலும் இந்தியாவுக்கே வழிகாட்டியாக இருந்து வந்துள்ளதை இன்றைய சந்தர்ப்பவாதப் போக்கு, இருட்டடிப்பு செய்து மறைக்கலாம். ஆனால் வரலாற்றை அழிக்க முடியுமா?

இப்படிப்பட்ட சத்திய உருவத்தையா இன்று வெறும் அரசியல் ஆதிக்கத்துக்காக ஏசுகின்றனர், ஏளனம் செய்கின்றனர்?


அம்மையார்குப்பம்
14–3–71 பூம. ஏகாம்பரம்

சட்ட மன்றத் தொகுதி		வாக்காளர்கள் எண்ணிக்கை
திருவல்லிக்கேணி	...	1,04,278
சைதாப்பேட்டை	...	1,77,248
ஆயிரம்விளக்கு	...	1,08,614
எழும்பூர்	...	1,16,206
தி. நகர்	...	1,21,232
மயிலாப்பூர்	...	1,40,082
தென்சென்னை சட்டமன்ற வாக்காளர்கள்	மொத்தம்:	7,67,660
தென்சென்னை பாராளுமன்ற வாக்காளர்கள் எண்ணிக்கை:		7,41,660
	வித்தியாசம்:	26,000

தென்சென்னையிலுள்ள ஆறு சட்டமன்றத் தொகுதிகளின் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கைக்கும், தென்சென்னைப் பாராளுமன்ற மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கைக்கும் உள்ள வித்தியாசம் 26,000. எப்படி வந்தது இது? புரிய வைப்பார்களா?

சென்னை — 34
16–3–71 ருக்மிணி பாலகிருஷ்ணன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam



REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon